இதழ் 15 ஐப்பசி 2021 £4

# சிறுகதை மஞ்சரி

ஆசிரியர்: மு.தயாளன்
மாதஇதழ்




வளர்ந்த வளரும் படைப்பாளிகளுக்கான களம்

# பங்காளர்கள்



சி. சிறீரங்கன்
பக்கம் 4
இலங்கை



கவின்மகள்
பக்கம் 6
இலங்கை



பிரசாந்தி ஜெயபாலன்
பக்கம் 8
இலங்கை



சோ. நளாயினி
பக்கம் 12
இலங்கை




தீபதிலகை
பக்கம் 15
லண்டன்



வசந்ததீபன்
பக்கம் 20
இந்தியா



ஆர்த்திகா
பக்கம் 30
இலங்கை



செ. கணேசலிங்கம்
பக்கம் 30
இலங்கை



தர்சித்
பக்கம் 32
இலங்கை



சம்பூர் சமரன்
பக்கம் 35
இலங்கை



அஸ்வினி
பக்கம் 35
இலங்கை



பேராசிரியர் செ. யோகராசா
பக்கம் 38
இலங்கை



நந்தினி சேவியர்
பக்கம் 40
இலங்கை

# உள்ளடக்கம்...


**2** **உலக அரசியலூடாக ஒரு பயணம்**
மு. தயாளன்

**3** **செந்தழல் தன்னில் வேகினையோ?**
மு. தயாளன்

**4** **திக்கற்றவர்கள்** - சி. சிறீரங்கன்– இலங்கை

**6** **புத்தகப்பை-** கவின்மகள் – இலங்கை

**8** **அவர்களும்.........-** பிரசாந்தி ஜெயபாலன் – இலங்கை

**12** **வஞ்சிக்கப்பட்ட..-** சோ. நளாயினி – இலங்கை

**15** **சின்ராசு மாமா-** தீபதிலகை – இலங்கை

**20** **சிதிலம்** - இந்தியா

**24** **புரிதல்** - ஆர்த்திகா – இலங்கை

**30** **கொடுமைகள் ........- சிறப்புச் சிறுகதை**
செ. கணேசலிங்கம் – இலங்கை

**32** **அவள்** - தர்சித் – இலங்கை

**35** **அந்த இரவு** - சம்பூர் சமரன் – இலங்கை

**38** **மஞ்சரி 14 ஒரு பார்வை**
பேராசிரியர் செ. யோகராசா –இலங்கை

**40** **எழுத்தின் அனுபவம்....**
நந்தினி சேவியர் – இலங்கை


எமக்கு வரும் படைப்புகளைத் திருத்தும் உரிமை மஞ்சரி ஆசிரியருக்கு உண்டு என்பதை அன்போடு தெரிவிக்கிறோம். அத்தோடு கதைகளில் வரும் கருத்துகளுக்கு எழுதிய ஆசிரியரே பொறுப்பாவார்.

**சிறுகதை மஞ்சரி 14 இன் சிறந்த மூன்று சிறுகதைகள்**

1. மூளைச்சலவை - சூசை எட்வேட்
2. மனதின் ஓசை - விமல் பரம்
3. இனவாதம் - ந. ஜெயரூபலிங்கம்


**நன்றிகள்..** பங்காளர்களுக்கும் இச் சிறுகதை மஞ்சரியை ஒப்பு நோக்கித் தந்த திருமதி ஆர்த்தி துவாரகனுக்கும் எனது மனைவி சாருகேசிக்கும் அட்டையை வடிவமைத்த என் மகன் ரமணனுக்கும் சித்திரங்களை அழகுற வரைந்த கைலாசநாதருக்கும் அட்டைக்கான படத்தை வரைந்த டிசாந்தினிக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.


**1000 பேரை இணைப்போம்......**

**தாய்மண்ணில் உள்ள பாடசாலைகளுக்கு மஞ்சரியை அனுப்புவதற்கு புலம்பெயர் மண்ணிலுள்ளவர்கள் பங்கு பெறலாம்.**

லண்டன்: ஒரு பாடசாலை ஒருவருடம் **£5.00**
ஐரோப்பா: ஒரு பாடசாலை ஒரு வருடம் **6 Euro**
மற்றைய நாடுகள்: ஒரு பாடசாலை ஒரு வருடம் **$10**


அட்டை வடிவமைப்பு: ரமணன்
அட்டைப்பட ஓவியம் டிசாந்தினி

**பிரதம ஆசிரியர்** : மு. தயாளன்
**உதவி ஆசிரியர்கள்** : வி.மைக்கல் கொலின், செல்வி த. சரண்யா
**ஆலோசகர்கள்** : பேராசிரியர் செ. யோகராசா, Dr P. இராசையா, நந்தினி சேவியர்



**தொடர்பு முகவரி:**
**Sirukathai manjari, 14 Brands Road, Berkshire SL3 8QP,UK**
sirukathai1@gmail.com, +447505455811
Sirukathaimanjari 91, barathi street, Trincomalee, Srilanka
sirukathai1@gmail.com, +94765554649



**சந்தா விபரம்:**
**Srilanka:** 800Rs/Year
Bank detail : Mrs Thanabalasingam, Commercial bank, Trinco branch, 8370042817
England £20/Year
Other countries: $80/year
Bank details: M. Natkunathayalan, Barclays,
Sort code 20-37-15, A/C Number 60389307
IBAN : GB11BUKB20371560389307 SWIFTBIC BUKBGB22

**விநியோகம்:**
யாழ்ப்பாணம்: குலசிங்கம் வசீகரன் , +94 773788795
மட்டக்களப்பு: வி.மைக்கல் கொலின் +94 774338878
திருகோணமலை: த. சரண்யா, +94765554649


**வாசிப்பதனால் மனிதன்**
**பூரண மனிதனாகிறான்**



# உலக அரசியலூடாக ஒரு பயணம்

உலக அரசியல் வேகமாகப் பல மாற்றங்களை அடைந்து வருகிறது. ஆப்கானிஸ்தானை விட்டு அமெரிக்காவின் விலகலும் விலகிய ஒரு வாரத்திற்குள் தலிபான்கள் நாட்டைத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தமையும் அவசரஅவசரமாக சீனா ஆப்கானிஸ்தானுக்கு ஆதரவு வெளியிட்டமையும் தாமே நடந்தவை என்று சொல்லிவிட முடியாது.

சீனாவின் ஒவ்வொரு நடவடிக்கையும் நகர்வும் பல ஐயங்களை உலக அரசியலில் தோற்றியுள்ளது. தன்னைத்தானே உலக நாடுகளின் பொலிசாகக் கருதிக் காய் நகர்த்திக் கொண்டிருந்த அமெரிக்கா இன்று தளம்பத் தொடங்கியுள்ளமை வியப்பை உருவாக்குகிறது.

சீனா தன்னை உலக வல்லரசாக மாற்றுவதற்காக ஆசியாவில் இந்தியாவின் ஆளுமையை குறைப்பதற்கான வேலைத்திட்டமாக இந்தியாவைச் சுற்றவரவுள்ள நாடுகளைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் செயற்பாடுகளுக்காக அபிவிருத்தி என்ற பெயரில் ஏராளமான பணத்தை கடன் என்ற பெயரில் செலவிட்டு வருகிறது.

இலங்கை பாகிஸ்தான், நேபாளம், பங்களாதேஸ், மாலை தீவுகள் ஆகியவை பெரும்பாலும் தங்கள் ஸ்திரமற்ற அரசியலாலும் தூர நோக்கற்ற அரசியல் தலைவர்களாலும் சீனாவின் வலையுள் விழுந்துவிட்டமை தெளிவாகத் தெரிகிறது.

இலங்கையில் தென்பகுதியில் தன் ஆளுமையை போட்சிற்றி மூலமாக திடப்படுத்தியபின் தற்போது வடபகுதியையும் தீவுப்பகுதிகளில் தன்னை ஸ்திரப்படுத்துவதன் மூலம் இந்தியாவிற்கு மிக அருகாமையில் குடிவந்துவிட்ட கோலத்தையும் நாம் பார்த்துக் கொண்டிருக்கத்தான் வேண்டும்.


இப்படியான திட்மிட்ட செயற்பாடுகளில் ஒன்றுதான் தமிழர்களின் விடுதலைப் போராட்டதை முறியடிக்க இலங்கை அரசுக்கு சீனா கை கொடுத்தமையாகும். இதனை சிங்களத் தலைமைகளும் தமிழ்த் தலைமைகளும் இந்தியத் தலைமைகளும் புரிந்து கொள்ளாமையால் இன்று நிலைமை கைமீறி நிற்கிறது.

வைரஸ் பரவலின் தாக்கத்தால் இலங்கையின் பொருளாதாரம் கற்பனை பண்ண முடியாதளவுக்கு வீழ்ச்சி கண்டுள்ளது. இதனை நன்கு பயன்படுத்தும் சீனா வெகுவிரைவில் இலங்கையைத் தன் முழுக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரக் கூடிய ஆபத்து மிக அருகில் உள்ளது என்பதை கொழும்பு ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ளாமை வேதனைக்குரியதாகவே உள்ளது.

தமிழர்களின் உரிமை சம்பந்தமாக உரத்துக் கூறுவோர் இனி இந்தியாவை நம்புவதை விடுத்து சீனாவின் பக்கம் செல்லுதல்தான் சரியானதாக இருக்கும். சீனத் தலைவர்களுடன் சந்திப்புகளை ஏற்படுத்துதல் பயன் உள்ளதாக அமையும் என்றே நினைக்கத் தோன்றுகிறது. இந்த நடவடிக்கைதான் சிறந்த ராஜதந்திரமாக இருக்கும். இந்தியத் தலைவர்களுடனான சந்திப்புகள் அர்த்தமற்றவை என்பதை தமிழ்த்தலைமைகள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். இப்பொழுது இரு இனங்களுக்குமான பொது எதிரி சீனாமட்டுமே.
எதிர்காலத்தில் பொது எதிரிக்கான யுத்தம் தானாகவே தோற்றம் பெறும்.

மு. தயாளன்

# செந்தழல் தன்னில் வேகினையோ?



இனி அவன் இல்லை என்பதை நம்பவே முடியவில்லை. எத்தனை ஆண்டு கால நட்பு? எத்தனை துயரங்கள் இத்தனை நாளும்?
எத்தனை மேதின ஊர்வலங்கள் உன்னோடு நான் பயணித்திருக்கிறேன். எத்தனை தீண்டாமை ஒழிப்புப் போராட்டங்களில் உன்னோடு கரங் கோர்த்திருக்கிறேன். அத்தனை நினைவுகளையும் என்னிடம் விட்டுவிட்டு நீ மட்டும் ஏன் போனாய்?
எத்தனையோ ஆண்டுகளுக்குப் பின் உன்னை நான் திருகோணமலையில் சந்தித்தபோது எவ்வளவு உவகை கொண்டேன். நீ கொஞ்சங்கூட மாறவில்லை நண்பா. அப்படியே இருந்தாய். கொள்கைமீது அதே பிடிப்பு. அதே பிடிவாதம். அதே கம்பீரம். திகைத்துப் போனேன்.
உன் பிள்ளையின் படுகொலையைக் கூறிக்கூறி கதறி அழுதாயே! அதை எப்படி மறக்க முடியும். ! என்பிள்ளையின் கதையை எழுது எழுது என்று வேண்டிக் கொண்டாயே! நிச்சயம் எழுதுவேன் நண்பா. தேசியம் பேசும் உலுத்தர்களின் போர்வையை உருவி எறிவேன் நண்பா.
நீ போகப் போவதை உணர்ந்துதான் சிறுகதைமஞ்சரிக்குரிய உன் தொடரை முழுமையாக அனுப்பி வைத்தாயா?
உன்னைப்பற்றி உனக்குமட்டும்தான் தெரியும். நீ எழுதியவை சொற்பமாக இருக்கலாம். ஆனால் அத்தனையும் முத்துக்களல்லவா.
எழுது எழுது என்று நான் நச்சரித்த போதெல்லாம் எழுதுகிறேன் என்று கூறி நீ படைத்த எனக்குப் பிடித்த சிறுகதை என்ற முத்தல்லவா வெளியே வந்தது. நீ பெற்ற பட்டங்கள் விருதுகள் எவையுமே பெரிதல்ல. இறுதி மூச்சு இருக்கும்வரை தொழிலாளர் பக்கமே நின்றாயே! அதை யார் இங்கு செய்யக்கூடும். கட்சி இரண்டாகப் பிரிந்தபோது தைரியமாக சரியான பக்கம் நின்றாயே!
அப்போது உன்னைத் தூற்றியவர்கள் இப்போது உனக்கு அஞ்சலிக் கண்ணீர் வடிக்கிறார்கள்.
தாயகம் சஞ்சிகை ஆரம்பித்தபோது முதலாவது சஞ்சிகையில் எழுதிய நீ இரண்டாவதில் என்னை எழுதவைத்து அழகு பார்த்தாயே! நீ உயிரோடிருந்தபோது எட்டியும் பார்க்காத பலர் இன்று அஞ்சலிக் கூட்டங்கள் நடத்தி மகிழ்கிறார்கள் நண்பா. நீ பெற்ற விருதுகளால் அந்த விருதுகள்தான் பெருமை அடைந்தன.
பெற்ற கௌரவங்கள் எத்தனை எத்தனை நண்பா! ஈழநாடு பத்திரிகையில் 'மேகங்கள்' என்ற நாவலுக்கு இரண்டாம் பரிசு பெற்றாய்! பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கத்தின் 50 வது ஆண்டு நிறைவில் நடத்திய நாவல் போட்டியில் 'ஒரு வயதுபோன மனிதரின் வாரிசுகள்' என்ற குறுநாவலுக்கு தங்கப் பதக்கத்தை முதற்பரிசாகப் பெற்றாய் 1993 இல் வெளிவந்த சிறந்த சிறுகதைத்தொகுப்புக்கான முதற்பரிசை விபவி சுதந்திர இலக்கிய அமைப்பு "அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்" என்ற நூலுக்கு பெற்றாய்! உள்ளூராட்சித் திணைக்களம் நடத்திய 'தமிழின்பக் கண்காட்சி' யில் "அயல்கிராமத்தைச் சேர்ந்தவர்கள்" நூலுக்கு முதற்பரிசு பெற்றாய்! 2011 இல் கிழக்கு மாகாண முதலமைச்சர் விருது பெற்றாய்! 2015 கொடகே வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்றாய்! வடமாகாண சிறந்த நூல் பரிசு, 2012 - நெல்லிமரப்பள்ளிக்கூடம் சிறுகதைத் தொகுதிக்குப் பெற்றாய்! சாகித்திய மண்டலப் பரிசு, 2012 - நெல்லிமரப் பள்ளிக்கூடம் சிறுகதைத் தொகுதிக்குப் பெற்றாய்!
கிழக்குமாகாண சிறந்த நூல் பரிசு (பல்துறை) - நந்தினி சேவியர் படைப்புகள் 2015.. கலாபூஷணம் விருது - 2013 பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச் சங்கம் 2014-2015 ஆம் ஆண்டுக்கான "சங்கச் சான்றோர் விருது" வழங்கிக் கௌரவிக்கப்பட்டாய்! 2015. தமிழியல் விருது. 2016 .திருகோணமலை நகரமுதல்வர் விருது. 2019. இ.கலா.அமை. கலைமாமணி விருது2019. துரைவி விருது ( பி.சிறுகதை நூல்).

ஒவ்வொரு ஆண்டும் விருது பெற்றாய்! விருதுகளெல்லாம் பெருமை அடைந்தன.

நண்பனே இவையெல்லாம் விட்டுவிட்டு செந்தழல் தன்னில் வேகிவிட்டாய்! ஏனய்யா? எதற்கையா?

மு. தயாளன்

# திக்கற்றவர்கள்

சி.சிறீறங்கன்



வரைதல்: கைலாசநாதன்

**அ**வன் சுதந்திரமானவன். அவனை யாரும் கட்டுப்படுத்தக் கூடாது. கட்டுப்படுத்தவும் முடியாது. அவனைக் கட்டுப்படுத்தினால் அவனுக்குப் பொல்லாத கோபம் வரும். அவர்கள் தான் அவன் முதல் எதிரி. அவனும் மற்றவர் சுதந்திரத்தில் தலையிடுவதில்லை. தான் உண்டு தன் பாடு உண்டு என சிவனே என்று இருந்திடுவான்.

அவன் தன் சுதந்திரம் பாதிக்காது இருக்க பல ஊர்களைக் கடந்து வந்துள்ளான். "நான் நானாகவே இருக்க வேண்டும்" என்பதில் அவனுக்கு அவ்வளவு பிடிவாதம். தன் உறவுகளை மட்டுமல்ல தன் ஊரையும் விட்டு வந்துவிட்டான். அவர்கள் அவனை ஒதுக்கி வைத்தார்கள். அவன் அவர்களை விட்டு விலகியே வந்துவிட்டான். பாவம் அவர்கள் அவனை நினைத்து ஏங்கட்டும். நன்றாகக் கவலைப்படட்டும். அவனுக்கு ஒரு கவலையும் இல்லை. ஏனெனில் அவன் அப்படித்தான். அவனை அவர்களால் புரிந்துகொள்ள முடியாது. ஏன்? சில வேளைகளில் அவனையே அவனால் புரிந்துகொள்ள முடிவதில்லை.

"முட்டாள் பசங்க உங்களால் எப்படி என்னை புரிந்து கொள்ள முடியும்?" இப்படி அவன் பலமுறை எண்ணியதுண்டு. இந்த உலகத்தைப் பார்க்கும் போது அவனுக்குச் சிரிப்புச் சிரப்பாக வரும்.

"எதைத் தொலைத்து விட்டு இப்படி ஓடுகிறார்கள் எதை இவங்கள் தேடுறாங்கள்?" என்று அடிக்கடி முணுமுணுத்துக் கொள்வான். வாகனங்கள் வேகமாகப் பறக்கின்றன. ஒருவரை ஒருவர் பார்க்க நேரமில்லை. பேசவும் பிடிக்கவில்லை. இயந்திர வாழ்க்கையில் இவர்கள் இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவனுக்கு இந்த இரைச்சல் சுத்தமாகப் பிடிக்கவில்லை. சத்தத்தைக் கேட்டாலே தலைக்குள் "கிர்ர்" என்று என்னமோ செய்கிறது. மண்டையைப் பிழப்பது போல் அவனுக்கு வலிக்கின்றது. இதனால் அவன் அமைதியைத் தேடுகின்றான். நிரந்தர அமைதி

அமைதியைத் தேடித்தேடி கிராமம் ஒன்றிற்கு வருகின்றான். வயல் சூழ்ந்த கிராமம். கிராமத்தின் எல்லையில் பிள்ளையார் கோயில், கோயிலைச் சுற்றிச் சோலையாக மரங்கள், தேர்முட்டியுடன் சேர்ந்த மகிழமரத்தடியின் கீழ் இவன் தற்காலிக வாழ்விடம். நெல்வயல் மணத்தை அள்ளி வரும் காற்று குளிர்மையாய் வீசும். பறவைகளின் ரீங்காரம்; வெயில் ஊடறுக்க முடியாத அந்த மரத்தடியில் பெரும் பொழுதுகள் அவன் படுத்தே இருப்பான்.

நுளம்பு நொய் நொய் என இரைந்த வண்ணம் இருக்கின்றது. அதனை அடிக்கப்போய் அவன் பல தடவை தன் கன்னத்தையே அடித்துக் கொண்டான். அவன் தலைக்கு வைத்துப் படுக்கும் உடுப்பு மூட்டைக்குள் ஏதோ சரசரக்கின்றது. மெல்ல எழும்பி தன் உடுப்பு மூட்டையை அவிழ்த்து உதறினான். பழைய உடுப்புக்கள், சாப்பாட்டுத் தட்டு, தேநீர்க்குவளை, இன்னும் அம்மாவின் பழைய சேலை ஒன்று அதற்குள் இருந்து. அம்மாவின் சேலை பொத்தல் விழுந்து காணப்படுகின்றது. அதற்குள் இருந்து எலி ஒன்று குதித்து ஓடுகின்றது.

“பாவம் அதுவும் என்னைப் போல் தனிமையை விரும்பும் போல போகட்டும்” என்று விட்டுவிட்டான்.

அவன் பார்வை எங்கோ தொலைதூரத்தில் நிலைத்திருந்தது. புதர் போல வளர்ந்திருக்கும் தன் தாடியைத் தடவிவிட்டுக் கொண்டான். தலையில் நச்சென்று ஏதோ விழுந்தது. கையால் தடவிப் பார்த்தான் பிசு பிசு என்றிருந்தது. மணந்து பார்த்தான் துர்நாற்றம் வீசியது. நிமிர்ந்து பார்த்தான் தேர்முட்டியின் கூரையில் பல புறாக்கள் இருந்தன. அவை தமக்குள் “குறு குறு” என பேசிக்கொண்டன. கையைத் தன் சட்டையில் துடைத்துக் கொண்டான். அவன் தலை முழுகிப் பல காலம். அவனுக்கு அது ஞாபகம் கூட இல்லை. அவனுக்கு அந்தத் தேவையும் இல்லை. இப்போதும் புறாக்கள் மேலே குறுகுறுத்த வண்ணம் இருந்தன. அடி வயிறு வலிப்பது போல் இருந்தது. அது பசியினால் வந்த வலி. மெல்ல எழுந்து சாப்பாட்டுத் தட்டை எடுத்துக் கொண்டு கோயில் முன் வாசலுக்கு வந்தான். கோயில் கதவு பூட்டியிருந்தது. இனி மதியம் தான் பூசை. ஐயர் பொங்கல், மோதகம் என ஏதாவது தருவார். அவர் நல்லவர் தான். ஆனால் கோயில் முதலாளி ரொம்பப் பொல்லாதவர். அவனை அங்கிருந்து அகற்றுவதில் குறியாக இருக்கின்றார். அவரது தும்புத்தடி மீசையும் சிங்கம் போன்ற குரலும் அவனுக்கு பயத்தை ஏற்படுத்தும். அவரைக் கண்டால் ஓடி ஒளிந்து கொள்வான்.

கோயில் வாசலில் நின்ற நாய்கள் அவனைப் பார்த்து வாலாட்டின. அவைகளும் அவனைப் போல ஐயரின் பெங்கலுக்குக் காத்திருப்பவை. பசி வயித்தக் கிள்ள மெல்ல தெருவில் இறங்கி நடக்கத் தொடங்கினான். எதிரில் வந்த சிறுவர்கள் அவனைப் பார்த்து ஓட ஆரம்பித்தார்கள்.

“விசர்பெடியன் வாறான்ரா … விசர்ப்பெடியன்” என்று கத்திக் கொண்டு ஓடினர். அவனுக்குத் தன் பெயரே மறந்து போச்சு. ஆனால் ஊரார் வைத்த பெயர் தான் “விசர்பெடியன்” அவனுக்கு அது பிடிக்கவில்லை. கல் எடுத்து எறிந்தான்.

“சனியன்களே… தொலைஞ்சு போங்கடா…..” என்று கத்தினான்.

சிறுவர்கள் ஓடி மறைந்ததும் நடக்கத் தொடங் கினான். அவன் எதிர்பட்ட வீட்டுக்கெல்லாம் போக மாட்டான். அவனுக்கு முகம் கோணாமல் பிச்சை போடுபவர்களைத் தெரியும். அந்தம்மா வீட்டுக் கேற்றைத் தன் சாப்பாட்டுத் தட்டால் தட்டினான். யன்னல் வழியே எட்டிப்பார்த்த அந்த அம்மா சிறிது நேரத்தில் அவன் தட்டில் புட்டைக் கொண்டுவந்து கொட்டினாள். வாழைப்பழமும் கொடுத்தாள். தலையைத் தாழ்த்தி நன்றி தெரிவித்தான். பின் தன் இருப்பிடத்தை நோக்கி விரைந்தான்.

அந்த தெருவில் இப்போதும் அந்தச் சிறுவர்கள் அவனைப் பரிகாசம் செய்யக் காத்திருந்தனர். “விசர்பெடியன்……… விசர்பெடியன்..” என்று கூச்சலிட்டனர். கற்களை அவன் மீது வீசியெறிந்தனர். சில கற்கள் அவன் மீதுபட்டது. அவனுக்குப் பொல்லாத கோபம் வந்தது. அவர்கள் வீசிய கல் ஒன்றை எடுத்துத் திருப்பி வீசினான். யாரோ ஒரு சிறுவனுக்கு அடிபட்டிருக்க வேண்டும். “ஐயோ… அம்மா …” என்று கத்திக் கொண்டு ஓடினார்கள்.

அவன் கோயில் வீதிக்கு வந்ததுமே நாய்கள் வாலாட்டிய வண்ணம் அவனைச் சுற்றி வந்தன. நாய்களுக்குக் கொஞ்சம் புட்டை அள்ளி வீசிவிட்டு சாப்பிடத் தொடங்கினான். இரண்டு கவனம் விழுங்கு முன்பே அவனது சாப்பாட்டுத் தட்டை ஓர் கை தட்டி விட்டது. “இவன் தாண்டா அந்த விசரன்” என்று சொல்லி ஒருவன் தன் காலால் எட்டி உதைத்தான். குப்புற விழுந்தான் அவன். உணவு சிந்திக்கிடந்தது. அவன் மூக்கின் வழியாக இரத்தம் பொல பொல வென வழிந்து ஓடியது. அதற்குள் பெரும் சனக்கூட்டம் கூடிவிட்டது.

“இந்த விசரணை ஊரைவிட்டே துரத்தனும்” என்றது ஒருகுரல்.

“எங்களது பிள்ளைகளுக்கு பாதுகாப்பில்லை” என்றது இன்னொரு குரல். அவன் மிரள மிரள விழித்தான். அவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

“என்ர பிள்ளைக்காடா கல் எறிந்தாய் ராஸ்கல்” என்ற ஒருவன் தாறுமாறாக அடித்தான். இன்னும் சிலர் சேர்ந்து அடித்தனர். சிலர் மறித்தனர். எனினும் அவன் சட்டை கிழித்து எறியப்பட்டது.

அந்தநேரம் கோயில் ஐயா கூட்டத்திற்குள் நுழைந்தார். “ஐயோ! இந்தப் பெடியனை ஏன் இப்படி அடிச்சனீங்கள்?” என்று கத்தினார்.

“இவன் விசரன் என்ர பிள்ளைக்கு கல் எறிஞ்சவன்”
“விசரனை அடிச்ச நீங்கள் எல்லாம் யார்?”

என்றார் ஐயா கோபமாக.

“எல்லோரும் கொஞ்சம் கவனிக்கிறீங்களா?” என்று ஓர் இளைஞன் எல்லோர் கவனத்தையும் ஈர்த்தான்.

“இவனை எல்லாரும் என்ன செய்யப் போறீங்கள்? அவன் உடம்பின் தளும்புகளைப் பார்த்துமா இன்னும் புரியவில்லை?” எல்லோரும் அவன் தேகத்தைக் கவனித்தார்கள். உடலெங்கும் காயங்களின் தளும்புகள். கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது.

“இவன் முன்னாள் போராளி. அவன் குடும்பத்தையே யுத்தம் விழுங்கிவிட்டது. பித்துப் பிடித்தவன் போல் அவன் நடைபிணமாய்த் திரிகின்றான். சொந்தங்களும் அவனைக் கைவிட்டு விட்டது. தடுப்பில் இருந்து வந்தவன். தன் தேசத்தில் திக்கற்றவனாய் திரிகிறான். இவன் மட்டுமல்ல இவனைப் போல் பலர் இருக்கின்றனர்” அரசியல் வகுப்பு எடுத்தது போல் அவனைப்பற்றி விளக்கமளித்தான் அந்த வாலிபன். கூட்டத்தில் பலர் உச்சுக் கொட்டினர். சிலர் பரிதாபத்துடன் அவனைப் பார்த்தனர். “எங்கட அரசியல் தலைமையிடம் சொன்னால் அவர்கள் நிச்சயம் உதவி செய்வார்கள்” என்றார் ஒரு குட்டி அரசியல் வாதி.

“ஐயோ…. வேண்டவே வேண்டாம் அவர்கள் இவனை வைத்து அரசியல் பிரச்சாரம் தான் நடத்துவார்கள். நாங்கள் இவனை நல்ல மனநலக் காப்பகத்தில் சேர்த்துவிடுவோம்” என்றான் அந்த வாலிபன். பெரும்பாலானோர் அதற்கு சம்மதம் தெரிவித்தனர். அங்கு நடப்பது எதுவும் புரியாது வானத்தை வெறித்துப் பார்த்தபடி நின்றான் அந்த முன்னாள் போராளி. மனநலக் காப்பகத்திற்கு கொண்டு செல்ல வண்டியும் வந்தது. அனைவரும் அவனை ஒருவாறு ஏற்றி வழியனுப்பி வைத்தார்கள். அனைவரது முகங்களிலும் நிலவில் கால் வைத்த பெருமிதம் தோன்றியது. ஒரு வேளை அவன் பித்தம் தெளிந்து சித்தசுவாதினம் உள்ளவனாக வெளியே வரலாம். ஆனால் அவன் தொலைத்த வாழ்க்கையை எங்கே பெறலாம்?

# புத்தகப் பை

**கவின்மகள்**



வரைதல்: கைலாசநாதன்

“ ஐஞ்சு, ஆறு, ஏழு ” என்று உரத்துச் சத்தமிட்டபடி வகுப்பறையில் அங்கும் இங்கும் ஓடிய சீலனுக்கு

“ இஞ்சவாடா குரங்கு வேலை தான் பார்க்கத்தெரியும்…!” என்று ஏசியவாறு கையிலிருந்த பிரம்பினால் ஓங்கி இரண்டு அடிபோட்டாள் பிரணவி ரீச்சர். அடியினால் ஏற்பட்ட வலி பொறுக்கமாட்டாமல் “ஓ….!” என்று அழத்தொடங்கி விட்டான் சீலன்.

“சீ …. இது பெரிய தொல்லை… இந்தக் குரங்குப் பெடியனை எப்படித்தான் திருத்துவதோ தெரியுதில்லையே!” என்று மனதுக்குள் புலம்பிக் கொண்டாள் பிரணவி ரீச்சர். பிரணவி ரீச்சர் மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரியின் மூன்றாம் வருடக் கட்டுறு பயில் வுக்காக அயற் கிராமத்திலுள்ள ஆரம்பப் பாடசாலையொன்றில் நியமிக்கப்பட்டிருந்தாள். கற்றல் கற்பித்தலில் பாடரீதியாக சிறந்த தேர்ச்சி பெற்றவளுக்கு நடை முறைவாழ்வில் எதிர் கொள்ளும் சில சிக்கல்களைத் தீர்ப்பதற்கே பெரும்பாடாகி விடுகின்றது. என்றாலும் தான் கற்ற கொள்கைகளைப் பிரயோகித்து அவற்றில் வெற்றி பெற்று வந்தவளுக்கு தான் கற்பிக்கும் தரம் மூன்று மாணவர்களுள் குழப்படியும் கவனயீனமும் நிறைந்த சீலனை மட்டும் திருத்த முடியவில்லை. எந்நேரமும் ஏனைய மாணவர்களின் புத்தகப் பைகளை இழுப்பதுவும், கிழிப்பதுவுமாக இருக்கும் சீலனை ஒரு நாள் கண்டிப்புடன்

“ சீலன் இஞ்ச வாரும். மற்றப் பிள்ளைகளின்ற புத்தகப் பையைக் கிழிச்சீரென்டால் பிறகு நீர்தான் அவைக்கெல்லாம் புத்தகப்பை வாங்கிக் குடுப்பீர்! இனி அப்படிச் செய்யக் கூடாது. விளங்குதா?” என்று கூறிவைத்தாள் பிரணவி ரீச்சர். நடந்தது என்ன..? மறுநாளே மாதவனின் புத்தகப் பையினது கைபிடிகளை அறுத்துவிட்டான் சீலன். இரண்டு அடிபோட்டு முழங்காலில் அவனை நிற்க வைத்த போது சீலன் பிரணவி ரீச்சரை எரித்துவிடுவதுபோல் பார்த்தபடி நின்றிருந்தான். “என்னடா முறைக்கிறாய்..?” என்று இன்னொரு அடி கொடுக்கக் கையை ஓங்கியவளுக்குத் தான் படித்த தத்துவங்களுக்கும் அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டுமென அவள் கொண்ட தீர்க்கமான

முடிவுக்கும் சமப்பந்தமேயில்லாமல் தனது நடத்தை அமைவதாய்ப்படவே சீலனின் பிஞ்சுக் கரங்களை வாஞ்சை யோடு தடவி விட்டாள். அடிபட்ட அவனது இளங் கரங்கள் சிவந்தி ருந்தன. அதைக் கண்ட பிரணவி ரீச்சருக்குக் கண்கள் கலங்கின.

"ஐயோ… எனக்கு ஏன்தான் இந்தப் பொல்லாத பதட்டம் கோப மெல்லாம் வந்து சேருதோ….? இனி இப்பிடி இருக்கக் கூடாது. பிஞ்சு உள்ளங்கள அவர்களின் தேவை, விருப்பம் அறிஞ்சு அவர்களுக்கேற்ற விதத்தில கற்பிக்கிறவன்தான் நல்ல ரீச்சர் என்டிறத மறந்து நடந்திட் டனே….!" எனப் பலவாறு மனதுக்குள் புலம்பி அழுதாள் பிரணவி ரீச்சர்.

பாடசாலை இடைவேளை நேரம் பிரணவி ரீச்சர் சீலனைத் தனியாக அழைத்தாள். அவன் பொலித்தீன் பையினுள் இடப்பட்ட தனது புத்தகங் களைக் கெட்டியாக அணைத்தபடி பிரணவி ரீச்சர் முன்னே பயத்துடன் வந்து நின்றான்.

"சீலன் இனிமேல் நான் உனக்கு அடிக்கமாட்டன்... சரியா மகன். நான் கேட்கிறதுக்குப் பயப்படாமல் பதில் சொல்லவேணும் என்ன..?" என்று கூறியபடி பிரணவி ரீச்சர் சீலனை நோக்கினாள்.

மௌனியாக நின்ற சீலனின் முகத் தில் மெல்லியதாக ஒரு பிரகாசத்தை பிரணவி ரீச்சர் கண்டுகொண்டாள். அவளுக்கு மனதில் நம்பிக்கை அரும் பத் தொடங்கியது.

"ரீச்சர் உண்மையாய் அடிக்க மாட் டீங்களா….?"

சீலனின் கேள்விக்குச் சிரிப்புடன் தலையசைத்த பிரணவி ரீச்சர் அவ னைத் தன்னருகில் அழைத்து கதிரையில் அமரச்செய்தாள். அவ ளது தலையைப் பாசத்தோடு தடவி விட்டாள்.

"சீலன் உனது அப்பா என்ன செய்கிறார்…? " என்று வினவினாள் பிரணவி ரீச்சர்.

"அப்பா எங்கேயென்டு தெரியாது ரீச்சர். எப்பயாவது ஒருநாள் வரு வார்." என்று ஏக்கத்துடன் அவனது உதடுகள் முணுமுணுத்தன. பொறுப் பற்ற தகப்பனால் சீலன் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறான் என்பதனை உணர்ந்து கொண்டவளாக பிரணவி தன் அடுத்த கேள்வியை கேட்கத் தொடங்கினாள்.

"உன் அம்மா …………?"

"அம்மா கடவுளிட்டப் போயிட்டா!" என்று சொன்ன சீலன் கண்களைக் கசக்கிக் கொண்டு அழத்தொடங் கினான். ஒருவாறு அவனைத் தேற்றி ஆறுதல்படுத்திய பிரணவிவீச்சர், அவனது குடும்ப விபரங்களை அவ னிடம் கேட்டு சங்கடப்படுத்துவதை அத்துடன் கைவிட்டிருந்தாள். ஆயி னும் சீலன் அவனது அம்மம்மாவினால் வளர்க்கப்படுவதாகவும் மிகுந்த வறு மையில் அவர்கள் கஸ்டப்படுவதா கவும் அவ்வூர் ஆசிரியை மாலினி யிடம் கேட்டு அறிந்து கொண்டாள். பிரணவியை மிகவும் கவலைக்குள் ஆழ்த்திய விடயம் யாதெனின், சீலன் தனது அம்மம்மா சுட்டுக் கொடுக்கும் அப்பங்களை விற்று விட்டுத்தான் பாடசாலைக்கு தினமும் வருகின்றான் என்பதுதான். அந்த எட்டுவயதுச் சிறுவனுக்கு இப்படி யொரு நிலையா என்று எண்ணிய போது பிரணவி ரீச்சருக்குக் கண்கள் பனித்துவிட்டன. பிரணவி ரீச்சர் தெளிவு பெற்றவளாக எழுந்தாள். ஒருவாரம் இப்பாடசாலையில் கற்பித்து இருந்தும் தனது வகுப்பு மாணவர் ஒவ்வொருவரையும் அறிந்து கொள்ளாதது தன்னுடைய தவறு என்பதை புரிந்துகொண்டாள். மறுநாள் வகுப்பறைக்குச் சென்றாள். உற்சாகத்துடன் மாணவர்களுக்குப் பாடலொன்றைச் சொல்லிக்கொடுத்த பிரணவிரீச்சர், மாணவர்களின் பயிற் சிக் கொப்பிகளைப் பார்வையிட் டாள். அழகிய உறுப்பமைவான கையெழுத்துக்களுடன் சீலனின் பயிற்சிக் கொப்பிகள்….! திருத்தி முடித்துவிட்டுக் கொப்பிகளை மாண வர்களிடம் ஒப்படைத்த பிரணவி ரீச்சரின் கண்களில் சீலனின் புத்தகப் பைபட்டது. ஒரு பொலித்தீன் பையை தன்னுடைய புத்தகப்பையாக அவன் வைத்திருந்தான். அப்போதுதான் பெரியதொரு உண்மை பிரணவி ரீச்சருக்குப் புலனாகியது. தன்னிடம் இல்லாத ஒன்றுக்காக மற்றவர்கள் வைத்திருப்பதை நாசம் செய்யும் வக்கிர உணர்வு சீலனின் பிஞ்சு மனதில் துளிர்ப்பதை புரிந்து கொண் டாள் அவள். சீலன் தன்னுடன் படிக்கும் பிள்ளைகளின் புத்தகப்பை களை ஒவ்வொருநாளும் கிழிக்கும் செயலில் ஈடுபடுவது இதன் அடிப்ப டைதான் என்பதனை எந்தவித ஐயமும் இல்லாமல் தெளிந்த பிர ணவிரீச்சர், சீலனின் இத்தகைய நடத்தையினை மாற்ற உடனடியாக நடவடிக்கையெடுத்தாள். மறுநாள் அழகிய புத்தகப்பையொன்றை சீலனுக்காய் வாங்கி வந்து கொடுத்த பிரணவி ரீச்சரிடம் சீலன் மகிழ்வுடன் "எனக்காகவா ரீச்சர்….? புத்தகப் பை…? இனி மற்றவையின்ற பாக்கை தொடவே மாட்டன் ரீச்சர்!" என்றான் சீலன். அந்தக் கள்ளமற்ற வெள்ளை யுள்ளங்கொண்ட பிள்ளையின் மனமாற்றத்தை அறிந்த பிரணவிரீச்சர், வெற்றிக்களிப்புடன்

" மகன், இப்ப சந்தோசம் தானே..!" என்று வினவினாள்.

"ஓம் ரீச்சர்.. ஆனால்...... எனக்கு அம்மா….. அம்மாவ வாங்கித்தர உங்களால ஏலாதே !" என்று அந்தச் சுட்டி விழிகள் கலங்கக்கூறிய சீல னைக் கட்டியணைத்துக் கொண்டாள் பிரணவி ரீச்சர்.

# அவர்களும் வாழ வேண்டும்

*பிரசாந்தி ஜெயபாலன்*

மக்கள் கூட்டம் முண்டியடித்துக் கொண்டிருந்த அந்தப் பேருந்துத் தரிப்பிடத்தில் அவளும் ஒருத்தியாய் நின்றிருந்தாள். கொரோனாக் காலத்தின் சுகாதார நடைமுறைகளில் ஒன்றாய் முகக்கவசம் அவளது முகத்தினை மறைத்திருந்த போதும் அவளது உடலுறுப்புக்களை அளவெடுப்பது போல் பாதாதி கேசமாகவும், கேசாதி பாதமாகவும் உற்றுநோக்கித் தங்களுக்குள் குசுகுசுப்பாய் ஏதா பேசி ஒருவித அசூயையுடன் அவளிருந்த பக்கத்திலிருந்து அப்பால் நகர்ந்தனர் உடனிருந்தோர். கடந்த இரு வருடங்களாக இப்படியான நையாண்டிப் பார்வைகளும் கேலிப்பேச்சுக்களும் புறக்கணிப்புக்களும் அவளுக்குப் பழகிப்போனாலும் ஒவ்வொரு தடவையும் ஏனோ மனசு கனத்துத்தான் போகிறது. இயல்பிலேயே யாருக்கும் தொல்லையாய் இருக்க விரும்பாத குணம் கொண்ட அவள் தன்னால் இயன்றவரை தெருவோரமாக ஒதுங்கி நின்றபோது அவளுக்கான பேருந்தும் வந்தது. பலநாட் பட்டினி கிடந்தவன் முன்பாக உணவுத்தட்டத்தை நீட்டியது போல் பயணிகள் அனைவரும் பேருந்தில் ஏற முண்டியடித்தனர். அனைவரும் ஏறிய பின் யார் மீதும் தன்னுடல் உரசிவிடாமல் பக்குவமாய் நகர்ந்து ஆசனம் எதுவும் கிடைக்காமையால் பேருந்துக் கம்பியைப் பிடித்துத் தொங்கியபடி நின்று கொண்டிருந்தாள் முல்லை. இராட்சத முதலை ஊர்வது போல் பேருந்தும் மெதுவாக ஊர்ந்து பின்னர் வேகமெடுக்கவே அதை விட வேகமாக முல்லையின் நினைவுகள் தன் கடந்த காலத்தை நோக்கிச் சென்றன.




.........................................

"அண்ணா…அண்ணா…எழும்படா...எனக்கு வகுப்புக்கு நேரமாச்சு…" என்று தமயனைத் தட்டி எழுப்பிய அவன் செல்லத் தங்கை முகிலினி அவன் எழும்பாது போர்வையை இழுத்து மூடிக்கொண்டு மீண்டும் தூங்கவும் அடுக்களையில் பாத்திரங்களுடன் போராடிக் கொண்டிருந்த அன்னத்திடம் சென்று அண்ணன் மீதான குற்றப் பிரேரணையை வாசித்தாள். ‘அம்மா..அம்மா…தடியன் விடிஞ்சதும் தெரியாம போர்த்திட்டு தூங்கிறான்…’

‘பாவம் விடு இண்டைக்குத்தான் அவனுக்கு வகுப்பில்லை..நிம்மதியா கொஞ்ச நேரம் தூங்கட்டும்.’ என்ற தாயின் பரிந்துரையால் முகம் சிவந்து ‘நான் ஆரோட போறது.. அண்ணா தன்ர புது பைக்கில வடிவாக் கொண்டுபோய் விடுவான் எண்டு ஆசைப் பட்டன்’ என்று சிணுங்கத் தொடங்கினாள். தங்கையின் அழுகை தூக்கத்தைக் கலைக்கவே போர்வையை உதறிய முகிலன் ‘செல்லா அஞ்சு நிமிசத்தில அண்ணா வாறன்..வீணாக அழுது உன்ர மேக்கப்பை குலைக்காத..’ என செல்லமாய் அவளைச்

சீண்டிவிட்டு குளியலறைக்குள் நுழைந்து காலைக் கடன்களை முடித்துக்கொண்டு புயல்வேகத்தில் வெளியே வந்தான். 'அம்மா செல்லாவ வகுப்பில விட்டிட்டு அப்பிடியே கிறவுண்டுக்குப் போய் விளையாடிட்டு வகுப்பு முடிய ஏத்திக்கொண்டு வாறன்' என்று சொல்லிக்கொண்டு புறப்பட்டவனை இடைமறித்த அன்னம் 'அவான்ர வகுப்புக்கு இன்னும் நேரம் இருக்கு.. நீ சாப்பிட்டிட்டுப் போ' எனக்கூறி உணவுத் தட்டத்தை நீட்டினாள். 'இல்லை அம்மா நான் வந்து சாப்பிடுறன்..பாவம் அவள் சிணுங்கிறாள்..' என்றவனை முறைத்த அன்னம் 'காலையில வெறும் வயித்தோட போகக்கூடாது.. என்ர ராசாவெல்லோ' என்றவாறு அவனை இழுத்து நாற்காலியில் அமரவைத்து ஊட்டத்தொடங்கினாள்.

அப்போது வகுப்புக்குச் செல்லத் தயாராகியவாறு அங்கு வந்த முகிலினி அண்ணனின் உணவுத்தட்டத்தை எட்டிப்பார்த்ததும் அவளது முகம் அஷ்டகோணலாகியது. 'ம்….ம்…எனக்கு இடியப்பமும் வெறும் சாம்பாரும் தந்திட்டு உங்கட மோனுக்கு முட்டைப்பொரியலும் சேர்த்து ஊட்டுறியளோ..' எனச் சிணுங்கினாள். அதற்கு அன்னம் பதில் கூறுவதற்காய் வாய் திறக்கவும் 'போதும்..போதும்…நீங்கள் ஒண்டும் சொல்ல வேண்டாம்.. பெரிசா என்னத்த சொல்லப்போறியள்.. வழக்கம் போல தானே.. அவன் ஆம்பிளையடி.. சாண்பிள்ளை ஆனாலும் ஆண்பிள்ளையெல்லோ.. எண்டு புராணம் தானே பாடுவியள்.. கேட்டுக் கேட்டு காது புளிச்சுப் போயிட்டு..' என்று தன் கைகளால் இரு காதுகளையும் பொத்தியவாறு நகர்ந்தாள்.

வழக்கமாய் இது நிகழ்வதுதான். வேறெந்த விடயத்திலும் தன்னிரு பிள்ளைகளிலும் பாரபட்சம் காட்டாத அன்னம் இந்த ஒரு விடயத்தில் மட்டும் தானும் சராசரித் தமிழ்த்தாய் தான் என்பதை நிரூபித்து விடுவாள். ஒவ்வொரு உணவு வேளையின் போதும் மகளை விட மகனின் தட்டில் நல்லது நறியதுகள் மறைவாய் வைத்துப் பரிமாறப்படும். ஆனால் அவளின் கண் பார்வைக்குத் தப்பி அந்த நல்லது நறியதுகளில் சரிபாதி தமயனின் கையால் தங்கையின் தட்டுக்குத் தாவுவது வேறு கதை.

இவ்வாறு சிணுங்கலும் கெஞ்சலும் செல்லச் சண்டையுமாய் உணவுண்டு முடித்து அண்ணனும் தங்கையும் வெளியே கிளம்பினர். பாதையை நன்கு அவதானித்தவாறு தங்கைக்குப் பிடித்ததுபோல் வளைந்து நெளிந்து இலாவகமாகத் தன் பைக்கினைச் செலுத்தி அவளது முகமலர்வில் தானும் மகிழ்ந்து வகுப்பிற்கு வெளியே அவளை இறக்கிவிட்டு நேரே கிறவுண்ட் நோக்கி விரைந்தான்.

ஆறடி உயரமும் கருமையும் அல்லாமல் மாநிறமும் அல்லாமல் இரண்டிற்குமிடையே சற்றுச் சிவந்த நிறமும் கூரான நாசியும் ஆண்களிடமும் காந்தசக்தி உண்டு என்பதை நிரூபிக்கும் கண்களும் திடகாத்திரமாக உருண்டு திரண்ட தோள்களும் விரிந்து பரந்த மார்புகளும் கொண்டு கண்ணிமைக்கும் நொடியிலேயே கன்னியரைக் கவர்ந்திழுக்கும் காந்தபுருசனான முகிலன் அறிவில் மட்டுமன்றி விளையாட்டிலும் ஏனையோரை விஞ்சியே நின்றான். இளசுகள் மத்தியில் நாகரிகமோகம் விருட்சமாகி விளைவாகப் பல சமூகசீர்கேடுகளை உற்பத்தி செய்யும் இன்றைய காலத்தில் இவற்றுக்குள் எல்லாம் சிக்கிடாத முகிலன் குணத்திலும் தங்கம் தான்.

அவன் குனிந்து துடுப்பெடுத்தாடத் தொடங்கினால் 'முகிலா.. அடி..விடாத..' 'மச்சி.. அப்பிடித்தான் போடு சிக்ஸர்…' 'முகிலண்ணா அடியுங்கோ..' என்னும் கூக்குரல்கள் விண்ணைப் பிளக்க எதிரணியினர் ஆட்டமிழக்கும் வரை அவனது கைகள் ஓயாது. அப்படியானவனுக்கு நண்பர் கூட்டத்திற்கும் பஞ்சம் இருக்குமோ? எப்போதும் அவனைச்சுற்றி நண்பர் குழாம் இருந்தாலும் கன்னியரின் காதல் பார்வைகளும் அவனை வட்டமிட்டவாறே இருக்கும். இப்படி வீசப்பட்ட காதல் வலைகள் எதிலுமே சிக்காது தந்தை இல்லாது தனியாளாய்த் தங்களை வளர்க்கப் பாடுபடும் தாயைக் கண் கலங்காது கடைசிவரை காப்பதும் தன் தங்கைக்கு நல்ல வாழ்க்கை அமைத்துக் கொடுப்பதுமே தன் கடமையென தவமிருந்தான் முகிலன்.

விளையாடி முடிந்ததும் தங்கையை ஏற்றிக்கொண்டு வீடு வந்து வியர்வையால் குளித்திருந்த தன்னுடலை குளிரூட்ட விரும்பிக் குளியலறைக்குச் சென்றவன் திகைத்தான். கடந்த சில நாட்களாகவே தன்னுடலில் சில மாற்றங்களை உணர்ந்த போதும் இப்படியாகும் என அவன் சற்றும் எதிர்பார்க்கவில்லை. எதற்கும் கலங்காத அவனுள்ளம் கதறி அழுதது. தண்ணீரை வேகமாய்த் திறந்துவிட்டு குரலெடுத்து அழுதபோது அவனது காந்தக்குரல் காணாமற்போய் தங்கையின் குரலின் சாயலில் சிணுங்கியது.

இப்படியே சில நாட்கள் தன்னறையிலேயே கழித்தான். பரீட்சைக்குப் படிப்பதாய் பாசாங்கு காட்டித் தாயையும் தங்கையையும் நெருங்கவிடாது தடுத்தான். இறுதியில்

ஒரு முடிவு எடுத்தவனாக தாயிடமும் தங்கையிடமும் புரியவைக்க முயன்றபோது தங்கையின் ஆடை அலங் காரங்களுடன் நளினமாய் வந்து நின்ற அவனைப் பார்த்து ‘என் பிள்ளை எங்கே? என் ஆண்பிள்ளை எங்கே? ..’ எனத் தலையிலடித்து ஒப்பாரி வைத்தாள் அன்னம். அவனது செல்லத் தங்கையோ அடிக்கடி காணாமற்போன தனது ஆடை அணிகளுடன் முழுது மாய்க் காணாமற்போன தன் அண்ணனைத் தேடும் விழிகளுடன் அருகே வராது எட்ட நின்று கண்ணீர் வடித்தாள்.

‘இப்பவும் நான் உங்க பிள்ளை தான் அம்மா.. எப்போதும் போல உங்களை நான் காப்பாற்றுவேன்..’ எனக் கதறிய அவனைப் பிடித்து இழுத்து வீட்டை விட்டு வெளியே துரத்தி கதவை அறைந்து சாத்தினாள் அவனது அன்புத்தாய் அன்னம். ‘இவன் இங்கிருந்தால் இனி உனக்குக் கல்யாணம் காட்சியும் நடக்க விடமாட்டான்.. நல்லவன் என்று நம்பினனே..ஏதோ கெட்ட சகவாசத்தால் தான் இப்படி ஆகியிருக்கிது..இனி எனக்கு ஒரேயொரு பிள்ளை தான்..’ என்ற அன்னத்தின் குரல் கதவுக்கு அப்பால் வீழ்ந்து கிடந்த அவளாகிவிட்ட அவனின் செவிகளைத் துளைத்த போது ஏனோ அவனுக்கு இழுத்து வைத்து உணவூட்டும் தாயின் முகமே நினைவுக்கு வந்தது.

அழுதழுது ஓய்ந்தவன் மெல்ல மெல்ல தைரியத்தை வரவழைத்துக்கொண்டு கல்லூரி நோக்கிச் சென்றான். ‘அரவாணி வருகுது..அரோஹரா….’ என்ற நண்பர்களின் கேலிப்பேச்சுக்களைத் தாண்டி நிர்வாக அறைக்குச் சென்றான். ‘இவர்கள் தான் இப்போது மூன்றாம் பாலினமாம்..இங்கு ஆண், பெண் என்ற இருபாலார்க்கு மட்டுமே இடமுண்டு..’ என நாகரிகமாய் அடித்து விரட்டியது கல்லூரி நிர்வாகம். ‘சகலகலாவல்லவன்’ எனத் தன்னைத் தலைமேல்த் தூக்கிவைத்து விருதுகளை அள்ளி வழங்கிய கல்லூரி மேடைப்படி மேல் கால் தடுக்கி வீழ்ந்தவன் எழுந்து சுதாரித்துக்கொண்டு தன்னை ஆட்டநாயகனாய் அறிமுகப்படுத்திய மைதானத்தை அடைந்தான். உள்ளே நுழையும் முன்னரே ‘கலையுங்கடா அந்த அலியை..’ ‘பாவம் விடு (அ) எலி பந்து பொறுக்கட்டும்..’ என்ற கேலிப்பேச்சுக்கள் தன்னுடன் உயிராய்ப் பழகிய நண்பர்களின் வாயிலிருந்து நாராசமாய்த் தன் காதில் விழ உள்ளம் உடைந்து நொருங்கிட அப்படியே திரும்பித் தெருவோரம் யாசகம் செய்வோரின் மரநிழலில் சில நாட்கள் கழித்தான். பசியால் மெலிந்து கேலிப்பேச்சுக்களால் மனம் வெதும்பி தனதுடலில் உண்டான புதிய மாற்றத்தைத் தானே ஏற்க மறுத்துப் பலவிதமான காமப்பார்வைகளையும் உரசல்களையும் பொறுக்க முடியாது தன்னைத்தானே வெறுத்தவனாய் தற்கொலையை நாடியவேளை ‘திருநங்கையர் காப்பகம்’ கண்ணில் படவே கால்கள் தானாய் அவனை அங்கு கொண்டு சேர்த்தன. இதுவரை உடலால் அவளாகி விட்டாலும் மனதளவில் அவனாகவே இருந்தவன் அந்த நொடி மனதளவிலும் அவளாகி முகிலன் முழுவதுமாய்த் தொலைந்துவிட முல்லையாய் மலர்ந்து அந்த வண்ணமலர்த் தோட்டத்திற்குள் கால் பதித்தாள்.

இவ்விதம் முகுந்தனின் சுயஉருவம் போல் அப்பெயரும் தொலைந்து போக முல்லை அந்தக் காப்பகத்தை வந்தடைந்தாள். தற்கொலையை நாடிச்சென்றவளுக்கு தற்துணிவுடனும் தைரியத்துடனும் வாழ்வின் மீதான ஈடுபாட்டை உருவாக்கி அவளது இருண்டுபோன கனவுகளுக்கு வர்ணம் பூசி மீளவும் அவளை உயிர்ப்பித்தது அக்காப்பகத்தில் உள்ளோரின் காருண் யமே. தன்னைப் போலவும் மனிதர்கள் வாழ்கிறார்கள் என்பதை அவள் உணர்ந்து கொண்டதும் அங்குதான். அங்கு அவர்களுக்கென்றே தனியானதோர் அழகிய உலகம் இருந்தது. கேலிப்பேச்சுக்களுக்கும் நையாண்டிப் பார்வைகளுக்கும் புறக்கணிப்புக்களுக்கும் அங்கு இடமிருக்கவில்லை. ஏனெனில் அவர்கள் அனைவரும் ஒத்த இயல்பினராய் இருந்தனர். பிறர் கையை எதிர்பாராமல் தாங்களே தங்கள் சொந்தக்காலில் நிற்பதற்குத் தேவையான சில தொழிற்பயிற்சிகள் அங்கு அவர்களுக்கு வழங்கப்பட்டன. போதியளவு சுதந்திரம் அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தாலும் காப்பகத்திற்கென்றே சில விதிமுறைகளும் இருக்கத்தான் செய்தன. அதனால்த்தான் அக்காப்பகம் இன்றுவரை வெற்றியுடன் இயங்கிக்கொண்டிருக்கின்றது என்பதே உண்மை. என்னதான் அதிக வாய்ப்புக்கள் வழங்கப் பட்டாலும் நமது சமூகக்கட்டமைப்பிலும் அரசியல் அதிகாரத்திலும் உள்ள குறைபாடுகளால் காப்பகத்திலும் பல நெருக்கடிகள் இருக்கத்தான் செய்தன. இதனால் முல்லையும் முதலில் தனது எதிர்காலக் கனவாகப் பாதியிலே நின்றுபோன வைத்தியக்கற்கையைத் தொடர வழியற்று தன்னை இச்சமூகத்தில் நிலைநிறுத்தத் தேவையான பொருளாதார பலம் தேடி தையற்கலையை விருப்புடனும் முனைப்புடனும் கற்கத்தொடங்கினாள்.

சில மாதங்களிலேயே தையற்கலையில் மிகுந்த தேர்ச்சி பெற்ற முல்லை காப்பகத்திற்கு எதிரேயே சிறிய தையற்கடை ஒன்றை ஆரம்பித்து நடத்தத் தொடங்கினாள். பெண்களின் ஆடைகளை மட்டுமன்றி

ஆண்களின் ஆடைகளையும் நன்கு நேர்த்தியாக அவளால் தைக்க முடிந்தாலும் இன்னும் மாற்றம் பெறாத எமது சமுதாயக் கட்டமைப்பால் அவளது கடைக்கு வெளியாட்களின் வரவு மிகக்குறைவாகவே இருந்தது. இதனால் காப்பகத்தினருக்கும் தன்னில் இரக்கம் கொண்டு வெளியிடங்களில் இருந்து வரும் தன்போன்றவர்களுக்குமே அவள் ஆடைகளைத் தைக்க வேண்டியதாயிற்று. எஞ்சிய நேரங்களில் காப்பகத்திலேயே தையற்கலையை ஏனையோருக்குக் கற்பிக்கத் தொடங்கினாள். இதற்காக காப்பக நிர்வாகம் அவளுக்கு சிறுதொகை ஊதியத்தையும் வழங்கியது. என்னதான் இச்சமூகத்தினர் எதிர்ப்புக்களையும் புறக்கணிப்புக்களையும் அள்ளி வழங்கிய போதும் முல்லை தன் முயற்சியில் சோர்ந்து விடாது தையற் கலையில் ஆர்வத்துடன் ஈடுபட்டு நவீன உலகிற்கேற்ப புதிய புதிய வடிவங்களில் வாடிக்கையாளரின் மனங்கோணாமல் ஆடைகளை அவர்கள் விரும்பியவாறே நேர்த்தியாகத் தைத்து வழங்கியமையால் அவளைப்பற்றிக் கேள்விப்பட்டு அக்கம்பக்கத்தில் இருப்போர் மட்டுமன்றி அயற்கிராமங்கள் நகரங்களிலிருந்தும் மக்கள் தமது கீழ்த்தரமான எண்ணங்களைக் குறைத்துக்கொண்டு அவளது கடைக்கு வரத்தொடங்கினர். இதன் விளைவாக இன்ற காப்பகத்தில் இருக்கும் முல்லை போன்ற மேலும் ஐவருக்கு தொழில்வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து ''திருநங்கையர் தையலகம்'' என்ற பெயருடன் பெருங்கட்டடமொன்று அவர்களது அடையாளத்தை இவ்வுலகிற்கு அறிவித்தவாறு தலைநிமிர்ந்து நிற்கின்றது.

உழைப்பில் முன் நிற்பது மட்டுமன்றி சமூகசீர்கேடுகள் பெண்களுக்கெதிரான வன்முறைகள் என எங்கு அநீதி நிகழ்ந்தாலும் அங்கு முல்லை தலமையிலான திருநங் கையர் அணி போர்க்கொடியுடன் நின்றுகொண்டிருக்கும். இவ்விதம் தங்களுக்கான சமூக மதிப்பைத் தாங்களாகவே தேடிக்கொள்ளவும் பாதியிலே நின்றுவிட்ட அவர்களின் கற்கைநெறிகளைத் தொடர்வதற்கு வழிசெய்யும் வகையிலும் பலவிதப் போராட்டங்களை நிகழ்த்தி வெற்றி கண்டனர் முல்லை குழுவினர். தொடர் போராட்டங்களின் விளைவால் ஒருசில உரிமைகளைப் பெற்றுக்கொண்டாலும் தங்கள் மீதான சமூகத்தின் பார்வை இன்னும் மாறவேயில்லை என்பதை பொதுவிடங்களில் நடமாடும் போது அவளால் தெளிவாக உணர முடிந்தது.

என்னதான் இந்த வாழ்க்கைக்கு முல்லை பழகிக் கொண்டாலும் முன்னர் அம்மாவுடனும் தங்கையுடனும் வாழ்ந்த அழகிய தருணங்கள் அவளின் நெஞ்சில் செருகியவளாய் அவ்வப்போது பெருவலியை உண்டு பண்ணவே செய்தது. 'அடி மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்' என்ற ஆசையில் முல்லையும் தன்னிடம் தைப்பதற்கு வாடிக்கையாய் வரும் தன் குடும்பத்தை முன்னரே தெரிந்த ஒருவரிடம் அவ்வப்போது பணமாகவும் பொருளாகவும் தாயாருக்குக் கொடுத்தனுப்பித் தன் பாசத்தை மறைமுகமாக நிரூபித்துக் கொண்டுதான் இருந்தாள். தற்போதும் கொரோனாக்கால ஊரடங்கால் தாயாரினதும் தங்கை யினதும் நிலை என்னவோ ஏதோவென எண்ணியே நடப்பது நடக்கட்டும் என எதற்கும் துணிந்த வளாய் தன் மனதைத் தேற்றியவாறு தான் உழைத்துச் சேமித்த பெருந்தொகைப் பணத்தையும் கொண்டு பயணித்துக் கொண்டிருக்கின்றாள்.

திடீரென 'அம்மா…அம்மா…' எனக்கதறிய ஒரு குழந்தையின் அழுகுரல் கேட்டுத் தன் நினைவுகளில் இருந்து விடுபட்டாள் முல்லை. பேருந்தில் அவளுக்கு எதிரே இருந்த ஆசனத்தில் முல்லையின் வயதை ஒத்த இளைஞனின் கையிலிருந்த குழந்தையே திமிறி அழுது கொண்டிருந்தது. குழந்தையின் தந்தையான அவனது கண்களிலிருந்தும் கண்ணீர். கூடப்பயணித்தோர் என்ன..? ஏது..? என விசாரிக்கையில்த்தான் தெரிந்தது அந்தப் பிஞ்சுக்குழந்தையின் தாய் அண்மையில்த்தான் கொரோனாவால் இறந்திருந்தாள் என்று..இவர்கள் இருவருக்கும் தொற்றில்லை என உறுதிப்பட்டதால் அழும் குழந்தையை அடக்கும் வழியற்று தந்தையும் மகளும் உறவினர் வீட்டிற்குப் பயணிக்கிறார்களாம். இதுவரையும் தூக்கத்திலிருந்த குழந்தை தூக்கம் கலைந்ததும் தாயைத் தேடி அழுகின்றது. சுற்றிநின்று தகவல் கேட்ட அனைவரும் சடுதியில் எட்டவாயாகிப் பேருந்துக்கு வெளியே தங்கள் பார்வையைப் பதித்தனர். குழந்தையோ 'அம்மா…அம்மா..' என வீரிட்டுக் குழறியது. அழுது களைக்கும் குழந்தையைத் தேற்ற யாருமே முன்வரவில்லை. முல்லையால் இக்காட்சியை சகிக்கமுடியாது போகவே திடீரென ஒரு முடிவுக்கு வந்தவளாய் சட்டென அக்குழந்தையைத் தந்தை கையிலிருந்து அள்ளியெடுத்துத் தன் மார்போடு சாய்த்துக் கொண்டாள். தந்தையின் மடியிலிருந்த புட்டிப்பாலையும் எடுத்து மெல்லப் பருக்கத் தொடங் கினாள். குழந்தையும் எந்த சுகத்திற்காக ஏங்கியதோ அந்த சுகமான இதமான தாயின் கதகதப்பான மார்புச்சூடும் அணைப்பும் கிடைத்த பரவசத்தில் தன் பொக்கை வாயைத் திறந்து 'அம்மா…' என அழைத்து ஒரு புன்னகையையும் உதிர்த்தவாறு உறங்கிப்போயிற்று. ஆனால் கூடப்பயணித்த பயணிகளோ எதுவோ

நடக்கக் கூடாதது நடந்தது போல் தங்களுக்குள் குசுகுசுத்தவாறு எழுந்து வந்து புதிதாகப் பதியம் வைத்து மண்ணிலே நாட்டப்பட்ட செடியை வேரோடு பிடுங்கி வேறிடத்தில் நடுவது போல் முல்லையின் அணைப்பில் இருந்த குழந்தையைப் பறித்தெடுத்து அதன் தந்தையிடம் கொடுத்துவிட்டு பேருந்தை நிறுத்தி அவளைத் தெருவிலே தள்ளிவிட்டனர். தெருவிலே வீசப்படுதல் முல்லைக்குப் புதிதல்ல என்றாலும் தன் கழுத்தைப் பிடித்து விரட்டிய அந்தக்கையின் ஸ்பரிசம் உணர்த்தியது அன்றும் இன்றும் தன்னை விரட்டியது ஒரே கைதான் என்பதை. தலைதூக்கிப் பார்த்தபோது ‘பேருந்தில் ஏறியது மட்டுமன்றி அடுத்தவர் குழந்தையைத் தொடுமளவிற்கு வந்திட்டுதுகள் இந்த அரவாணிக்கூட்டம்..’ எனக்கூறியவாறு அமர்ந்திருந்த அவளது தாய் அன்னம் கண்ணீர்த் திரைகளினூடு தென்பட்ட போது அவள் மடியிலிருந்த அவளது சேமிப்புப்பணம் பெருஞ்சுமையாய் அழுத்தியது.

ஒரு குழந்தை தனக்கு அளித்த அங்கீகாரத்தை தன்னைப் பெற்றவளாலும் இந்த சமூகத்தாலும் தனக்குத்தர முடியவில்லையே என ஏங்கி ஏங்கி அழுதவள் வெட்டி வீழ்த்தினாலும் அடிக்கட்டையிலிருந்து மீண்டும் துளிர்விடும் வாழைமரம் போல கண்ணீரைத் துடைத்தவாறு எழுந்தாள். இப்போது அவளது கால்கள் எதிரே தெரிந்த சேரிப்புறம் நோக்கி வீறுடன் நடந்து கொண்டிருந்தன. அங்கும் அதிகமாய் அவள் போன்ற திருநங்கையர்கள் வறுமையுடன் போராடுவதை அவள் அறிவாள். இந்தக் கொரோனாக்காலம் அவர்களுக்கும் பெருந்துயராய் இருக்கும் என்பதை உணர்ந்து அவர்களும் வாழவேண்டும் என்னும் உன்னத உணர்வுடன் அவளது கால்கள் முன்னேறிக்கொண்டிருந்தன. மனமும் கனக்காது மடியும் கனக்காது நகர்ந்து கொண்டிருந்தாள் நங்கையருள் எல்லாம் ‘திரு’ உடையவள் ஆகிவிட்ட திருநங்கையாம் முல்லை.

# வஞ்சிக்கப்பட்ட தேசத்தின் வாழா நேசம்




## சோ. நளாயினி

“நீங்கள் போங்கோ.... வீடு வந்திட்டுது... இனிப் பயமில்லை.... துணைக்கு வந்ததுக்கு நன்றி” வாசுகி சொல்லிக் கொண்டு அப்பொழுதுதான் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

ஒரு சிநேகப் புன்னகையுடன் அவன் நின்றிருந்தான்.... “இப்ப நாடிருக்கிற நிலமையில் ஏன் இவ்வளவு லேட்? வீட்டில் யாரையாவது வரச் சொல்லியிருக்கலாமே? இனி இவ்வளவு பிந்திய நேரம் வெளியில போகாதேங்கோ. சரி கவனமாகப் போங்கோ”.... சொல்லிவிட்டு அவன் காற்றாய் மறைந்துவிட்டான்.

வாசுகி மீண்டும் மனதால் நன்றி கூறியபடி வீட்டுக்குள் நுழைந்தாள்.

தாயைத் தேடிச் சமையலறைக்குள் போனவள்.... அன்று நடந்த விபரீதத்தை விபரிக்கலானாள்....

“அம்மா நான் வகுப்பு முடிஞ்சு வரும்போது நாலைஞ்சு பெடியள் என்னைப் பின் தொடர்ந்து வந்து கேலிபேசிக் கொண்டு வந்தவங்கள். அப்போ ஒராள் வந்து அவங்களைப் வெருட்டிக் கலைச்சுப் போட்டு, என்னைக் கூட்டிக் கொண்டு வந்து விட்டிட்டுப் போனவரம்மா... இண்டைக்கு அப்பா ஏன் வரயில்லை...?”

முகத்தில் கலவரத்துடன் மகளை நோக்கியவள் “அப்பாட சைக்கிள் காத்துப் போட்டுது, அதை ஓட்டிக் கொண்டு உன்னையும் கூட்டி வரத்தான வந்தவர்.... இனி நீ பின்னேர வகுப்புக்கு போகவேண்டாம்... நாடு கிடக்கிற நிலையில படிப்பொண்டுதான் கேடு..... உன்னக் கொண்டு வந்து அந்தக் கடவுள்தான் விட்டிருக்கிறார்...” என்றாள் அம்மா.

வாசுகி மீண்டும் அந்தக் கணத்தை எண்ணிப் பயந்தாள்.

அப்பொழுது கனகசபையும் பதட்டத்துடன் மனைவியை அழைத்தபடி வந்தார்.

“ராணி ராணி பிள்ளை

வந்திட்டாளோ? நான் போகேக்கை அவளைக் காணம்”...

“ஏன் இப்பிடி கத்துறியள் ஊரடங்கு போடுற நேரம்... இனி உந்த ரோட்டால அவங்கட சன்னதம் தான்... ஓம் ஓம்.. பிள்ளை வந்திட்டாள்... இனி அவளைப் பின்னேர வகுப்புக்கு விட வேண்டாம். வெளியில விட்டிட்டு வயித்தில நெருப்பைக் கட்டிக் கொண்டிருக்க வேண்டியதா இருக்கு...” மனதிலுள்ள பாரத்தை கணவனிடம் வெளிப்ப டுத்தினாள் ராணி.

அவரும் மனைவியின் கருத்தை ஆமோதித்து “சரி பார்ப்போம்” என எழுந்தார்.

ஒரு வாரம் சென்றிருக்கும்... வகுப்பு விட்டு நண்பிகளுடன் வந்து கொண் டிருந்தவளுக்கு அவள் கண்களையே நம்ப முடியவில்லை. கடை வாசலில் அந்த சினேகமான முகம். அவள் ஓடிச் சென்று கதைக்க முற்படுகையில் அவனும் அதிர்ச்சியுடன் கூடிய தடு மாற்றத்துடன் “இங்க இப்பிடியெல் லாம் வந்து கதைக்கக் கூடாது.... வீட்டுக்கு நேரத்தோட போங்கோ” என்று விட்டுப் போய்விட்டான். அவள் ஏமாற்றத்துடனும் ஏக்கத்து டனும் பார்த்துக் கொண்டு நின்றாள்.

“ஏன் இப்பிடி? நான் என்ன சொல் லியிட்டன் என்று இப்பிடி பேயக் கண்டது போல ஓடுறார்.... ஒரு நன்றிதான் சொல்லப் போனன்” என்று தனக்குள் முணுமுணுத்தபடி சென்றாள்.

அன்று ஞாயிறு விடுமுறை... எங் கேயோ குண்டு வெடிப்பு நடந்ததால் யாழ் மாவட்டம் முழுவதும் ஊரடங் குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருந்தது. ஒரு குருவி கூடப் பறப்பதாகத் தெரியவில்லை. வீதியெல்லாம் வெறிச்சோடிப் போய்க் கிடந்தது.

உடுப்புக்களைக் கழுவுவதற்காகக் கிணற்றடிப் பக்கம் போனவள் கிணற்றுக்கட்டோடு ஒரு உருவம் மறைந்திருப்பதைக் கண்டு தந்தை யைக் கூப்பிட எத்தனிக்கையில் இரு கரங்கள் அவள் வாயைப் பொத்திச் சத்தம் போடவிடாமல் தடுத்தது.

“சத்தம் போடாதேங்கோ அது நான்” அந்தக் குரல் அவளை தாக்க முகத் தைப் பார்த்தவள் அதிர்ச்சியில் உறைந்து போனாள்.

“நீங்களா? நீங்கள் எப்பிடி இங்க? ஏன் ஒழிச்சிருக்கிறீங்கள்?” கேள்விக ளால் படபடத்தாள்.

“சொல்றன்... இப்ப சத்தம் போடா தேங்கோ. ஆமி சுத்திவளைப்பு நடத்துறாங்கள்... நான் மறைஞ்சு கொள்ள ஒரு இடம் வேணும்” என்று சொல்லிவிட்டு அவள் முகத்தைப் பார்த்தான்.

“சரி என்னோட வாங்கோ” எனக் கூட்டிக் கொண்டே நெல் மூட்டைகள் அடுக்கி வைக்கப்பட்ட அறைக்குள் அவனை விட்டுவிட்டு வெளியே வந்தாள்.

தேடுதல் முடிந்து ஊரடங்கும் வேளையில் அவள் அவனைத் தேடிக் கையில் சாப்பாடும் தண்ணீ ருமாக வந்தாள்.

“அவங்கள் போயிட்டாங்கள் நீங்கள் வாங்கோ. இதைச் சாப்பிடுங்கோ.” மெதுவாக வெளியே வந்தவன் அவள் முகத்தை ஒரு கணம் உற்று நோக்கிவிட்டு ஆசுவாசமாக அமர்ந் தான்.

சாப்பாட்டுத் தட்டை நீட்டினாள் வாசுகி வேண்டாமென்பது போல தலையசைத்துவிட்டு அவளை அருகில் இருத்திதான் எதற்காக வந்தான் என்பதை சொல்லத் தொடங்கினான்.

“என்ர பேர் தெரியுமா?” எனக் கேட்டு அவள் முகத்தைப் பார்த்தான். அவள் தெரியாது என்பது போல தலையசைக்க

“என்ர பேர் மலரவன். நான் களப் பணிக்காக யாழ்ப்பாணத்துக்குள்ள வந்து நிக்கிறன். ஓடர் வரும் போது வன்னிக்குப் போயிடுவன் என்றவனை அவள் அதிர்ச்சியோடு பார்த்தவள்

“நீங்கள் இயக்கமா?” என்றாள்.

“ஏன் இயக்கமெண்டால் பயமோ பிள்ளைக்கு?”

“இல்லை பயமில்லை... ஆனால் இப்ப உள்ள சூழ்நிலைக்குள்ள...” என்றவள் வார்த்தை வராமல் அமை தியானாள்.

“கவலைப்படாதேங்கோ மறுபடியும் எங்கட இடத்தை நாங்கள் பிடிச்சி டுவம். அதுக்குப் பிறகு நீங்கள் நிம்மதியாக வாழலாம். சரி இப்போ தைக்குக் கவனமாக இருங்கோ. நான் போகவேணும். போறன்” என்றெழுந்தான் அவன்.

“போறன் எண்டு சொல்லாதேங்கோ.... போட்டுவாறன் எண்டு சொல்லுங்கோ” அவள் பெரியமனிசி போல சொல் லவும் அவன் ஒரு புன்னகையுடன் இருளோடு கலந்து மறைந்தான்.

இரண்டு வாரங்களுக்கு மேலாக வாசுகி அவனை எங்குமே காண வில்லை. ஆனாலும் வகுப்புக்குச் செல்லும் வீதிகளில் விழிகள் அவனைத் தேடுவதை நிறுத்த வில்லை. தினமும் தேடல் தொடர்ந் தது. அவன் கண்ணில் படவேயில்லை.

ஒருநாள் வகுப்பு முடிந்து வரும்போது, திடீரென்று எதிரில் வந்தவன் “இதை மலரவன் அண்ணா உங்களட்டக் குடுக்கச் சொன்னவர்”

என்று ஒரு என்வலப் கவரை அவளிடம் கொடுத்துவிட்டுப் போய்விட்டான். அவசரமாக வீடு வந்தவள், தன் அறைக்குள் சென்று கவரைப் பிரித்தாள்.

**"அன்பின் வாசுகிக்கு....**

**மலரவன் எழுதிக் கொள்வது....**

**'நான் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறப் போகிறேன். வன்னிக்கு வரச்சொல்லி தலைமையிடமிருந்து ஓடர் வந்திருக்கு. மீண்டும் உன்னை எப்ப சந்திப்பேன் என்பது தெரியாது. சந்திக்காமலும் போகலாம். எம் மக்களுக்காகப் போராட வந்த எங்களுக்குக் காதல் என்பது தேவையற்ற ஒன்றென்றாலும் உன் அன்பு என்னை ஏனோ ஆழமாகப் பாதித்துள்ளது. விதியை நான் நம்புவதில்லை. இருந்தாலும் உன் அன்புக்காய் முதல் முறை விதியை நம்புகிறேன். எனக்கு நீயும் உனக்கு நானும் என்று ஒரு விதி இருந்தால் நிச்சயமாய் உன்னோடு இணைவேன். அதற்காக எனக்காகக் காத்திரு என்று சொல்லப் போவதில்லை. நாளை நான் மரணத்தை தழுவவும் கூடும். நன்றாகப் படித்து நீ நல்ல ஒரு நிலைமையில் இருக்க வேண்டும். இதுவே என் விருப்பம்.'**

**இப்படிக்கு**

**அன்பின் மலரவன்**.

மிகச் சுருக்கமான அக் கடிதத்தைப் படித்து முடித்தவள், அதை முகத்தில் பொத்திக் கொண்டு அழ ஆரம்பித்தாள். எவ்வளவு நேரம் அப்படியே இருந்தாள் என்பது அவளுக்குத் தெரியாது. அம்மா வந்து கூப்பிடவும் தான் சுய உலகிற்குள் வந்தாள். கடிதத்தை மடித்து தலையணைக்கு அடியில் வைத்தவள் ஒரு திட சங்கற்பம் பூண்டவளாய்

"எவ்வளவு காலமானாலும் உங்களுக்காக நான் காத்திருப்பேன்" மனதிற்குள் சொல்லிக் கொண்டாள். முள்ளிவாய்க்காலில் மாண்டவர்கள் போக மீண்டவர்களில் மலரவனும் ஒருவனாகியிருந்தான்.

மலரவன் என்ற சங்கரப்பிள்ளை வினோதன் புனர்வாழ்வழிக்கப்பட்டு தடுப்பு முகாமிலிருந்து வெளியேற அனுமதிக்கப்படுகிறான். நீதிமன்றத்திலிருந்து வெளியே வந்த மலவரன் பார்க்கத் துடித்தது அவன் வாசுகியை. ஆனாலும் அவள் இப்பொழுது எப்படி இருப்பாள்?

"சிலவேளைகளில் அவள் இன்னொருவனுக்குச் சொந்தமாகியிருக்கவும் கூடும். அவனை மறந்திருப்பாளா? இல்லை நினைவில் வைத்திருப்பாளா? பழைய அன்போடு இருப்பாளா?". ஆயிரம் கேள்விகள் மனதைக் குடைந்தாலும் அவளை ஒரு தடவையேனும் பார்க்க வேண்டும் என்றே அவன் விரும்பினான்.

வாசுகி தன்னை மறந்திருப்பாளோ என்று நினைக்கையில் அவன் மனம் வேதனையில் துடித்தது...

ஊரே மாறிப் போயிருந்தது. மனிதர்களும் கூடத்தான். "இப்படியா எம் கனவு தேசம் மாறவேண்டும்" மனதிற்குள் வேதனையுடன் சொல்லிக் கொண்டான்.

"ஐயா இங்க கனகசபையிட வீடெது?"

வீதியால் போனவரின் முகம் பெயரைக் கேட்டவுடன் மாறிப் போனது. அவனை மேலும் கீழுமாகப் பார்த்து விட்டு "நீர் ஆர் தம்பி? எதுக்கு அவற்ற வீட்ட விசாரிக்கிறீர்?"

"நான் வெளியூரிலிருந்து வாறன். கனகசபை வாத்தியாரிடம் படிச்சனான். அவரைப் பார்க்க வேணுமெண்டுதான் வந்தனான். இடங்கள் மாறிப் போயிருக்கிறதால வீட்டக் கண்டுபிடிக்கக் கஸ்ரமா இருக்கு" மனதறிந்து ஒரு பொய்யை சொன்னான் மலரவன்.

"சரி என்னோட வாரும்" என்றவர் ஒரு வீட்டின் முன்னால் நின்றார்.

"மாமி... மாமி" என்றதும்
"ஆர் மணியமோ? என்னப்பு?" என்றபடி ஒரு வயதான பெண்மணி வந்தார்.

"இது எங்கட கனகண்ணையட்ட படிச்ச பொடியனாம்.... நிறைய நாளுக்குப்புறகு வெளியூரிலயிருந்து பார்க்க வந்ததாம். அதுதான் கூட்டி வந்தனனான்."

"வாரும் தம்பி உள்ளுக்கை...."

மலரவன் ஆச்சியைப் பின்தொடர்ந்தாலும் அவன் மனம் வாசுகியைக் காணத் தவித்தது.

"இதில இரும். இந்தா இருக்கிறார் உன்னோட வாத்தியார். அவன் பிள்ளை போனவுடன அவனும் இந்த உலகத்தைவிட்டுப் போயிட்டான்" என்ற ஆச்சி கண்ணைத் துடைத்துக் கொண்டாள்.மாலை போடப்பட்டிருந்த புகைப்படத்தைப் பார்த்தவன் அதிர்ச்சியில் உறைந்து போனான்.

"என்ன நடந்தது" என்று வாய் குளறினான்.

"அதையேன் மோனை கேட்கிறா.... 2007ம் ஆண்டு பெட்டை காணாமல் போனதோட அவனும் நெஞ்சு வலியில போயிட்டான்"

"ஏன் என்ன நடந்தது வாசுகிக்கு" மேற்கொண்டு வார்த்தைகள் வரமறுத்து கண்கள் நிரம்பின அவனுக்கு.

"ஆரோ இயக்கப் பெடியனோட ஒருநாள் வாசுகி நிண்டு கதைச்சவளாம். அதை ஆரோ சொல்லிக்

குடுத்து வந்து பிடிச்சுக் கொண்டு போனாங்கள். அதுக்குப் பிறகு என்ன இடமெண்டில்லை. தேடாத இடமெல்லாம் தேடிக் களைச்சு அவனும் ஏலாமல் போயிட்டான். பிள்ளை இருக்குதோ இல்லையோ எண்டு தெரியாமல் மற்றப் பிள்ளையயாவது காப்பாத்துவம் எண்டு பெடியனை தாய் தன்ர சகோதரங்கஎட்ட வெளிநாட்டுக்கு அனுப்பியிட்டு தானும் மகனோட போயிட்டாள்.”

கிழவி பெருமூச்சு விட்டாள்.

மலரவன் நிமிர்ந்து சுவரில் மாட்டியிருந்த புகைப்படத்தைப் பார்த்தான்.

“இன்னும் உங்களுக்காகவே காத்திருக்கிறன் மலரவன்” என்பது போல வாசுகி புன்னகைத்தபடி நின்றாள் புகைப்படத்தில்

---



வரைதல்: கைலாசநாதன்

# சின்ராசு மாமா

## தீபதிலகை

**மு**குந்தன் ஐந்தாம் வகுப்பு படிக்கிறான். வட்ட முகம்,மாநிறம், உடம்பு கொஞ்சம் பூசினாப் போல சற்று கொழுகொழு என்று இருப்பான். இதனால் எல்லோரும் இவனை ‘அமுல்பேபி’ என்று ஆசையோடு அழைப்பார்கள். படிப்பில் கெட்டிக்காரன். எதனையும் சட்டென்று புரிந்து கொள்வான். வகுப்பில் முன் வரிசையில் இருப்பதால் ஆசிரியர்களுக்கும் இவன் செல்லப்பிள்ளை. பெற்றோருக்கு இவன் மூன்றாவது மகன். இரண்டு அண்ணன்மாரும் இரண்டு தங்கைகளும் இவனுக்கு இருக்கிறார்கள். இருந்தாலும் இவன்தான் பெற்றோர்களுக்கும் விருப்பமான மகன். இவன் இருக்கும் இடத்தில் எப்போதும் கலகலப்புக்குப் பஞ்சம் இருக்காது. உறவினரோடும் அன்பாகப் பழகிக்கொள்வான். சில மாதங்களாக இவை எல்லாம் முகுந்தனை விட்டு மெல்ல மெல்ல விலகிப் போய்க் கொண்டு இருந்தது. இப்போதெல்லாம் அவன் சிரிப்பதையும் மற்றவர்களோடு கலகலப்பாக பேசுவதையும் வெகுவாக குறைத்துக்கொண்டான். படிப்பில் கவனம் இல்லை. வகுப்பில் இருந்தாலும் ஏதோ யோசனையில் இருப்பவன் போல் இருக்கிறான். வகுப்பில் முன் வரிசையில் இருந்தவன்,சில வேளைகளில் சோர்வாகத் தன் மேசைமீது தலை கவிழ்ந்து படுத்துக்கொள்கிறான் . அவன் கண்கள் கலங்கி இருப்பதைப் பார்த்து ஆசிரியர்கள் அவன் உடல்நலம் பற்றி விசாரித்தால் ஒன்றும் இல்லை என்று எழுந்து உடகார்ந்து கொள்கிறான். அண்மைக்காலமாக தனக்கு வயிற்றுவலி என்று சொல்லிக் களிப்பறைக்கும் சென்று விடுகிறான். வெகுநேரமாகக் கழிப்பறையில் உடகார்ந்து கொண்டு நேரத்தைச் செலவிடுகிறான். சில வேளைகளில் காரணம் இல்லாமல் தானாகவே பின் வரிசைக்குப் போய் உடகார்ந்து கொள்வான்.

அன்று அவன் படிக்கும் பாடசாலையில் ஆசிரியர் பெற்றோர் தனித்தனியாகக் கலந்துரையாடும் நாள். பிள்ளைகளின் குறை நிறைகள் பற்றியும் அவர்கள் முன்னேற்றத்துக்கு இன்னும் என்னென்ன செய்யலாம் என்பதைப்பற்றியும் பேசுவார்கள். இதன்படி முகுந்தனின் பெற்றோர்களும் அங்கு வந்து இருந்தார்கள். முகுந்தனின் வகுப்பு ரீச்சரின் பெயர் கமலா. இவர் கணக்கு,ஆங்கிலம், உடல் பயிற்ச்சி போன்ற பாடங்களையும் அவனுக்குப் போதிப்பவர். பிள்ளைகள் வளரும்போது பெற்றோரை விட ஆசிரியர்கள் தான் அவர்களோடு அதிக நேரத்தைச் செலவிடுகிறார்கள். அதனால் பெற்றோர்கள் தம் பிள்ளைகளில் காணாத குறை நிறைகளை தெரிந்து வைத்திருப்பவர்களும் ஆசிரியர்கள்தான். அன்று கமலா ரீச்சர் முகுந்தனைப் பற்றி சொல்ல சொல்ல முகுந்தனின் அம்மாவுக்கும் தான்

அவனில் சில மாற்றங்களைக் கண்டும் அதில் கவனம் எடுக்காமல் சாதாரணம் என நினைத்து அசட்டை யீனமாக இருந்த பொழுதுகள் மனக்கண் முன்னே நிழலாடியது. அவன் வீட்டில் இப்போதெல்லாம் சரியாக சாப்பிடுவதில்லை. விளை யாட்டு கூடி விட்டது அதனால் உடல் மெலிந்து பலவீனமாக, சோம் பலாக இருக்கிறான் என்று மட் டும்தான் அவள் நினைத்துக்கொண்டு இருந்தாள். டாக்டரிடம் காட்டி நல்ல டானிக் வாங்கி கொடுக்க வேண்டும் என்று கணவனிடமும் சொல்லியிருக் கிறாள். செய்யவேண்டும் என்ற பேச்சோடு சரி. கணவரும் தன் பணிச்சுமையில் அவற்றிற்கு முக்கி யத்துவம் கொடுக்கவில்லை.

முகுந்தனுக்கு நேர் மூத்தவன் இளங்கோவன். அவனுக்கும் முகுந்த னுக்கும் இடையே மூன்று வயது வித்தியாசம். அவனும் இதே பாடசா லையில் தான் கல்வி கற்று ஆறாவது வகுப்பு வந்ததும் பெரிய பாடசா லைக்கு மாற்றப்பட்டுத் தற்போது ஏழாம் வகுப்புப் படிக்கிறான். அவன் முகுந்தன் போல் பாடசாலையில் பிரகாசிக்கும் மாணவனாக இருக்க வில்லை. இளங்கோவன் ஒரு சராசரி மாணவன் தான். ஆனால் இவர்கள் எல்லோருக்கும் மூத்தவன் செல்வன். குடும்பத்தின் தலைப்பிள்ளை மிகவும் பொறுப்பானவன். வீட்டில் உள்ள அணைவரிலும் அக்கறையும் பொறுப் பும் உள்ளவனாக இருப்பான். .இத னால் மற்றைய சகோதரங்கள் அவனை பெரியண்ணா என்று கூப் பிட்டாலும், அவனை ஒரு தலைவன் ஸ்தானத்தில் வைத்துப் பயம் கலந்த அன்புடனும் மரியாதையோடும் பழ கிக் கொள்வார்கள். அவன் இளங் கோவன் படிக்கும் அதே பள்ளியில் பதினோராம் வகுப்பு படிக்கிறான். விளையாட்டுக்களில் பங்குபற்றி பல வெற்றிக் கேடயங்களை வாங்கி குவித்து இருக்கிறான். முகுந்த னைப்போல் இவனும் வகுப்பில் முதல்தர மாணவன். தன் அப்பாவை விட அவன் தன் சகோதரங்களின் படிப்பில் அதிக கவனம் செலுத்து வான். இதனால் படிப்பு விடயத்தில் இளங்கோவனுக்கு செல்வனுக்கும் இடையில் எப்போதும் சிறு சிறு பூசல்கள் இருக்கும். செல்வனுக்கு முகுந்தன் மேல் பாசம் அதிகம். இளங்கோவனுக்கு இதனால் முகுந் தன் மேல் பொறாமையும் எரிச்சலும் உண்டு. முகுந்தனை அடிக்கடி சண்டைக்கு இழுப்பான். “எல்லோ ருக்கும் முகுந்தன்தான் செல்லப் பிள்ளை. என்னை விலைக்கு வாங்கி னீர்களா?'' என்று அம்மாவோடும் சண்டை போடுவான்.

பள்ளிக்கூடத்துக் கூட்டத் துக்குப் போய் வந்த பின்பு அம்மா அப்பா செல்வன் எல்லோரும் முகுந் தனைக் கவனிக்க தொடங்கி விட்டார்கள். அவனின் உடலில் வந்த மாற்றத்துக்குக் காரணம் என்ன? என்ற கேள்வியின் விடைக் காக மனதைக் குழப்பிக் கொண்டு இருந்தார்கள். அவனுக்கு வந்து இருக்கும் நோயின் அறிகுறிகளைக் கொண்டு என்ன வியாதி என்பதைக் கண்டு பிடிக்கப் பல பரிசோதனைகள் எடுத்தார்கள். பணம் தான் செலவா னதே தவிர எதையும் கண்டு பிடிக்க முடியவில்லை. டாகடர்கள் அவனின் உடலில் எந்த நோயின் அறிகுறியும் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். ஒரு டாக்டரின் மேல் நம்பிக்கை குறையும்போது வேறு டாக்டர்களை மாற்றி மாற்றிப் பரிசோதனைகள் செய்தும் எந்தவித மாற்றமும் இல்லை. பெற்றோர்களின் கவலை யைக் கண்ட அயலவர்கள் ஏதாவது ‘காத்துகறுப்பு' பிடித்து இருக்கும் கோவிலுக்கு நேத்தி வைத்து பூசா ரியைக் கொண்டு ‘பார்வை' பாருங்கள் என்று சொன்னதும், அம்மா தங்களின் குலதெய்வமான' மாரிஅம்மன் கோவிலுக்குக் கிடாய் ஆடு ஒன்றை நேர்ந்து விட்டு முகுந் தனின் தலையை மொட்டை அடிப் பதாயும் வேண்டிக்கொண்டார். பலன் இல்லை. வகுப்பில் அவன் நல்ல கெட்டிக்காரன் அதனால் யாராவது பொறாமையில் செய்வினை செய்து இருப்பினும் ‘மை' போட்டு பார்த் தால் தெரிந்து விடும் என்று சொன் னார்கள். அதையும் செய்து பார்க்க லாம் என்று அப்பாவின் அம்மா (பாட்டி ) எடுத்துச் சொன்னபோது, மை போட்டுப் பார்ப்பவரைத் தேடி அவர்கள் புறப்பட்டு விட்டார்கள். துணைக்குத் தானும் வருவதாகக் கூறி அம்மாவின் தம்பி சின்ராசு மாமாவும் கூடப் புறப்பட்டு விட்டார். அவர் முகுந்தன் மேல் பிரத்தி யேகமான பாசம் காட்டினார் என் பதை விட அவனைத் தனிமையில் விடக்கூடாது என்பதில் கவனமாக இருந்தார் என்று சொல்லவேண்டும். அப்பாவுக்கும் எப்போதும் லீவு எடுத்துக்கொள்ள முடியாத காரணத் தால் எல்லாவற்றிற்கும் சின்ராசு மாமா தான் அம்மாவுக்கும் பக்க பலமாகத் தேவைப்பட்டார். முகுந்த னுக்கு முன்பெல்லாம் சின்ராசு மாமா என்றால் கொள்ளை பிரியம். அவ ரும் அவனுக்கு விரும்பியதை எல்லாம் வாங்கிக்கொண்டு வந்து கொடுப்பார். மடியில் வைத்துக் கொண்டு உருட்டி விளையாடுவார். அவனின் குழு குழுத்த உடம்பில் அவருக்கு அலாதிபிரியம். அக்கா இவனைக் குழந்தை நட்சத்திரமாக சினிமாவில் சேர்த்து விடலாம் என்பார். இப்போதெல்லாம் முகுந்த னுக்குச் சின்ராசு மாமாவென்றால் பயந்துபோய் மூலையில் ஒதுங்கு கிறான்.

மை போட்டுப் பார்த்தவர் இக் குழந்தை மேல் ஏவல் பேய் ஒன்றை ஏவி விட்டு இருக்கிறார்கள்.

சங்கரப்பிள்ளை பூசாரியிடம் கூட்டிக் கொண்டு போங்கோ அவர் சரியாகக் கண்டுபிடிப்பார். அதன்பின்னர் எல் லாம் சரியாகிவிடும் என்று சொன் னதும் அம்மாவும் சின்ராசு மாமாவும் அவனைக் கூட்டிக்கொண்டு அந்த பூசாரியின் இடத்துக்குப் பயணம் ஆனார்கள்.

அவர் ஒரு பேய்கள் ஓட்டும் பூசாரி அயலூரில் வசித்து வரு கிறார், அவரின் இருப்பிடம் இரு அறைகள் கொண்ட, விசாலமான மண்டபம் கொண்ட ஒரு ஓலை வீடு. அங்கே பல பேர் பேய் ஓட்டும் பூசாரிக்காகக் காத்து இருந்தனர். சிலர் பலதடவைகள் அவ்விடம் வந்து போகிறவர்கள் என்பதை அவர்களின் உரையாடலில் இருந்து புரிந்துகொள்ள முடிந்தது. சிலமணி நேரங்களுக்கு பின் பூசாரியும் வந்தார். வரிசையாக மற்றவர்களை மேலோட்டமாகப் பார்வையிட்டபின் முகுந்தனை அழைத்து தன் முன் இருக்க வைத்தார். ஏதேதோ மந்திரம் சொல்லி வீபூதியால் அவன் மேல் எறிந்து கைகளால் சொடுக்குகள் போட்டு பெரும் குரல் எழுப்பி "இந்தப் பாலகனில் இருக்கும் மோகி னியே வெளியே வா! யார் உன்னை இப் பாலகன் மீது ஏவியது சொல்" என்று பலமுறை கர்ச்சித்தார் . முகுந்தன் எதுவும் பேசாததால் கையில் இருக்கும் வேப்பங்குழையால் முகுந்தனின் தலையிலும் முகத்திலும் அடித்து விட்டு "நாளைக்கு வாருங்கள்" என்று அதட்டிச் சொல்லி அனுப்பினார். இப்போ அம்மாவுக்கும் சின்ராசா மாமா வுக்கும் முகுந்தனை நாளைக்கு கூட்டி வருவதற்கு சொந்த ஊர் போய் திரும்பி வரமுடியாது. ஏதோ ஒரு தங்கும் இடம் வேண்டும். அதனால் அருகே தங்க இடம் தேடினார்கள். அம்மா ஒரு அறையும் முகுந்தன் சின்ராசு மாமா ஒரு அறை யும் என்று இடம் கிடைத்தது. முகுந் தன் சின்ராசு மாவோடு தங்க மறுத்து அடம்பிடித்து அழுதான். "நீங்கள் போய்ப் படுங்கோ அக்கா அவன் பூசாரி வெருட்டி பயந்துபோய் அழு கிறான். நான் அவனைச் சமாதானப்ப டுத்துகிறேன்'' என்று கூறி வலுக்கட் டாயமாகத் தன் அறைக்குள் கூட்டிக்கொண்டு போய் விட்டான். அம்மாவுக்குத் தன் மகனை நினைத்து இரவு முழுவதும் அழுது அழுது கண் சிவந்து விட்டது. சின்ராசு தன் உடன் பிறப்பாக இருந்தபடி யால் தன் பிள்ளைகளில் எவ்வளவு அக்கறை காட்டுகிறான். இந்த இக்கட்டான சூழ்நிலையில் அவனை விட வேறு யார் இந்த உதவியை செய்வார்கள் என்று தனக்குத்தானே பேசியபடி குளிர்ந்த நீரால் முகத்தில் ஏத்தி அடித்து தன் சேலை தலைப் பால் துடைத்துக்கொண்டு மீண்டும் பூசாரி இருக்கும் இடத்துக்குப் போய் விட்டார்கள். பூசாரியும் முகுந்தன் மேல் வீபூதி எறிந்து வேப்பம் குழையால் அடித்துப் பார்த்தார். பதில் இல்லை. அம்மாவைப் பார்த்து "உங்கள் வீட்டில் செய்வினை இருக்கு அதை எடுக்க வேண்டும். அப்போதுதான் இந்த பிள்ளையில் இருக்கும் பேயை ஓட்ட முடியும்'' என்றார். "சரி ஐயா,எப்பொழுது எடுக்க வருவீர்கள். அதற்கு உரிய ஆயுத்தங்கள் என்ன? எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை. எனக்கு என்பிள்ளைக்கு சுகம் வந்தால் போதும்''என்று கண்ணீர் வழியச் சொல்லிக்கொண்டு பூசாரி யின் பதிலுக்காகக் காத்து இருக்கி றாள் அம்மா.

இங்கே வீட்டில் அம்மா இல்லாததால் செல்வனே எல்லாப் பிள்ளைகளின் பொறுப்பையும் கவனித்துக் கொண்டு இருக்கிறான். அம்மா அப்பாவுக்குத் தேவையான எல்லாத் தேவைகளையும் உணர்ந்து அவனே செய்து கொடுப்பதால் அப்பாவும் அவனுக்கு ஒரு பிள்ளை போல் இருக்கிறார். அம்மாவைப் போல் எல்லா பணிவிடைகளை அவனால் செய்ய முடியாவிட்டாலும் ஏதோ சமாளித்துக் கொள்கிறான். சில தினங்களுக்கு முன்பு அவன் தனிமையில் படுத்திருக்கும் போது அவன் மனதில் பொறி தட்டியது போல் சில நிகழ்ச்சிகள் மனதில் நிழலாடியது. எழுந்து உடகார்ந் தவன், நேரே இளங்கோவனின் அறை பக்கம்போய் அவன் என்ன செய்கிறான் என்று எட்டிப்பார்த்தான். தன் அண்ணன் வருவதை உணர்ந்த இளங்கோவன் தன் கைத்தொலை பேசியில் எதையோ உன்னிப்பாகப் பார்த்துக்கொண்டு இருந்தவன் சட் டென்று தொலைபேசியைத் தன் தலையணைக்குக் கீழ் தள்ளிவிட்டு போர்வையால் தன் முகத்தை மூடிக்கொண்டு நித்திரையில் இருப் பவன் போல் பாவனை செய்தான். செல்வன்அதைப் புரிந்து கொண் டாலும் அவனை நிச்சயம் கண்கா ணிக்க வேண்டும் என்று முடிவெ டுத்துக் கொண்டு தன் படுக்கையில் படுத்துக்கொண்டான். ஆனால் தூக்கம் வரவில்லை. கடந்த சில நாட்களாக இளங்கோவன் முகுந் தனைத் தனியாக அழைத்துக்கொண்டு போய் அவனை வெருட்டுவதையும் பயமுறுத்திக் கோவமாக அடிக்கப் போவதையும் பார்த்திருக்கிறான். அதை அவன் கண்டபோதெல்லாம் இருவரும் ஏதோ விளையாட்டில் பிரச்சனையாக இருக்கலாம் என்று எண்ணிப் பாராமுகமாக இருந்து விட்டான். இப்போது அந்த சம்ப வங்களை எல்லாம் மீட்டிப் பார்க்கும் போது இவர்கள் இருவருக்குமிடையே ஏதோ ஒரு ரகசியம் இருப்பதாக அவன் மனம் சொல்லியது. இரண்டு தினங்களுக்கு பிறகு தான் தாங்கள் வீட்டுக்கு வரமுடியும் என்றும் அங்கு

நடந்த விடயங்களையும் பூசாரி சொன்னதையும் அம்மா செல்வனுக்கு தொலைபேசியில் சொன்னபோது அவன் குரல் கேவியது. அழுகையை வலுக்கட்டாயமாக அடக்கிக் கொண் டான். அம்மா வருமுன்பு எப்படியும் இளங்கோவனிடம் இருக்கும் இராகசி யத்தைக் கறந்துவிட வேண்டும் என்று அவன் மனம் துடியாய் துடித்தது. குடும்பமே குழம்பி நின்றபோது இளங்கோவனிடம் பெரிய தாக்கம் இருக்கவில்லை. இது சகோதரப்போட்டியா? இல்லை அவன் தன் மன உணர்ச்சிகளை வெளிக்காட்டிக் கொள்ளவில்லையா? அவனின் நண்பர்கள் சற்று இசக்குப் பிசக்கான சண்டித்தனம் காட்டுப வர்கள். வகுப்புக்குப் போகாமல் சுற்றுவதும் ,சினிமா பார்ப்பது என்று முன்னேற்றம் இல்லாத வெட்டி ஊர் விடலைப் பசங்க. இந்தப் பழக்க வழக்கங்கள் சில மாதங்கள் ஆக இளங்கோவனிடமும் தொற்றிக் கொண்டு இருந்தது. இதுபற்றித் தான் அவனைக் கடுமையாக கண் டிப்பது அம்மாவுக்கு சில வேளை களில் மன சங்கடமாக இருப்பதால் இன்னும் சற்றுப் பொறுமையாக இருப்போம் என்ற எண்ணத்தோடு இருக்கும் அவன் மனதில் இவ னைப்போல் முகுந்தனும் வந்து விடக்கூடாது என்ற எண்ணத்தில் முகுந்தன் மேல் தனி அக்கறை காட்டுவான். இருப்பினும் இளங் கோவனுக்கும் முகுந்தனுக்கும் இடை யில் ஏதோ ஒரு பெரிய இரகசியமான விடயம் உண்டு, வெளிவராத இரக சியங்கள் உலகில் இல்லை. வெளி வராததைத் தான் நிச்சயம் கண்டு பிடிப்பேன் என்ற நம்பிக்கை உணர்வு அவனுக்குள் ஓடிக்கொண்டு இருந்தது.

அம்மாவும் மாமாவும் முகுந்தனும் வீட்டுக்கு வந்து விட்டார் கள். தன் தம்பி சின்ராசு இல்லாது இருந்திருந்தால் தான் முகுந்தனோடு பரதேசம்தான் போயிருப்பேன். தெரி யாத ஊர் அவனின் ஆதரவில்தான் இவனைச் சமாளிக்க முடிந்தது. பூசாரி சொன்னதுபோல் எங்களுக்கு யாரோ செய்வினை செய்து இருக்கினம். வாற அமாவாசைக்கு பின் வருகிற வெள்ளிக்கிழமையன்று பூசாரி இங்கு வந்து செய்வினை தாட்ட இடத்தில் இருந்து எடுத்த பிறகு யார் செய்தது என்றும் சொல் வாராம். இளங்கோவனின் குண மாற்றத்துக்கும் அதுதான் காரணமாம் எங்கட பிள்ளையள் நல்லா வாறதை பொறுக்காத எரிச்சல் பிடித்தவர்கள் யார் என்று வெள்ளிக்கிழமையன்று தெரியும். அதற்குப்பிறகு பாப்போம். அம்மா குமுறித் தள்ளினார். செல்வ னுக்கு இதில் எல்லாம் நம்பிக்கை இல்லை. இருப்பினும் அம்மாவின் மனம் கோணக்கூடாது என்று நினைத்து தலையாட்டி ஆமோதித் தான். அன்று மாலை அப்பாவின் தாயார் வீட்டுக்கு வந்து இருந்தார். நடந்தவற்றை எல்லாம் கேட்டுத் தெரிந்து கொண்டவர் தன் நண்பி சொன்னதாக ஒரு தகவலையும் சொன்னார். பூசாரியும் வரட்டும் அதற்கு இடையில் அந்தோனியார் கோவில் சுவாமி பேய் ஓட்டுறவராம். போன ஆட்கள் வந்து பெரும் புதுமையான செய்திகளை சொல் லுதுகள். நாங்க செவ்வாய்க்கிழமை ஒருக்கா சுவாமியைப் போய் பார்ப்போம் என்றார் . எதை தின்றால் பித்தம் தீரும் என்று மனம் அங்க லாய்க்கும் அம்மாவும் மகனைக் கூட்டிக்கொண்டு போகச் சம்மதித் தாள். அன்று மாலை செல்வன் இளங்கோவனைக் கூட்டிக்கொண்டு சினிமா பார்க்க போவதாயும் போகும் வழியில் கொத்துரொட்டி கடையில் கொத்துரொட்டியும் அதன் பின் சினிமா தியேட்டரில் பாப் கோணும் திரும்பி வரும் வழியில் ஐஸ்கிரீமும் வாங்கி தருவதாக உறுதிமொழி கொடுத்து இருந்தான். இப்போது முகுந்தனும் வந்து விட்டதினால் அவனையும் கூட்டிக்கொண்டு போகும்படி அம்மா சொன்னார். செல்வன் அதற்குச் சம்மதிக்கவில்லை. அவனின் திட்டம் குலைந்து போய் விடும். இளங்கோவனைத் தனி மையில் கூட்டி சென்று அவனோடு அன்பாக பேசி அவனை மகிழ்வித்து அவனிடம் இருந்து சிலவற்றை அறிந்துகொள்ள வேண்டும். அதற்கு முகுந்தன் தடையாக இருக்கக்கூடும். அதனால் “இல்லை அம்மா அவன் இப்போதுதான் வந்து இருக்கிறான் நீங்கள் சொல்வதில் இருந்து அவன் மிகவும் களைப்பாக இருப்பான். நான் இளங்கோவனுக்கு நீங்கள் வரும் முன்பே வாக்கு கொடுத்து விட்டேன். அடுத்த முறை கட்டாயமாக முகுந்தனையும் கூட்டிக்கொண்டு போகிறேன். இம்முறை இளங்கோவன் மட்டும் தனியாக வரட்டும்'' என்றான். இதற்கு இடையில் சின்ராசு மாமா தான் கூட வருவதாக சொன்னார். ‘'இல்லை மாமா படம் கவுஸ்புல் நான் இரண்டு ரிக்கெற்கள் முதலே பதிவுசெய்த படியால் கிடைத்தது. அவரையும் தன் கூட்டுக்குள் வராத படி நகர்த்திக் கொண்டான். செல்வன் தன் அறைக்குள் உடை மாற்ற என்று எழுந்து கொண்டான் . அதற்கு இடையில் சின்ராசுமாமா இளங் கோவனை பார்த்துக் கண்ணசைவில் ஏதோ சொல்லிக்கொண்டே எழுந்து போவதை செல்வன் கவனிக்காமல் இல்லை. தான் அதை கவனித்ததாக அவன் காட்டிக்கொள்ளாமல் அடுத்த முறை நீங்களும் முகுந்தனும் போய் வாருங்கள். நான் ரிக்கெட்டை முன் கூட்டியே பதிவு செயது விடுகிறேன் என்றவன் இளங்கோவனைப் போய் உடுப்பு மாற்றும் படி சொன்னான்.

படம் முடிந்து இருவரும் இரவு வீட்டுக்கு வரும்போது படம்

பார்க்கப் போகும்போது இருந்த உற்சாகம் இளங்கோவனிடம் இருக்க வில்லை. ஏதோ பெரும் தப்பு செய் தவன் போல் பயந்துபோய் இருந் தான். செல்வனோ உடல் வெட வெடத்தபடி எல்லோரிடமும் கோபப் பட்டுக் கொண்டு இருந்தான். அவன் உணவு விடுதிகளில் சாப்பிடுவ தில்லை. அதனால் அம்மா அவனை வந்து சாப்பிடும்படி கூப்பிட்ட போது அம்மாவோடும் கடுமையாகக் கோபித்துக்கொண்டான். "சின்ராசு எப்போ வருவான்? " என்று மரி யாதை கொடுக்காமல் செல்வன் கேட்டதும் அம்மாவுக்கு ஒரே அதிர்ச் சியாக இருந்தது. இளங்கோவனிடம் விசாரித்தபோது அவன் பயத்தில் வாய் அர்த்தம் இல்லாமல் ஏதேதோ உளறியது. அம்மாவும் போய் படுத்துக் கொண்டாள். செல்வனின் கோபத்துக்கு என்ன காரணம் என்ற குழப்பத்தில் அவளும் தூங்க வில்லை. மறு நாள் காலை செல்வன் அவசரமாக இளங்கோவனையும் கூட்டிக் கொண்டு புறப்பட்டுப் போய் விட்டான். சற்று நேரம் கழித்து சின்ராசா மாமா வந்து வீட்டுக்குள்ளே நுழையும்போது அவரின் கண்கள் முதலில் இளங்கோவனை தேடியது. தமக்கையிடம் விசாரித்தபோது அவனும் செல்வனும் காலையில் வெளியில் புறப்பட்டு போய் விட்டதா தகவல் சொன்னார். சின்ராசு மாமா வுக்கு ஏதோ விபரீதம் நடக்கப் போகிறது என்று மட்டும் மனதில் பொறி தட்டியது. அதை வெளிக் காட்டிக் கொள்ளாமல் "முகுந்தன் எப்படி இருக்கிறான். இந்தியாவில் இருந்து ஒரு பாதிரியார் வந்து இருக்கிறார். அவர் தலையில் கைவைத்து ஜெபித்தால் பேய் பிடித்தவர்கள் பெரும் சத்தத்தோடு மயங்கி விழுகிறார்களாம். அவர்கள் மயங்கி விழுந்து எழும்பும் போது நல்ல சுகம் பெற்று எழும்புகி றார்களாம். நடக்க முடியாதவர்கள் எழுந்து நடக்கிறார்களாம். அவர் கண்தெரியாத குருடர்களின் கண்க ளின் மேல் கை வைத்துத் தடவியதும் பார்வை வந்து விடுகிறதாம். நாங் கள் முகுந்தனை இன்று பின்னேரம் ஐந்து மணிக்கு அங்கு கூட்டிக் கொண்டு போய் பார்க்கலாம் அக்கா. நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?" அக்காவின் முகத்தைப் பார்த்துப் பேசிக்கொண்டு குசினிக்குள் இருந்த ஸ்டூல் ஒன்றை இழுத்து அதன் மேல் அமர்ந்தவனுக்கு செல்வன் அவன் பின்னால் வந்தது தெரிய வில்லை. அவன் வந்த வேகத்தில் தன் காலால் சின்ராசு மாமாவின் முதுகில் ஒரு உதை விட்டான். இதை எதிர் பார்க்காத சின்ராசு முகம் நிலத்தில் தேய்த்தபடி சுவ ரோடு போய் அடிபட விழுந்தான். அம்மாவுக்குத் தன் தம்பியை தன் மகன் அடித்து விட்டான் என்ற கவலையில் தன் தலையில் அடித்து அடித்து பெரும் குரல் எடுத்து அழத்தொடங்கி விட்டாள். செல்வனை அடிப்பதற்கு அருகில் ஏதாவது கிடைக்குமா என்று தேடினாள். அதைக் கண்ட செல்வன் அருகில் கிடந்த கத்தியை எடுத்து அம்மாவிடம் நீட்டினான். "நீங்கள் என்னை என்ன வேண்டுமானாலும் செய்யுங்கோ அதற்கு முன்பு இந்த நாய் என் சகோதரங்களுக்கு என்ன செய்து இருக்கிறான் என்று கேட்டு விட்டு நீங்கள் யாரை வெட்ட போகிறீர்கள் என்பதை முடிவெடுங்கோ". இதை சொல்லி முடிப்பதற்குள் வீட்டின் அழைப்பு மணி ஒலித்தது. அப்பா வந்து கதவைத் திறந்தார். அங்கே போலீசார் இருவர் வந்து இருந்தனர். அவர் சின்ராசு எங்கே என்று விசா ரிக்கவும் குசினிக்குள் விழுந்து முண்டியடித்துக் கொண்டு எழுந்து இருக்க முயற்சிக்கும் அவனை அப்பா சுட்டிக் காட்ட கணப்பொழுதில் போலீசார் உள்ளே நுழைந்து சின்ராசுவைப் பிடித்துக் கொண்டனர். எல்லாம் ஒரு நொடிப்பொழுதில் நடந்து முடிந்து விட்டது.

போலீஸ் சின்ராசுவை கூட்டிக் கொண்டு போனபின்பு அப்பா செல்வனிடம் என்ன நடந்தது என்று கேட்டார். "அப்பா அவன் ஒரு பிசாசு. அவன் என் தம்பிமார் இருவரையும் பாலியல் துஸ்பிர யோகம் செய்து இருக்கிறான். அத னால்தான் முகுந்தன் இப்படி ஆயிட் டான். அவன் சின்னப்பிள்ளை. அவனை வெருட்டி யாரிடமாவது சொன்னால் சின்னத் தங்கச்சியை கிணற்றுக்குள் தூக்கி போட்டு விடு வேன் என்று பயம் காட்டி அவனை சீரழித்து இருக்கிறான். ஒருமுறை இரண்டு முறை இல்லை பலமுறை பலாத்காரம் செய்து இருக்கிறான். அதோடு விடவில்லை இளங்கோ வனுக்கும் சீரழிக்கப்பட்ட குழந்தை களின் பாலியல் வீடியோக்களைக் காட்டி காட்டி அவனையும் சீரழித்து விட்டு இதை வெளியில் சொன்னால் நீதான் எனக்கு இந்த வீடியோக்களை கொண்டுவந்து காட்டினாய் என்று உன் அம்மாவிடம் சொல்வேன்,முகுந்தனைப் பற்றி சொன்னால் கட்டாயம் உன் சின்ன தங்கச்சியின் கதை முடியும் என்று பயம் காட்டி இருக்கிறான். அதனால் மனம் குழம்பித்தான் இளங்கோவன் எதிலும் ஈடுபாடு இல்லாமல் மனம் போனபடி நடக்கத் தொடங்கி விட் டான். அவனை வைத்து முகுந்த னையும் வெருட்டி வைத்து இருக் கிறான். அம்மாவுக்கு, அவன் என் தம்பிகள் இருவர்கள்மீதும் அன்பும் அக்கறையும் கொண்டவன் மாதிரி பாசாங்கு காட்டுகிறான் . இது அம்மாவுக்கு தெரியாமல் தன் தம்பி மேல் பாசத்தை அள்ளி அள்ளி பொழிகிறா. அதனால்தான் அம்மா விடமும் சொல்லாமல் இன்று காலை

இளங்கோவனைக் கூட்டிக்கொண்டு பொலீஸ் ஸ்டேசனுக்கு போய் முறைப்பாடு கொடுத்தேன். பாதிக்கப் பட்டவர்களின் முறைப்பாட்டுக்கு முன்னுரிமை உண்டு. அதுதான் பொலீஸ் வந்து அவனை கைது செய்து கொண்டு போகிறார்கள். கண்டிப்பாக ஏழு வருடம் சிறைதான். மேலை நாடாக இருந்தால் ஆயுசுக் கும் உள்ளே கிடந்து சீரழியும் நிலைதான் வந்து இருக்கும். என் இரண்டு சகோதரங்களுக்கும் நல்ல கவுன்சிலிங் தேவை. அப்பா நல்ல டாகடர்கள் யார் என்பதை அறியுங் கள். நானும் விசாரிக்கிறேன். கண்க ளில் ததும்பி நிற்கும் நீரை சுட்டு விரலால் சுண்டி விட்டபடி எழுந்து கொண்டான் செல்வன்.

# சிதிலம்




வசந்ததீபன்

கனவு என்பது புதை சேறா ? இல்லை மரணக் கிணறா? அதனை வரையறுத்துச் சொல்ல வார்த்தைகளோ அல்லது வடிவமாக்கித் தீட்டக் கோடுகளோ இல்லை. அதற்கு இரையாகாத மனிதர்கள் யாரும் இவ்வுலகில் இருக்கிறார்களா ? கனவு மிகப் பெரிய ராஜபோதை. எந்த போதை வஸ்துக்களும் அதனுடன் ஒப்பிடுகையில் கீழானவைகள்தான். ஆனால் போதை வஸ்துக்கள் நின்று உடன் கொல்லும். கனவு அப்படியல்ல மெல்ல ..மெல்ல நிதான மாய் மகிழ வைத்து.வலி யூட்டி வலியூட் டிக் கொல்லும் மெது விஷம்.

கனவுக்குள் வாழ்ந்து கனவாகிப்போன எனது நண்பனை நினைக்கையில் நெஞ்சமெல்லாம் கனத்துப்போகிறது. பெரியசாமி செங்கல் பட்டிற்கு அருகே ஏதோ வானம் பார்த்த கிராமம். சின்ன வயதில் தாய், தந்தையை இழந்து சென்னைக்கு வந்து ஓட்டலில் தஞ்சம் புகுந்து முதலில் மேஜை துடைப்பாளனாக ஆரம்பித்து சர்வராக உயர்ந்தான். அவன் வேலை பார்த்த ஓட்டலுக்குச் சினிமா சம்பந்தப் பட்டவர்கள் நிறையப் பேர் வருவார்கள். இவனும் வருபவர்களிடம் மனம் கோணாமல் நல்லவிதமாக நடந்து கொள்வான். அப்படி வந்தவர்களில் ஒருவர் சினிமாக் கவிஞர். இவனது சுறுசுறுப்பான வேலைகளைகளையும், இன்முகமாய் எல்லோரிடமும் பேசும் தன்மை யையும் பார்த்து அவர் தன்னுடைய உதவி யாளனாக இவனைச் சேர்த்துக் கொண்டார். பள்ளியின் நிழலே அறியாத பெரியசாமியை தமிழில் கவிதை எழுதும் பாண்டித்யம் கொண் டவனாக மாற்றினார். அவரே இவனுக்குத் தமிழ்மணி என்ற பெயரும் சூட்டினார். கவிஞன்

தமிழ்மணி தன் குருவைப் பற்றி பேசுகையில் கண்ணீர் மல்க நெக்கு ருகி தன்னை மறந்த நிலையில் சில கணம் மௌனமாகி உறைந்து போவான்.

தமிழ் சினிமாவில் மிகச் சிறந்த பாடல்களை எழுதியுள்ள தன் குரு எதிர்பாராதவிதமாக இறந்த போது துடித்துப் போன தமிழ்மணி மறு படியும் ஓட்டல் தொழிலுக்குப் திரும்பிப் போகாமல் மற்ற சினிமாக் கவிஞர்களின் நிழல் கவிஞனாகப் பணியாற்றினான்.

அந்த சமயத்தில் தான் நிர்மலாவை அவன் சந்தித்தான். தமிழ்மணியோ பள்ளிக்கூடமே செல்லாதவன்ஆனால் நிர்மலாவோ வேதியல் முதுகலைப் பட்டதாரி. இருவரும் மனம் இணைந்து திருமணம் செய்யும் போது நிர்மலாவின் குடும்பம் எதிர்த்தது. ஆனால் இருவரின் மன உறுதியின் முன் அந்த எதிர்ப்பு நிற்காமல் தகர்ந்தது. நிர்மலாவின் குடும்பத்தினர் மிச்ச மீதி உறவுகளை முறித்துக் கொண்டு சென்றுவிட்டனர்.

நிர்க்கதியான தம்பதி இருவரும் குரோம்பேட்டையில் வீடு வாட கைக்குப் பிடித்து வசிக்க ஆரம்பித் தனர். நிர்மலா வீட்டருகிலிருந்த எலெக்ட்ரிக்கல் சவிட்சு தயாரிக்கும் நிறுவனத்தில் தற்காலிக பணியா ளராக சேர்ந்தாள். கல்யாணம் ஆனவுடன் மற்றக் கவிஞர்களை விட்டு விலகித் தனியாகப் பாட்டெழுத வாய்ப்புத் தேடித் தமிழ்மணி பல இயக்குநர்களையும், தயாரிப்பா ளர்களையும், இசையமைப்பாளர் களையும் சந்தித்துக் கடைசியாக ஒரு படத்தில் வாய்ப்பு கிடைத்தி ருப்பதாகச் சொன்னான். விரைவில் பாட்டுத் துறையில் முத்திரை பதிப் பேன் என மிகுந்த நம்பிக்கையாய் அடிக்கடி சொல்வான். ஆனால் அவனது கனவுகளும் நம்பிக்கைகளும் ஓரிரு மாதங்களில் பொய்த்துப் போனது. ஆம்...ஏதோ ஸ்டுடி யோவுக்கோ அல்லது வேறு எங் கேயோ போய்விட்டு குரோம் பேட் டையில் இறங்கி மின்சார ரயிலின் ஓடு பாதையைக் கவனமின்றி கடக்கையில் எதிர் வந்த விரைவு ரயிலால் அடிபட்டு இறந்து போனான். சினிமா பற்றி அவன் எவ்வளவோ விடயங்கள் சொல்லியிருக்கிறான். அவனோடு பேசும் போது என்னைப் பற்றி நான் சொன்னதைக் கேட்டு ஒருநாள் அவன் , “உன்னோட ஊர்ல பால் கஞ்சா விளையுது... காசு கொட்டோ கொட்டென கொட் டுது..நீ அந்த இடத்தில இருக்குறத விட்டுப்புட்டு..இப்பிடி மனுச பால வனத்துக்கு வந்து சோத்து சிங்கிய டிச்சுக்கிட்டு இருக்க... ஒரு விசயம்... இங்க..சினிமாவுல இருக்குற நிறைய கவிஞர்களுக்கும் மற்றும் கலைஞர்க ளுக்கும் ஒங்க ஊர் கஞ்சா ரெம்பப் புடிக்கும்..ஏன்..என்னோட குரு கூட ரெம்ப விரும்புவார்..” என்று சொன்னான். அவன் சொன்ன கஞ்சா எனும் வார்த்தை எனது மனசைக் கிளறிக் கிளறி என்னைப் பால்யத் துக்குள் தள்ளியது.

அந்தி மலர்ந்து கொண்டிருந்தது. சூரியன் வைக்கப்போர் மலைக்குப் பின்னால் விழப் போகிறது. நகராட் சியிலிருந்து சங்கு கத்தத் தொடங் கியது. காலை 8 மணிக்கும் மத்தி யானம் 12மணிக்கும் மாலை 5 மணிக்கும் இரவு 9 மணிக்கும் என அந்த ஒலி நகரை உசுப்பிக் கொண்டி ருக்கும். அதைக் கேட்டுத்தான் சாப்பிட, வேலைக்கு பள்ளிக்கு போக, தூங்க என நகரமே இயங் கும்.

அந் நகரத்தின் மேற்குத் திசையில் உள்ள வஞ்சி ஓடைக்கு அருகில் ராமசாமி நாயக்கர் தெருவிற்கு தெற்குப் பக்கமாக பரமசிவன் கோவிலுக்குச் செல்லும் சாலையில் இடிந்து கிடந்தது அந்தக் கோவில். கோவிலுக்கு முன்னால் உள்ள மைதானத்தில் ஒரு முறை சைக்கிள் சுற்ற, குடும்பத்துடன் வந்து தங்கி இருபது நாட்கள் சைக்கிளை விட்டு இறங்காமல் இரவும் , பகலும் சுற்றிச் சாதனை செய்து விட்டுப் போனான். அவனுக்கு ஏதாவது பணம் கிடைத் திருக்குமோ ? என்னவோ தெரிய வில்லை. ஏனென்றால் நான் பார்க் கையில் உண்டியல் ஏந்தி வந்த அவனது மனைவிக்கு யாரும் எது வும் போடவில்லை.

எப்போதாவது சில நாடோடிகளும் பிச்சைக்காரர்களும் அங்கு வந்து தங்கி விட்டுச் செல்வார்கள். பயறு தட்டுபவர்கள், காப்பிக் கொட்டை தவச தானியங்கள் காயப்போடுப வர்கள் அங்குள்ள மைதானத்தில் போடுவார்கள். ராட்டினம் போடு பவர்கள் அங்கே வருடத்திற்கு ஒரு முறை வந்து போடாமல் இருக்க மாட்டார்கள். ஆடு வெட்டி வியாபாரம் செய்பவர்கள் அங்குள்ள கிழக்கோர வேப்பமரங்களில் கட்டித்தான் ஆடுகளை உரிப்பார்கள். ஆனால் யாரும் கோவிலுக்குள் மட்டும் போனதில்லை. ஏனென்றால் உள்ளே கோவில் நாகம் உள்ளதென்றும் , உள்ளே உள்ள சாமி உக்கிரமான தென்றும்.. உள்ளே நுழைபவர்களை உயிரோடு விடாதென்றும் இரத்தம் கக்கிச் சாக வைத்திடுமென்றும் பூட கமான வதந்தி உலவியது.

கிறுக்கு மாரியப்பன் மட்டும் அதற் குள் நுழைவார். வெளியே எப்போது வருவார் என்பது இதுவரை யாருக் கும் தெரியாது. அவரது கையில் எப்போதும் ஈய வட்டில் இருக்கும். பத்து இருபது சட்டைகளை ஒன்றன் மேல் ஒன்றாக அணிந்திருப்பார். விரல்களில் அழுக்கும் படிந்து

நகங்கள் நீளம் நீளமாக இருக்கும். கோவணம் கட்டியிருப்பார். எப்பவும் மேலாக துவைத்த சட்டையை அணிந்திருப்பார். அடிக்கடி இடது பெருவிரல் நகத்தோடு சுட்டு விரலை சேர்த்து நெற்றியின் நடுப்பாகத்தில் கிள்ளியபடி இருப்பார். அந்த இடம் பருமாதிரி வீங்கியிருக்கும். யார் எது கொடுத்தாலும் உடனே வாங்க மாட்டார். கொஞ்ச நேரம் தயங்கி படக்கென்று வட்டிலை நீட்டித் தான் வாங்குவார். கையில் எதையும் வாங்க மாட்டார்.

டீக்கடை கருப்பையா அவருக்கு காப்பியை முதலில் கொடுக்காமல் தன்னுடைய வியாபாரத்தை தொடங் கமாட்டார். மாரியப்பன் எப்போது வருவார் என்று காத்திருந்து அவர் வந்ததும் காப்பியை அவரின் வட்டிலியில் ஊற்றி விட்டுத் தான் மற்றவர்க்குக் கொடுப்பார்.

கிறுக்கு மாரியப்பன் என்ற பெயர் அவருக்கு வந்தது எப்படி? என்று யாருக்கும் தெரியாது அல்லது இதுதான் அவரின் நிஜப்பெயரா ? என்பதும் அறிந்தவரில்லை. அவரைப் பற்றிய பல கதைகள் அங்கு உல வின. ஊரில் பல கடைகளிலும் , வீடுகளிலும் அவரைப் படம் பிடித்து வைத்து வழிபட்டார்கள். இது வரை யாரிடமும் காசு கேட்டு அவர் நின்றதில்லை. யாராவது தப்பித் தவறி அவரது வட்டிலில் போட்டு விட்டால் திருப்பி அவர்கள் மேலே வீசி விடுவார்.

குழந்தைகள் எப்போதும் அவரைச் சுற்றியே இருப்பார்கள். அவர்களிடம் ஏதாவது விளையாட்டு காட்டியபடி இருப்பார். அதிகம் பேச மாட்டார். ஆனால் ஏதாவது வாசகங்களைக் சொல்லிக் கொண்டே இருப்பார். என் காதிலும் சில விழுந்திருக்கின்றன. அவைகளை இப்போது நினைக் கையில் அதிசயமாகவும் ஆச்சரிய மாகவும் இருக்கிறது "சாமி புதர்.. பொழப்பு மஞ்சட்டி..மனுசப்பய பலூ ன்...மனசோ மினூட்டாம் பூச்சி.....

அவர் யாரையும் பார்த்து நேருக்கு நேர் சொல்லமாட்டார். வானத்தைப் பார்த்தபடி சொல்லுவார். உடனே இருக்கும் இடத்தை விட்டு வேக வேகமாக புறப்பட்டு விடுவார். நான் தூரமாக நின்று பார்ப்பேனே தவிர நெருங்கி போக மாட்டேன். எல்லோ ரும் அவர் மீது ஊதுபத்தி வாசனை வீசுவதாகச் சொல்வார்கள்.

மத்தியான வேளைகளில் ஆடுபுலி ஆட்டம் ஆடிடும் கூட்டம் அக் கோவிலின் கிழக்குப் பகுதியில் இருந்த வரிசை வேப்பமரங்களின் கீழாகக் கிடக்கும் நீளப் பட்டிகைக் கல்லை ஆக்கி ரமித்திருக்கும். சிறுவர்கள் லாக் கிழித்து குண்டு விளையாடும் இடமும் அங்கே இருந்தது. செம்போத்துப் பறவை ஒன்று அருகிலிருந்த ஏல விவசா யிகள் சங்கக் கட்டிடத்திற்குள்ளி ருக்கும் இலவ மரத்திலிருந்து கத் தியது. செம்போத்துப் பறவையைப் பார்த்தால் அதிர்ஸ்டம் என்று யாரோ சொன்னது என் நினைவிலாடியது. நான் அங்கு போனபோது நண்பர்கள் கிருஸ்ணன் , ராமதாஸ் , மாணிக்கம் அர்ச்சுனன் வந்திருந்தார்கள். எல்லோ ரும் நடு வேப்பமரத்தின் கீழ் அமர்ந்திருந்தார்கள். என்னைப் பார்த்ததும் சந்தோஸமாய் கை அசைத்து வரவேற்றார்கள். வெங்க டாசலம் தென்னஞ் சோகையில் கிடுகு பின்னிக் கொண்டிருந்தார். கொஞ்சம் தள்ளி அவரது அம்மா காலை நீட்டி அமர்ந்து வெத்தலை உரலை இடித்துக் கொண்டிருந்தார். பரமனின் நாலு வயதுப் பையனை மண்ணில் விளையாடுவதற்கு வைது கொண்டும் இருந்தார்.

வெங்கடாசலத்திற்கு மூன்று இளைய சகோதரர்கள் பரமன் , பழனி தவிர நடராஜன் என்ற தம்பியும் இருந்தார். இப்போது நடராஜன் எங்கே என்பது யாருக்கும் தெரியாது.

அவர் தான் அந்தக் குடும்பத்தில் பள்ளிக்கூடம் போனவர். இறுதி வகுப்பை முடித்து விட்டு ஐ.டி.ஐ.யில் சேர்ந்து டர்னர் படிப்பை முடித்தார். அவரது குடும்பத்தில் படித்த முதல் ஆள் என்பதால் அவரிடம் மதிப்புடன் எல்லோரும் நடந்தார்கள். அண்ணன் கள் அவரை ஒரு போதும் டேய் போட்டுக் கூப்பிடமாட்டார்கள். தம்பி அவங்க...தம்பி அவங்க... என்பார்கள். நடராஜனுக்கும் தன் மனதில் குடும் பத்தைப் பற்றிய கவலை கண்ணில் விழுந்த துரும்பாய் உறுத்தியபடி இருந்தது. பாரம்பரியமாக மரமேறிப் பிழைக்கும் தன் குடும்பத்தில் தானாவது படிச்சு வேலைக்குப் போகணும் என்ற பெற்றவர்களின் எதிர்ப்பார்ப்பைப் பூர்த்தி செய்ய முடியவில்லையென தினமும் வாட்ட முடன் அலைந்து ஐந்து வருடங்க ளைக் கழித்தார். அவரிடம் வெறுமை யும் தனிமையும் கூடாத பழக்கங்களை கொண்டு வந்து சேர்த்தது. உட்கார்ந் திருந்த மாணிக்கம் வேகமாக எழுந்து போனார். போன வேகத்திலே திரும்பி வந்த போது அவரின் கையில் சிசர் சிகரெட் பாக்கெட் , கடலை மிட்டாய் , பொரிகடலை , பிஸ்கெட் , ஓமப்பொடி என இருந் தன.

நீல நிறத்தில் தாடி தொங்க கொண்டை வைத்திருந்த ஒரு நீள வாலுள்ள குருவி கோவில் முன் இடிந்து கிடந்த மதிலின் மேல் வந்து அமர்ந்தது. ராம்தாஸ் சிக ரெட்டுகளைப் பாக்கெட்டிலிருந்து வெளியே எடுத்து கிருஸ்ணனிடமும் பாக்கியத்திடமும் கொடுத்தார். இரு வரும் அவற்றிலிருந்து தூள்களை

மொத்தமாக உதிர்த்துக் குவித்தனர். ராசப்பன் தன் அண்டர்வேரிலிருந்து பொட்டலத்தை எடுத்துக் காகிதத்தைப் பிரித்து உள்ளிருந்து பச்சை நிறப் பொருளை அத்தூளில் கொட்டிக் கலந்தார். நான் கிருஷ்ணனிடம் அது என்னண்ணே என்றேன். அதற்கு அவர் கஞ்சா என்றார். நீலப்பறவை திடீரென்று பறந்து போனது. நண் பர்கள் கலந்த தூளைச் சிகரெட்டில் அடைத்துப் புகைத் தொடங்கவே எனக்கு மூச்சை அடைத்துக் கமறத் தொடங்கியது. கிருஸ்ணன் இரண்டு பிஸ்கட்டுகளையும் கொஞ்சம் பொரி கடலையும் என் கையில் திணித்து விலகிப் போய் உட்காரச் சொன்னார். அதை வாங்கிக் கொண்டு கிடுகு பின்னிக் கொண்டிருந்த வெங்கடா சலத்திற்கு அருகில் வந்தேன். மிகுந்த வேதனை கொண்டது போல் அவரின் முகம் வாடியிருப்பது என் னைப் பார்க்கையில் தெரிந்தது. என்னிடம் ஏதும் பேசாமல் அவர் தன் வேலையில் கவனமாய் இருந் தார். குளுமையான காற்று வீசியது. பொழுது மங்கிக் கொண்டிருந்தது. சிறிது நேரத்தில் என் நண்பர்கள் என்னிடம் சொல்லிவிட்டுப் போனார்கள். அதுவரை பேசாமலிருந்த வெங்கடாசலம் அவசர அவசரமாகப் பேசத் தொடங்கினார்.. “ஏம்பா.. நீ சின்னப்பையன்.. இவன்களோட சுத்தித் திரியுற.. அயோக்கியப் பயலுக. இவனுக...என் நண்பர்களைப் பற்றி அவர் இப்படிச் சொன்னதும் நான் திடுக்கிட்டுப் போனேன்.

வெங்கடாசலத்தின் மனைவி காப்பி கொண்டு வந்தார். கிடுகு பின்னுவதை நிறுத்திவிட்டு , இன்னொரு தம்ளர் கொண்டு வருமாறு தன் மனைவியிடம் கூறிவிட்டு என்னிடம் சொல்ல ஆரம்பித்தார் வெங்கடாசலம்... “படுபாவிப் பயக..ஏந்தம்பி நடராஜனுக்கு கஞ்சா வுடன்..கழுதை விட்டயக் கலந்து கொடுத்து விட்டுட்டா னுக..அதக் குடிச்ச அவன் கிறுக்குப் புடுச்சு..எத்தனையோ வைத்தியம் செஞ்சும் குணமாகாமல்..ரெண்டு வரு ஸம் இங்க..அங்க.. சுத்தித் திரிஞ்சு.. இப்போ..எங்க.. போனான்னு தெரியல்ல... அஞ்சு வருடமாச்சு ” என்றபடி குரல் கம்ம மௌனமானார். நான் எதுவும் பேசாமல் வீட்டிற்குப் போனேன். இரண்டு நாட்களாக கோவில் பக்கம் நான் போகவில்லை. மூன்றாவது நாள் மாலை 5 மணியளவில் பள்ளிக் கூடத்திற்கு போய் விட்டு திரும்பி வந்து கொண்டிருந்தேன். ஏலவிவசாயிகள் சங்கக் கட்டிடத்தைத் தாண்டி மேற்குப் பக்கமாக ஆட்கள் கூட்டமாக ஓடிக் கொண்டிருந்தார்கள். நானும் அவர்களோடு கலந்தேன். பாழடைந்த கோவிலுக்கு வடக்காக முன் மதில் இடிந்து கிடந்ததின் மேல் யாரோ படுத்துக் கிடந்தார். அவருக்கு 40 வயதிருக்கும். அவரைச் சுற்றி ஆட்கள் கசகசவென பேசிக் கொண்டு நின்றிருந்தார்கள். கூட்டத்தை விலக்கி விட்டு விலகி ரோட்டுக்கு வந்தேன். நின்றிருந்த பரமன் தான் கோவிலுக்குள் செத்துக் கிடந்தவரைப் பற்றி.. “அச்சு முறுக்கு போடும் முனியாண்டியாம்... தொழில் முடங்கி கஸ்டத்துல இருந்த போது.. முன்னூறு ரூபாய் கிடைக்கும் என்ற ஐஸ் வேலுவின் ஆசை வார்த்தையில மயங்கி டொம்புச்சேரிக்குப் போய் குடும்பக் கட்டுப்பாடு ஆப்ரேஸன் செய்து விட்டு வந்தாராம். ஒரு வருடம் வரைக்கும் எந்த பிரச்சனையும் இல்லாமலிருந்தவருக்கு திடீர்னு வயித்தவலி வந்து தாங்கமுடியாம இரவும் , பகலும் இம்ஸைபட்டாராம்....அவரும் போகாத ஆஸ்பத்திரியில்ல..திங்காத மருந்தில்ல..வயித்தவலி தீர்ந்தபாடில்ல.பொறுத்து..பொறுத்து.. கடைசியாக பகடோனைக் குடிச்சுட்டு..எப்போது வந்து படுத்தாருனு தெரியல...காலையில் தான் ஆளுக பாத்துருக்காங்க..இடது கன்னத்தில் எறும்புக் கரும்பிருச்சு...” என்று சொன்னார். தலைவிரி கோலமாய் சின்ன, சின்னப் பிள்ளைகளை இழுத் துக்கொண்டு ஒரு பெண் அலறியபடி ஓடி வந்தாள். அவள் முனியாண்டியின் மனைவியாயிருக்கலாம். அவள் பின்னால் ஆண்களும், பெண்களும் ஓடி வந்தார்கள். பாழடைந்த கோவிலைப் பார்த்தேன். அது கூடடைந்த பறவை கண்மூட ஆரம்பிப்பது போல தென்பட்டது.

## ஜெயகாந்தனின் பாத்திரங்கள்

**எழுத்தாளர்கள தங்கள் நிலையில் நின்று கொண்டு பெண்களைப் பார்த்தார்கள். ஜெயகாந்தனோ தன்னை முற்றிலும் தன்னிடமிருந்து விலக்கிக்கொண்டு சம்பந்தப்பட்ட பெண்பாத்திரங்களின் நாடி நடம்புகளில் ரத்த நாளங்களில் ஆன்மாக்களில் இரண்டறக் கலந்தார். ஜெயகாந்தனின் சிந்தனை அவர்களைப் பேசவைத்தது. அவரது குமுறல் அவர்களைக் கொந்தளிக்க வைத்தது. அவரது கொந்தளிப்பு அவர்களை வீராங்களைகளாக்கியது. பஞ்சைகள் பராரிகள் பிச்சைக்காரர்கள் கூலித் தொழிலாளர்கள் விலைமாதர்கள் ஒடுக்கப்பட்டோர் ஒதுக்கப்பட்டோர் ஏன் வெறுக்கப்பட்டோர் என அனைவரையும் கதை மாந்தர்களாக கௌரவித்தார்.**

# புரிதல்






ஆர்த்திகா

அதுவொரு இனிய பௌர்ணமி இரவுப் பொழுது. ரம்மியா நிலவை வெறித்துப் பார்த்தபடி உட்கார்ந்து இருந்தாள். தனது வாழ்நாட்களில் தனது பெயரில் இருந்த ரம்மியத்தை அவள் நிலவில் கண்டது தான் அதிகம். ஆனால் இன்று முதன் முறையாக நிலவு அவளுக்கு எரிமலைக் குழம்பாக உஸ்ணத்தைக் கக்கியதாக உணர்ந்தது அவள் மனம். நிலவு உஸ்ணத்தைக் கக்கவில்லை. அவள் மனமே எரிமலையாக வெடித்துக் கொண்டிருந்தது என்பதே அவள் மனம் உணராத உண்மை.

“ஏன் அவன் இண்டைக்கு இப்பிடிச் சொன்னான்? நான் அவனை எவ்வளவு நம்பினன். ச்சே... இவ்வளவு தான் காதலா?... இது மனசப் பாத்து வந்த காதல் எண்டைக்கும் தோற்காது எண்டு எவ்வளவு பெருமைப் பட்டன். கடவுளால ஆசீர்வதிக்கப்பட்ட ஜென்மமா உணர்ந்தன். கடைசில இப்பிடிச் சொல்லிட்டுப் போட்டானே!..... அவன் ஈஸியா சொல்லிட்டுப் போட்டான். நான் தான் இங்க புலம்பிக் கொண்டு இருக்கிறன்..... என்னத்த தான் சொன்னாலும் எவ்வளவு கோபப்பட்டாலும் நான் அவனை மனசாரக் காதலிச்சது உண்மை தானே! அப்பிடி இருக்க அவனை மாதிரி இத என்னால எப்பிடிச் சின்ன விசியமா எடுத்துக் கொள்ள ஏலும்?.....

“இவ்வாறு புலம்பிக் கொண்டிருந்த ரம்மியாவின் மனம் பெருமூச்சொன்றை விட்டபடி முன்னைய நினைவுகளுக்குள் மூழ்கியது.

அவன் பெயர் கணேஸ். ரம்மியாவின் தெருவில் வசிப்பவன். அழகன் என்று சொல்லுமளவிற்கு இல்லாவிட்டாலும் பார்ப்பவர்கள் மனதில் ஒரு சாந்தம் வரக்கூடியளவிற்கு வாட்ட சாட்டமாக இருப்பான். தீய பழக்கங்கள் எதுவும் கிடையாது. சிறந்த குணங்கள் அனைத்தையும் கொண்டவன். எந்தவொரு இடத்திலும் எந்த வேலையானாலும் பிரதிபலன் பார்க்காமல் முகஞ் சுழிக்காமல் முன்னின்று செய்வான். நேர்மை நியாயமே அவனது வழி.

ரம்மியாவும் பெண்மைக்குரிய அனைத்து சிறந்த பண்புகளையும் கொண்டவள். எந்தவொரு விடயத்திலும் எடுத்தவுடன் தலையை நுழைக்கமாட்டாள். ஆனால் சிந்தித்து அது சரி என்று உறுதி செய்தாள் எனின் முதல் வேலையாக அதை முடித்துவிட்டுத் தான் மறு வேலை பார்ப்பாள். இவளது வழியும் நேர்மையின் வழி தான்.

காந்தங்களில் தான் எதிர்முனைகள் ஒன்றை ஒன்று கவரும். ஆனால் எண்ணங்கள் அப்படி அல்லவே! ஒத்த எண்ணங்கள் ஒத்த எண்ணங்களைக் கவருவது தானே வழமை.

இவ்வாறே இருவரது எண்ணங்களும் ஒருவரை ஒருவர் கவர்ந்து இழுத்தது. அவளது காதலை அவளின்

பார்வை கொண்டே அறிந்து கொண்ட கணேஸ் அவள் தன்னை ஏற்றுக் கொள்வாள் என்ற முழுமையான நம்பிக்கையுடன் தன் காதலைத் தெரிவித்தான்.
அவனுக்கும் தன்னைப் பிடிக்கும் என்பதை அறிந்திருந்த ரம்மியா இவ்வளவு வேளைக்குக் காதலைச் சொல்வான் என்பதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. அவள் படித்துக் கொண்டிருந்தாள். அவனும் கூடப் படித்துக் கொண்டு தான் இருந்தான். எங்கே அவன் தன் படிப்பை நிறுத்தச் சொல்லிவிடுவானோ? தன் கனவுகள் எல்லாமே கனவாகவே கரைந்து போய்விடுமோ? என்ற பயம் அவளுக்குள் இருந்தாலும் தான் காதலிப்பவன் காதலைச் சொல்லும் போது அவளால் ஏற்றுக் கொள்ளாமல் இருக்க முடியவில்லை. உடனேயே அவளும் சம்மதம் தெரிவித்துவிட்டாள்.
அதன் பின்னரான நாட்களில் தான் காதல் என்றாலே அத்தனை அவஸ்தை என்பதை அவள் அறிந்து கொண்டாள். காத்திருப்பதும் ஒற்றைப் பார்வைக்காக ஏங்குவதும் கதைகள் பேசத் துடிப்பதுமாய் சுகமான வலியுடன் நாட்கள் நகர்ந்தன.
இருவரும் தங்கள் கனவுகளைப் பரிமாறிக் கொண்டனர். இருவர் கனவுகளுக்கும் ஏற்றாற் போல தங்கள் எதிர்காலத் திட்டங்களையும் வகுத்துக் கொண்டனர். அவளது தற்போதைய படிப்பு முடிய திருமணத்திற்கும் திருமணத்தின் பின்னர் கூட தொழிலையும் படிப்பையும் தொடர்வதற்கும் அவன் பச்சைக் கொடி காட்டி அவளுக்கு முழு நம்பிக்கையைக் கொடுத்தான்.
உள்ளுக்குள் தான் ஒரு பெண் என்ற ஏக்கம் பெண்ணால் ஒரு கட்டத்திற்கு மேல் கனவை நோக்கிப் பயணிக்க முடியாமல் போய்விடுமே என்ற கலக்கம் என்பவற்றைக் கொண்டிருந்த அவள் தன் வாழ்வு முழுவதும் வசந்தம் வீசுவதை உணர்ந்தாள். அவன் மனது மிகவும் சுத்தமானது அவன் மிகவும் நல்லவன் என்பதை உளப்பூர்வமாக உணர்ந்தாள்.
அவனுக்கு எப்போதும் சிறந்த மனைவியாக அவன் கூடவே இருந்து அவனைத் தன் குழந்தை போலப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டாள். "நீ என்னை என்ர அம்மா மாதிரிப் பாத்துக் கொள்ளு வியாடி" என்று அவன் கேட்கும் போதெல்லாம் அவன் தலையைக் கோதி நெற்றியில் ஒரு முத்தமிட வேண்டும் என்பது போன்ற தாய்ப்பாசம் அவளுள் எழும். ஆனாலும் என்றும் அவனோ அவளோ தம் எல்லை தாண்டியது கிடையாது. அந்த நேரங்களில் எல்லாம் "நீ எப்பவும் என்ர குழந்தை தான்டா" என்று கூறி முகஞ் சிவப்பாள் ரம்மியா.
இருவரும் சந்திக்கும் வேளைகளில் அன்று நடந்த நிகழ்வுகள் கனவுகள் பற்றித் தம்மை மறந்து கதைத்துக் கொண்டிருப்பார்கள். அந்த வேளைகளில் எதிர்பாராமல் அவன் கை தன் மேலோ தன் கை அவன் மேலோ பட்டால் கூட சற்று தள்ளி உட்கார்ந்து கொள்வாள் ரம்மியா. கணேசும் ஒருபோதும் அதைத் தவறாக எண்ணியதோ அதற்காக முகஞ் சுழித்ததோ கிடையாது. புன்சிரிப்புடன் அவள் பெண்மையின் பண்பை இரசிப்பான்.
நிலவை வெறித்தபடி முதலில் இருந்து முழுவதையும் நினைத்துப் பார்த்த ரம்மியாவின் மனது கொஞ்சங் கூடச் சமநிலையில் இல்லை. மீண்டும் மீண்டும் குமுறிக் கொண்டே இருந்தது.
"இவ்வளவு உயிராக் காதலிச்ச அவனின் வாயில இருந்து எப்பிடி?..... காதலிக்க ஆரம்பிச்சதில இருந்து ஒரு நாள் கூட அவன் என்னைக் காதலி எண்டு சொன்னது கிடையாது. எப்பவும் பொண்டாட்டி எண்டு தானே கூப்பிடுவான். நான் கூட அவனக் காதலனா இல்லாம கணவனாத்தானே பாத்திருக்கிறன்.... ஏன் கடவுளே இவ்வளவு நடந்தாப் பிறகும் என்னை உசிரோட வைச்சிருக்கிறாய்?...... அந்தக் கணமே நெஞ்சு வெடிச்சு செத்திருக்கக் கூடாதா?...... " இவ்வாறு ரம்மியாவின் மனம் வேதனைப்பட்டுக் கொண்டிருக்க அவள் கண்களில் இருந்து இரு மகா சமுத்திரங்களே புறப்பட்டு வந்து கொண்டிருந்தன.
கொஞ்ச நாளாக அவனில் சில மாற்றங்கள் இருப்பது அவளால் புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. அவளைக் கூடியவரையில் விலத்தி விலத்திக் கதைப்பதை உணர்ந்த அவளுக்குள் நிறைய வலிக்கும். இருந்தாலும் ஏதாவது காரணம் சொல்லித் தன்னைத் தானே சமாதானப் படுத்திக் கொள்வாள். ஏனெனில் அவள் உள் மனம் அவன் தூய அன்பை முழுமையாகப் புரிந்து வைத்திருந்தது.
இவ்வாறு சற்று விலகி நடந்து கொண்டிருந்தவன் அன்று ரம்மியாக்குள் மிகப் பெரிய இடியை சர்வ சாதாரணமாக இறக்கி விட்டிருந்தான்.
"ரம்மியா இஞ்ச பார் இந்தக் காதல் எல்லாம் பொய்யிடி... என்ர பிரண்ட் ஒருத்தன் ஒருத்திய பத்து வருசமா லவ் பண்ணினான். அவளும் அவனைக் காதலிச்சாள். ஆனா கடைசில ஒரு கிழமைல அவள் அவனத் தூக்கி எறிஞ்சிட்டுப் போட்டாள்டி.... நானும் ஒரு கிழமையா யோசிச்சன். அதான் சொல்றன் காதல் எல்லாம் போலிடி... நட்பு தான் உண்மை. நாங்க எப்பவும் நல்ல பிரண்ட்ஸா இருப்பம்டி... உனக்கு எப்பவும் நல்ல பிரண்டா உன் கூடவே இருப்பன்டி... ஆனா இந்தக் காதல் எல்லாம் வேண்டான்டி.... "

இவ்வளவையும் ஒரு மூச்சில் கூறி முடித்தான் கணேஸ். அவளுக்கு எல்லாம் இருண்டு தலையைச் சுற்றிக் கொண்டு வந்தது. “ஏன் இப்பிடி சொல்லுறாய்?... ” என்று அழ வேண்டும் போல இருந்தது.

“நான் உன்னை தூக்கி எறிஞ்சிட்டுப் போடுவன் எண்டு சொல்ல வாறியா?...” என்று கத்த வேண்டும் போல இருந்தது. ”இவ்வளவு தான் உன் காதலா?.... ”என்று ஏச வேண்டும் போல இருந்தது. இறுதியாக ”தயவு செய்து என்னை விட்டுட்டுப் போய்டாத ” என்று காலில் விழுந்து அழுதால் என்ன என்று இருந்தது. எதுவும் செய்ய முடியாதவளாய் சிலை போல நின்றாள். கண்கள் பொங்கி வழிந்திருந்தது. வாய் துடித்துக் கொண்டிருந்தது. வார்த்தை எதுவும் வரவில்லை. ஒரு வேளை விளையாடுகிறானோ என்று கூடத் தோன்றியது. அவள் முகம் ஆயிரம் கேள்விக் கணைகளை கணேசை நோக்கி வீசிக் கொண்டிருந்தது.

“நீ இத எப்பிடி எடுத்துக்கிறியோ தெரியல. நீ என்னை என்ன நினைச்சாலும் பரவாயில்ல ஆனா உன்ர நன்மைக்கும் சேத்துதான் சொல்லுறன் கேட்டியோ?” கணேசனின் அசண்டையீனமான இந்த வார்த்தைகளைக் கேட்க ரம்மியாவின் இதயம் அனலின் நடுவில் இடப் பட்ட புழுவாய் துடித்தது.

“என்ர நன்மையா?.. இதில என்ர நன்மை என்ன இருக்கு எண்டு நினைக்கிறியள்?...” ரம்மியாவின் வாயிலிருந்து வார்த்தைகள் வந்து வெடித்தன.

“இஞ்சை பாரு ரம்மியா.... ”

பொண்டாட்டி என்றழைக்கும் அவன் வாயிலிருந்து வந்த இந்த ஒரு வார்த்தையே அவள் இதயத்தை சுக்கு நூறாக்கிப் பிய்த்து எறியப் போதுமாக இருந்தது.

“ஏய் ரம்மியா இஞ்சை பாரு... உன்னை நான் காதலிக்கிறன் எண்டு கூட்டிக் கொண்டு போய் எங்கட அம்மாக்கு முன்னால நிப்பாட்டேக்க என்ர அம்மா உன்னைப் பிடிக்கல எண்டு சொல்லிட்டாலோ இல்ல உன்னைப் பிடிக்காம எனக்காக பிடிக்குது எண்டு சொல்லிட்டாலோ என்னால தாங்கிக்கேலாதுடி....”

கணேசனின் வாயிலிருந்து வந்த இந்த வார்த்தைகள் ஒவ்வொன்றும் ஆயிரம் நச்சு அம்புகளை அவள் இதயத்திற்குக் குறி வைத்து அனுப்பின.

இது காதல் இல்லை நட்பு எனக் கூறியவனிடம் தான் உளப்பூர்வமாக அவனது மனைவியாகவே வாழ்ந்து முடித்துவிட்டதை அவள் எவ்வாறு கூறுவாள்?.... அதை எப்படி அவனுக்குப் புரிய வைப்பாள்?.... எதுவும் முடியாமல் உயிரை அவனுடன் அனுப்பிவிட்டு ஒரு நடைபிணமாக வீடு வந்து சேர்ந்தாள்.

“என்ன நடந்தது?.... ஏன் இப்பிடி சொல்லிட்டான்?.. என்னட்ட என்ன தப்பு இருக்கு?.... ஏன் என்னை அவன்ட அம்மாக்குப் பிடிக்காம போகும்?..... அண்டைக்கு சொன்னவன் தானே நான் ஆரைக் காட்டினாலும் அம்மா ஓம் எண்டு சொல்லுவா எண்டு!........ அப்ப இப்ப அவன் சொன்னது சும்மா ஒரு காரணமா இருக்குமோ?.... உண்மையா அவனுக்குத் தான் என்னைப் பிடிக்கலையோ?.... மனசப் பாத்து வந்த காதல் அழியாது எண்டானே!..... இப்பிடி சொல்லித் தூக்கிப் போட்டுட்டானே!....... ஒரு வேளை அவனும் முகத்தையும் உடம்பையும் பார்த்துத் தான் பழகினவனோ? அவன் சொல்லி இருக்கிறான் கொஞ்சம் வடிவா வாடி உடம்ப குறையடி ” எண்டு. நானும் அதுக்கு முடிஞ்சத செய்றன் தானே. ஒரு வேளை இதால தான் என்னைத் தூக்கி எறியுறானோ?..... அப்ப அவன் கூட மனசப் பாக்கலையோ?......

அவன் வெளில போகக் கேட்டு இருக்கிறான். நான் “இப்ப வேண்டாம் கலியாணத்துக்குபிறகு போவம் ” எண்டன்.

“அப்ப உனக்கு என் கூட ஊர் சுத்தி பாக்கனும் எண்டு ஆசை இல்லையோ? ” எண்டு கேட்டான். நான்

“ஆசை இருக்கு ஆனா கல்யாணத்துக்குப் பிறகு போவமே” எண்டன். அவனும் “ஓம்” எண்டு தானே சொன்னவன். ஒரு வேளை என் மனசு நோகக் கூடாது எண்டு தான் அப்பிடி சொன்னவனோ?.....

அவன் தெரியாம கைல பட்டாக் கூட தள்ளிப் போய் இருந்திருக்கிறன். ஒரு வேளை அந்தக் கோபமோ? எனக்குத் தான் காதலிக்கத் தெரியலயோ?..... ஏன் நான் ஒரு பொம்பிள பிள்ளயா கண்ணியமா இருக் கோணும் எண்டு நினைச்சதில என்ன தப்பு?..... ஒரு வேளை அவன் கூட உடம்புக்காகத் தான்............

ச்சே...... என்ர கடவுளே!...... என்னடா இது கொஞ்ச நேரத்துக்குள்ள அவன இப்பிடி தப்பா நினைச்சிட்டனே.... இந்தப் பாவத்தை எங்க போய் கழுவ?.... அவன் ரொம்பவே நல்லவன். அவன்ட மனசு தூய்மையானது. அது என்ட உள் மனசுக்கு நல்லா தெரியும். அவன் என்னை உண்மையாத்தான் காதலிச்சவன். அப்பிடி அவன் ஏமாத்திறவனா இருந்திருந்தா இப்ப வந்து உதச் சொல்லி இருக்கமாட்டான். அவன் நல்லவன். என்னில தான் ஏதோ பிழை இருக்கு. அப்பிடி என்னட்ட சொல்லி மாத்த ஏலாத அளவுக்கு என்ன பிழை எண் டது தெரியலையே?.... ஒரு வேளை சந்தேகப்படுறானோ?.... இல்லை.. இருக்காது.... அவனுக்கு என்னைப் பற்றி நல்லாத் தெரியும். என்ர கடவுளே! இப்ப என்ன தான் பிரச்சினையோ?....... “

இவ்வாறு ஒன்றுடன் ஒன்று சிந்தித்துச் சிந்தித்து

மனதைப் போட்டுக் கசக்கிப் பிழிந்து கொண்டிருந்தாள் ரம்மியா. நேரம் போனதே தவிர அவளுக்கு எதுவும் புரியவில்லை.
நாட்கள் நகர்ந்தன. ஆனால் நாளுக்கு நாள் வேதனை அதிகரித்ததே தவிர கொஞ்சமும் குறைவில்லை. அவனைத் தவறானவன் என்றும் எண்ண முடியவில்லை. தான் என்ன தவறு செய்தாள் என்பதும் புரியவில்லை. நாட்கள் உருண்டோடியது. இதயம் பெரிய ரணத்தைச் சுமந்து கொண்டு இருக்க ஒரு நடைபிணமாகவே வலம் வந்து கொண்டிருந்தாள் ரம்மியா.
"இனி அவன் முகத்தில் எவ்வாறு முழிப்பது? அவன் மேல் காதல் இல்லாததுபோல் எவ்வாறு நடிப்பது?" என்று எதுவும் புரியாமல் தினமும் துடித்தாள் அவள். அவள் தன் கனவுகள் மீதிருந்த அந்த அதீத பக்தி ரம்மியாவை இதற்குள் இருந்து மெதுமெதுவாக வெளியில் கொண்டு வர முயற்சித்துக் கொண்டிருந்தது. ஆனால் எப்படி அவளால் முழுமையாக வெளியில் வர முடியும்?... கணேசின் இறுதி வார்த்தைகள் அவள் இதயத்தை முழுமையாகக் கொன்று போட்டிருந்தது அல்லவா?....
ரணத்தை உள்ளுக்குள் புதைத்துக் கொண்டு கனவுகளுக்காக மட்டுமே வாழ்க்கை என அதை நோக்கிப் பயணிக்கத் தொடங்கி இருந்த வேளை ஒரு நாள் அவளது பள்ளி நண்பி பிரியாவை சந்திக்க நேரிட்ட ரம்மியாவின் ஒரு குணம் அவள் தன்னுடன் யாரும் வந்து கதைத்தால் கதைப்பாள். உதவி கேட்டால் செய்து கொடுப்பாள். ஆனால் யாருடனும் அவ்வளவு எளிதில் ஒட்டி உறவாடமாட்டாள். அந்தவகையில் பார்த்தால் கணேஸ் அதிஸ்டசாலி என்றே கூற வேண்டும்.
ரம்மியா பிரியாவுடன் உரையாடும் போது பிரியா மிகுந்த மன வருத்தத்தில் இருப்பது அவளுக்குப் புரிந்தது. புண்பட்டிருந்த நெஞ்சம் புண்பட்டிருந்த நெஞ்சத்தைச் சரியாகக் கண்டறிந்தது போல.
பிரியாவுடன் தொடர்ந்து உரையாடிய போது பிரியாவின் வேதனை என்ன என்பது ரம்மியாவிற்குப் புரிந்தது. அவளுக்கு என்ன அறிவுரை வழங்குவது என்பது தெரியாவிட்டாலும் தன்னால் முடிந்ததைக் கூறி அவளைச் சமாதானப்படுத்த முயன்றாள். அவளும் ரம்மியாவிற்காக சமாதானமான பாவனையோடு விடை பெற்றுக் கொண்டாள்.
பிரியா போய்விட்டாலும் அவள் மனதில் இருந்த வேதனைகள் அவள் கூறிய வார்த்தைகள் அவளின் ஆதங்கங்கள் அனைத்தும் ரம்மியாவின் மனதினுள் சுழன்றடித்தபடியே இருந்தது. சிறிது நேரம் அதைச் சிந்தித்துப் பார்த்தவளுக்கு ஒரு பெரிய இருண்ட தேசத்துக்குள் ஒரு விண்மீன் ஒளி கொடுத்தைப் போல இருந்தது.
சிறு வயதிலிருந்தான ரம்மியாவின் மனப் போக்கிற்கும் இந்தச் சமூகத்தின் கண்ணோட்டத்திற்கும் இடையிலுள்ள பல விடயங்கள் அவளுக்குள் புலப்படலாகின.
ரம்மியா சாதாரணமாகப் பெண்களின் மனநிலையில் இருந்து சற்று வேறுப்பட்டவள். பொதுவாக பெண்கள் எந்த இடத்திலும் மென்மையானவர்களாகவே இருப்பார்கள். ஆனால் ரம்மியா மென்மையானவளாக நடந்து கொண்ட ஒரே விடயம் கணேசுடனான காதலில் மட்டும் தான். அவள் தனக்கென ஒரு தனிப் போக்கு உடையவள். கிட்டத்தட்ட அவளை பாரதி கண்ட புதுமைப் பெண் என்று கூறலாம்.

> **"குஞ்சி அழகும் கொடுந்தானைக் கொட்டழகும்**
> **மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து**
> **நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையாற்**
> **கல்வி அழகு அழகு "**

என்ற நாலடியாரைப் படித்ததால் என்னவோ அவள் மனம் கண் முன்னே காண்பவை எல்லாவற்றையும் அழகென்று கொண்டாடுவதும் இல்லை அழகில்லை என்று ஒதுக்கிவிடுவதும் இல்லை. அழகாய் தெரிவதை இரசிப்பாள். அத்துடன் நிறுத்தி விடுவாள்.
அது தான் அழகெனத் தலையில் தூக்கி வைக்கமாட்டாள். மற்றவர்கள் கேலி செய்யும் அளவிற்கு அழகில்லாமல் இருப்பதை அவள் என்றும் கேலி செய்ததும் இல்லை. அதற்காக அதை அவள் புறக்கணித்ததும் இல்லை. ரம்மியா சிறுவயத்திலிருந்து யாருடனும் அவ்வாறு சீக்கிரத்தில் ஒட்டிவிடமாட்டாள். வகுப்பில் சென்று பேசாமல் பின்னால் சென்று தனியாக அமர்ந்துவிடுவாள். அவளைச் சுற்றி யார் இருந்தாலும் கவலைப்படமாட்டாள். அவளுடன் பழகுபவர்களுக்கு எப்போதும் நம்பிக்கையானவளாகவே நடப்பாள்.
இவளின் இந்தப் போக்கோ என்னவோ அவளைச் சுற்றி அதிக நண்பர் கூட்டம் இருப்பதில்லை. சிலர் அவளுடன் கதைக்க நினைப்பதே இல்லை. ரம்மியாவின் இந்த மனப் போக்கு
"இவாண்ட திமிரப் பாரன் "என்று சொல்வதற்கு ஏதுவாக இருப்பதில் வியப்பில்லைத்தானே. ஆனால் ஒரு போதும் அவள் மனம் திமிர் கொண்டதும் இல்லை இப்படிக் கூறுபவர்கள் பற்றிக் கவலைப்பட்டதும் இல்லை. அன்பாக உண்மையாகப் பழகுபவர்களுக்காக அவள் எதுவும் செய்வாள். அவர்களுக்காக எவ்வளவு தூரமும் இறங்கிப் போவாள். அதுக்கு ஒரு உதாரணம் தான் கணேஸ்.

ரம்மியாவின் மனதை மட்டுமல்ல தோற்றத்தையும் கடவுள் சாதாரண பெண்களைவிடச் சற்று வித்தியா சமாகவே படைத்திருந்தார். அதற்காக அத் தோற்றம் குறை என்று சொல்லும் அளவிற்குப் பெரிய விடயமும் அல்ல. பொதுவாகப் பெண்கள் தங்கள் வயதைக் குறைத்துச் சொல்வதற்கே ஆசைப்படுவதாகக் கூறுவார்கள். ஆனால் ரம்மியாவிற்கு அந்த ஆசை இருந்ததில்லை. பல வேளைகளில் இயலாத கட்டத்தில் அவள் தனது வயதைக் கூட்டியும் கூட சொல்லி இருக்கிறாள். ஆம் ரம்மியாவின் வயதைக் கேட்பவர்கள் அவள் தன் வயதைக் குறைத்துச் சொல்வதாகவே கூறுவார்கள்.

ரம்மியாவின் உடல் சற்றுப் பருமனானது. அவள் முகங் கூட அவளைவிடப் பத்து வயது அதிகமானவர்களின் தோற்றத்தைக் கொண்டது. இதனால் தான் என்னவோ அவள் வயதை ஒத்த யாரும் பெரிதாக அவளுடன் ஒட்டுவது கிடையாது.

இவள் போய் வரும் போது சிலர் இவளைக் காட்டி தங்களுக்குள் கதைத்துச் சிரிப்பார்கள். இவளைக் கண்டதும் கஸ்டப்பட்டு நிறுத்துவார்கள். ஏன் இவளுக்கு முன்னால் கூட "குண்டம்மா" "குண்டுப் பூசணி" "யானை " என்று எல்லாம் கூப்பிட்டு இருக்கிறார்கள். ஆனால் ரம்மியா இவற்றை எல்லாம் ஒரு விடயமாக ஒரு போதும் எடுத்துக் கொண்டது கிடையாது. புன் சிரிப்புடன் அவற்றை அந்த இடத்திலேயே விட்டுவிட்டு தன் வேலையைப் பார்க்கத் தொடங்கிவிடுவாள்.

பல முறைகள் அவள் வகுப்பு ஆண் மாணவர்கள் அவளைக் கிண்டலாக "அன்ரி " "அம்மம்மா "என்று எல்லாம் கூட அழைத்து இருக்கிறார்கள். அப்போதெல்லாம் அவள் "என்ன மகனே " "என்ன பேரான்டி "என்று சிரித்துக் கொண்டு கேட்டுவிட்டுப் போய்விடுவாள். அவளை அவள் முன்னால் வைத்து அவள் தோற்றத்தைப் பற்றிக் கேலி செய்தாலும் தானும் சேர்ந்து தன்னைப் பற்றி இரண்டு நக்கல் கதை சொல்லிவிட்டுக் கடந்து சென்று விடுவாள்.

ஏனெனில் ரம்மியாவின் மனம் ஒரு போதும் தோற்றத்தை நம்புவதில்லை. "திறமை மனம் இவை தான் ஒரு மனிதனைத் தீர்மானிக்கும். தோற்றம் எல்லாம் வெறும் கானலே" என்பதே அவள் அறிவு அவளுக்குச் சொல்லிக் கொடுத்த உண்மை.

இது ஒரு பிரச்சினை என்றோ இதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும் என்றோ ஒரு போதும் நினைக்காதவளுக்கு அன்று பிரியா சொன்ன கதைகள் பல விடயங்களை உணர்த்திச் சென்றன. பிரியாவும் இவளைப் போல பருமனானவளே. பல முறைகள் முயன்றும் அவளால் உடற் பருமனைக் குறைக்க முடியவே இல்லை. இந்த உடற்பருமன் ஒன்றினாலும் பிரியா தன் வாழ்வில் இழந்தவை ஏராளம். அவளை விட்டுச் சென்ற அவளுக்குப் பிடித்த நண்பர்கள் ஏராளம். இவற்றைப் பற்றித் தான் அவள் அன்று ரம்மியாவிடம் கூறி இருந்தாள்.

ரம்மியா வாழ்வில் இதுவரை நிகழ்ந்த அனைத்தும் பிரியா வாழ்விலும் நிகழ்ந்து இருந்தன. வெளியில் செல்லும் போது பிரியாவை தமது நண்பி என்று கூறவே பிரியாவின் நண்பர்கள் வெட்கப்பட்டனர். புதிய நபர்களின் முன்னால் வைத்து பிரியாவைக் கேலி செய்தனர். பொது இடங்களில் பிரியாவைத் தெரியாதது போல் பாசாங்கு செய்தனர்.

இவை அனைத்தினாலும் பிரியா மிகவும் உடைந்து போய் இருந்தாள். அவள் மெலிவதற்குப் பல முயற்சிகள் செய்து கொண்டு தான் இருக்கிறாள் என்பதும் ரம்மியாக்குத் தெரிந்தது.

"எனக்கு ஒருத்தனை உயிருக்கு உயிராக் காதலிச்சுக் கலியாணம் செய்யோனும் எண்டு ஆசைடி. ஆனா என்னை எல்லாம் எவன்டி ஆசைப்பட்டுக் கட்டிப்பான். ஏதோ ஒரு ஏலாக் கட்டத்துல வீட்டுக்காரர்ன்ட ஆக்கி னையால கட்டினா தாண்டி உண்டு. எப்பிடி இருந்தாலும் அவங்களுக்கும் ஆசை இருக்கும் தானே என்ர மனிசி வடிவா இருக்கோனும் எண்டு " பிரியாவின் இந்த வார்த்தைகள் ரம்மியாவின் முகத்தில் அறைந்தாற் போல இருந்தன.

"ஏன்டி உனக்கு என்ன குறைச்சல்?.... உன்ர படிப்பு என்ன?... உன்ர திறமை என்ன?.... உன்ர கெட்டித்தனம் என்ன?... உன்ர பொறுப்புணர்ச்சி எவ்வளவு?.... உன்னப் போய் ஆருக்கும் பிடிக்காம போகுமோடி? ஏன்டி இப்பிடி கண்டபாட்டுக்கு யோசிச்சு குழம்புறாய்?..... " என்றாள் ரம்மியா.

"அடிப் போடி நீ வேற.... இந்த சமுதாயத்தில என்ன இருக்கோ இல்லையோ முகமும் தோற்றமும் ரொம்ப அவசியம்டி..... என்ன இருந்தாலும் அது தான் எப்பவும் எல்லாருக்கும் வெளில தெரியுறது..... சரியடி நேரமாச்சு நான் வாரன். பேந்து சந்திப்பம் "என்று கூறிக் கொண்டு விடை பெற்றுச் சென்றிருந்தாள் பிரியா.

பிரியாவின் இந்தக் கருத்துக்கள் ரம்மியாவிற்கு முற்றிலும் முரண்பாடாகவே ஏற்றுக் கொள்ள முடியா ததாகவே தோன்றின. ரம்மியா ஒரு போதும் தோற்றத்தை நம்பியதுமில்லை. தோற்றத்தை நம்புபவர்கள் பற்றிக் கவலைப்பட்டதும் இல்லை. ஒரு நாளும் தன் தோற்றத்தைக் கொஞ்சமேனும் மாற்றிக் கொள்ள எண்ணியதும் இல்லை.

முதல் முறையாகக் கணேஸ் அவளிடம் "நீ கொஞ்சம் உடம்பக் குறைச்சு வடிவா வாவன்டி "என்று கேட்ட போது கணேசைப் பார்த்து அவள் முறைத்து இருக் கிறாள். "நான் எனக்காக கேக்கலடி. நாளைக்கு என்ர பொண்டாட்டிய ஆரும் தப்பா கதைச்சிடக் கூடாது பாரு அதுக்காகத் தான்டி. ஏதாவது முயற்சி செய்யடி. "என்று கூறினான்.

முதலில் கணேஸ் தன் மேல் அதிகாரம் செய்ய நினைக்கிறானோ என்று எண்ணியவள் அவன் அன்பைக் கண்டு பூரித்துப் போனாள். "அப்போது கூட அவன் தனக்காகக் கேட்காமல் எனக்காகத் தானே கேட்கி றான்"என்று அவன் பேரன்பைப் பெற்றதை வரமாக எண்ணி இருக்கிறாள். இடையில் அது கனவாய்ப் போனதாய் புலம்பியவள் பிரியாவுடனான சந்திப்பின் பின்னர் தான் கணேசின் அன்பு உண்மையில் மகா வரம் என்பதைப் புரிந்து கொண்டாள். அப்போது தான் பல விடயங்கள் அவளுக்குத் தெளிவாகின.

"நான் உறவுகள் எதையும் நெருங்கிற அளவுக்கு கண்டு கொள்ளுறதே இல்லை. ஆர் என்ன சொன்னாலும் நான் மைண்ட் பண்ணுறதே இல்லை. ஆனா அவன் அப்பிடி இல்லத்தானே. நான் ஏன் இத முதலே யோசிக்க மறந்தன். நான் சரியான மக்கு...

அவன சுத்தி எவ்வளவு நல்ல உறவுகள் எல்லாம் இருக்கு. நாளைக்கு அவன் என்னைக் கலியாணம் பண்ணினா அவங்க நக்கலடிக்க மாட்டாங்களா?....

வீட்ட பாத்து செஞ்சு வைச்சிருந்தா பரவாயில்ல. "வீட்ட தான் செஞ்சு வைச்சிட்டினம்" எண்டு சொல்லிட்டுப் போடலாம். ஆனா இவளயா போயும் போயும் காதலிச்சாய்? எண்டு யாரும் கேட்டா?.... நான் அதக் கணக்கிலயே எடுக்கமாட்டன். ஆனா அது அவனுக்கு வலிக்கும் தானே.....

நாளைக்கு எங்கையும் என்னை வெளில கூட்டிக் கொண்டு போகேக்க எப்பிடியும் ஒரு வாயாவது சொல்லும் "இவன்ட தலைவிதியப் பாரன். இப்பிடி ஒருத்தி வாய்ச்சிருக்கா ". இந்த வார்த்தைகள் என் காதில இறங்கவே மாட்டுது. ஆனா இது அவன்ட இதயத்தில இடியையே இறக்கிடும் எல்லோ?.... இத அவன் எப்பிடி தாங்கிக் கொள்ளுவான்? என்ட கடவுளே! இத நான் எப்பிடி யோசிக்க மறந்தன்.

நான் இதுவரைக்கும் இதைப் பற்றிக் கண்டு கொண்டதே இல்லயே. அதனால அவன் கூடப் பழகேக்க என்னால இதப் புரிஞ்சுக்க முடியல. ஆனா அவன் உள்ளுக்க எவ்வளவு வெந்திருப்பான்?......

அவன் என் மனசப் பாத்துத் தான் காதலிச்சு இருக்கிறான். அதனால தான் அவனா வந்து காதல சொல்லி இருக்கிறான். ஆனா அவனுக்கு இந்த விசியம் பேந்து தான் விளங்கி இருக்கு. தான் என்னைக் கலியாணம் பண்ணி என்னைக் கஸ்டப்படுத்த வேண்டாம் எண்டு நினைச்சிருக்கிறான். அப்ப கூட அவன் என்னைப் பற்றி தான் நினைச்சு இருப்பான். ஏன் என்டா அவன்ட காதலுக்க அவ்வளவு உண்மை இருக்கு. அது எனக்கு நல்லா தெரியும்.

உண்மையா தூக்கி எறிஞ்சிட்டுப் போறவனா இருந் திருந்தா நான் உங்கூட எப்பவும் நல்ல பிரண்டா இருப்பன் எண்டு சொல்லி இருக்கமாட்டான். அந்த இடத்துல கூட அவன்ட அன்பு எவ்வளவு தூய்மையா இருக்கு.

அவன் இத சொல்லேக்க எவ்வளவு வேதனைய அனுபவிச்சு இருப்பான்? ஆனா நான்...... அவன..... எப்பிடி எல்லாம் நினைச்சிட்டன்...... எவ்வளவு தப்பு பண்ணிட்டன்...... அவன் என்னையும் என் காதலையும் புரிஞ்சுக்கேல எண்டு நினைச்சன். ஆனா உண்மை என்னன்டா நான் தான் அவனப் புரிஞ்சுக்கேல......

நான் அவனுக்கு மட்டுமில்ல. எவனுக்கும் பொருத்தம் இல்லாதவள். ஆனா இவ்வளவு நாளும் மனசார அவன்ட மனுசியா வாழ்ந்து இருக்கிறன். இனியும் என் வாழ்க்கைல கலியாணம் என்ட ஒரு பகுதி இருந்தா அது அவனோட தான். ஆனா அது வேண்டாம் இந்தளவு காலம் அவன் தந்த வாழ்க்கையே போதும். இனி அவன்ட வாழக்கையில அவன் சந்தோசமா வாழணும்.

எண்டைக்கு அவனுக்கு பொருத்தமான ஒராள் கிடைக்கி றாவோ அது வரைக்கும் அவன்ட வாழ்க்கைக்கு அவன்ட சந்தோசத்துக்கு அவன்ட நிம்மதிக்கு என்னால முடிஞ்சத அவனுக்குத் தெரியாம அவனுக்காக அவன்ட நல்ல மனசுக்காக நான் செய்வன்.

அதுக்குப் பிறகு என்ட கனவு என்ட இலக்கு எண்டு என்ட வாழ்க்கை இந்த உலக நன்மைக்காக திசை திரும்பும்...... "

என்று தெளிவாக ரம்மியாவின் மனம் சிந்தித்துக் கொண்டிருக்க அவளை அறியாமல் அவள் கண்களில் இருந்து மீண்டும் இரு சமுத்திரங்கள் விழுந்து ஆடையை நனைத்துக் கொண்டிருந்தன.........

**யாருக்காக எழுதுகிறோம் என்பதில் எழுத்தாளன் கவனமாக இருக்கவேண்டும். பரந்துபட்ட மக்கள் சமுதாயத்தின் அடுத்தகட்ட நகர்வுக்கான வழிமுறைகளை அவர்களுக்கு அவர்கள் புரிந்து கொள்ளும் வண்ணம் எழுத்துகளைத் திட்டமிடவேண்டும்.**

# கொடுமைகள் தாமே அழிவதில்லை

**சிறப்புச் சிறுகதை**

**செ. கணேசலிங்கன்**



**“எ**ன்ன மூப்பன் என்னைத் தெரியேல்லையா?”
கட்டிய ஓலைக்கீற்றில் நெருப்பை மூட்டி, தீச்சுவாலையை எழுப்பும் வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருந்த சின்னப்பன் என் குரல் கேட்டு ஒரு தடைவ நிமிர்ந்து, கூர்ந்து என்னைப் பார்த்தான். முதுமையைக் காட்டும் தாண்ட கண்கள், உச்சி வழுக்கையாயிருந்த போதும் பின்புற மயிர்களைச் சேர்த்து முடிந்த சிறு முடி, தூர்ந்த காதில் கடுக்கன்கள் பெண்டுலம் போல ஆடிக்கொண்டிருந்தன.

“ஓ தம்பியா, என்ன அப்படிக் கேட்கிறியள். எப்ப வந்தது? என்னசேதி?”

தன் வேலையை விட்டு சின்னப்பன் எழுந்து நின்றான். முதுகில் சிறிது கூனல் விழுந்து விட்டது. துடை தெரியுமளவிற்கு செம்பாட்டு மண்ணிறமான வேட்டியை உருட்டிச் செருகியிருந்தான். வெற்றிலை தொடக்கம் சில்லரைக்காசு வரை அடங்கிய அவனது வழமையான கொட்டைப் பெட்டி இடையில் தெரிந்தது.

இவர் என்ரை பெண்சாதிக்கு மாமன் முறை. அதுதான் செத்த வீட்டுக்காக வந்தனான்.

“அப்ப நான் கொஞ்சம் கவனமெடுத்தெல்லோ எரிக்க வேணும். பச்சை விறகு நெருப்புப்பிடிக்கத் தொட முடியாது. நெருப்பாலைதான் சுட முடிகிறது. தம்பிக்கு சொந்தமெண்டு கோபம் வராதெண்டு நினைக்கிறன்.”

சின்னப்பு மீண்டும் தொடர்ந்து சொன்னான். நான் சிரித்தேன்.

சுடலைக்கு வந்த அனைவரும் மடத்திலே ஆறியிருந்து சுருட்டைப் புகைத்து சுடலை ஞானம் தொடக்கம் அரசியல் வரை கதைத்துக் கொண்டி ருந்தனர். ஒரு பகுதியில் விறகு வெட்டிய பள்ளர், பாடை கட்டிய கட்டாடி, மேளமடித்த பறையர், கொள்ளி சுமந்த பாரியாரி ஆகிய அனைவருக்கும் கணக்குத் தீர்த்துக் கொண்டிருந்தனர்.

“என்ன கதை பேசிறாய்.”

“இப்பெல்லாம் வாய்க்கொழுப்பு மெத்திப்போச்சு”

“கொடுத்ததை வாங்கிக் கொண்டு போ”

“அந்தக் காலமெல்லாம் மலையேறிப் போச்சு”

“கூலி என்றால் கூலிதான் வை”

“வேண்டாமென்றால் அவன் போகட்டும் விடுங்கோ”

“நாளைக்கு அவன் வராவிட்டாலும் கேட்டதைக் குடுத்துத்துலையுங்கோ”

வழமையான குரல்கள் அங்கும் கேட்டுக்கொண்டிருந்தன. சின்னப்புவின் உதவியாட்களும் கூலிபெற ஓடி விட்டனர். சின்னப்பு மட்டும் எதிலும் ஆசைப்படாதவன் போல தன் கடமையைச் செய்து கொண்டிருந்தான். நான் அவனது தனிமையைப் பார்த்தே பேசச் சென்றேன். அவன் வீட்டுக்கு நான் முன்னர் அடிக்கடி செல்வேன். அவன் மகன் செல்லனும் நானும் நீண்ட கால நண்பர்கள்.

“என்ன சின்னப்பு இந்த வயதிலையும் ஏனிந்த தொழில், வீட்டிலை கிடக்கிறதுதானே.”

“என்ரை மேன் சொல்லிற மாதிரியே தம்பியும் சொல்லு கிறாய். ஆனால் நான் ஒரு காரியமாகவே இன்னும் இந்தத் தொழிலை விட்டு விடவில்லை.”

பேசிக்கொண்டிருந்த போதும் சின்னப்பன் தன்

தொழிலில் கவனமாகவேயிருந்தான். சிராய் விறகுகளை எரியும் சுவாலையின் மேல் வைத்து நெருப்பைப் பலப்படுத்திக் கொண்டிருந்தான்.
"அது என்ன காரியமென்று நான் அறியப்படாதோ" நான் ஆர்வத்தோடு கேட்டேன்.
"நான் எவருக்கும் சொன்னதில்லை தம்பி. உமக்கு மட்டும் நான் சொல்லத்தான் வேண்டும். இந்த ஊரிலை இன்னும் ஒரு நாலைஞ்சுபேர் இருக்கிறாங்கள். அவங் களை நெருப்பு மூட்டி என்ரை கையாலே நான் சாக முந்தி எரிச்சுப் போட்டுப்போக வேணும். அது ஒண்டுதான் ஒரே ஆசை எனக்கு மிஞ்சியிருக்கு. இதே தொழிலை இன்னும் நான் தொடர்ந்து செய்யிறதற்கும் அதுதான் காரணம்."
சின்னப்பன் வேலையை விட்டு எழுந்து நின்று சொன்னான். அவ்வேளை அவனது வார்த்தையில் அழுத்தத்தையும் கண்களில் சினத்தையும் கண்டேன். சவமெரிக்கும் சாதாரண இழிசனர் எனக் கருதப்படும் மனிதனான சின்னப்பனுக்கும் வாழ்க்கையில் இலட்சிய

**ஈழத்தில் மார்க்சியப் பார்வையுடன் எழுத ஆரம்பித்தோரில் தரமான நாவல்களைத் தந்தவர் நாவல் சிறுகதை ஆகிய ஆக்க இலக்கியத் துறைகளில் மட்டுமல்லாது சமயம் சமூகவியல் அரசறிவியல் பெண்ணியம் கலை திறனாய்வு போன்ற பல்வேறு துறைகளிலும் பெருமளவு எழுதி நூல்களை வெளியிட்டுள்ளார். குமரன் பதிப்பகத்தை ஆரம்பித்து அதன் மூலம் பெருமளவு நூல்களைப் பதிப்பித்துள்ளார். 1971 இல் குமரன் என்ற மாத இதழை ஆரம்பித்து பொதுவுடமைக் கருத்துக்களுக்கான களமாக அதனை சில ஆண்டுகள் வெளியிட்டுள்ளார்.**

மொன்று இருக்கிறது என் நெஞ்சில் ஆர்வம் மேலிட்டது.
"யார் அந்த நாலு ஐஞ்சு பேர்?"
"தம்பிக்குத் தெரியாதா என்ன? அவங்கள் தானே இந்த ஊரின் பெரிய புள்ளியள். வெள்ளைவேட்டிக் கள்ளன்கள். அயோக்கிய உலுத்தன்கள். சாதி வெறி யிலையும் பணத்திமிரிலையும் அவங்கள் செய்த கொடுமைகள். அப்பப்பா தாங்கள் சாகமாட்டம் என்று இன்னும் நினைத்துக் கொண்டிருக்கிறான்கள்."
"நான் தானே இப்ப ஊரிலையேயில்லை. கொழும்போடு இருக்கிறன். பேருகளைக் கொஞ்சம் சொல்லன். அறிந்திருக்கிறது எங்களுக்கும் பயன்படும்."
"அவன் அடைவு கடைச்செல்லையா, எங்க உழைப் பையெல்லாம் வட்டியாய் வாங்கிச் சேர்த்து வைத்துக் கொண்டு எங்களையே அடக்கிக் கொண்டிருக்கிறான். அவன் கேட்பவர்களெல்லாம் வேலைக்குச் செல்ல வேணும். அவன் கொடுப்பது தான் கூலி. எத்தினை குடிசைகளுக்கு தீ வைச்சான். புளியடி ஆறுமுகந்தான் சங்கக்கடையை பிடிச்சு வைச்சுக்கொண்டு என்ன ஆட்டமெல்லாம் ஆடுகிறான். கூப்பன் துண்டுகளை வெட்டி வைத்துக்கொண்டு சாமான்களை கள்ள விலை யில் வித்துப் போடுகிறான். எங்களுக்கெல்லாம் இடையிடை தான் ஏதேன் கிடைக்கும். புது வீடு கட்டி மேளுக்கு ஒரு இஞ்சினீயரைத் தேடிக்கொடுத்துவிட்டான். பழைய சேர்மன் பொன்னையா ஆடின ஆட்டங்கள் இன்னும் குறையவில்லை. வயதுபோன நேரத்திலை, தான் சாதியே பார்ப்பதில்லை என்று சொல்லிக்கொண்டு வடிவான பள்ளப் பெட்டைகளைப் பார்த்து வீட்டுக்கு வேலைக்கு வைச்சிருக்கிறான். என்ன தம்பி, நாடு முன்னேறிவிட்டுது என்று சொல்லுறியள், இன்னும் நாங்கள் இஞ்சை அடிமையாய்த்தானே வாழுறம் என்ன சுகத்தைத்தானே கண்டன். அவங்கள் சொல்லுற படிதான் வோட்டும் போடவேண்டியிருக்கு. ஒரு மாற்றத்தையும் நான் காணேல்லை."
தீச்சுவாலைகள் எழுந்து கொண்டிருந்தன. காற்றோடு சேர்ந்து பிணப்பெட்டியிலேயே தீ பிடித்துக் கொண்டது.
"ஏனாம் அவன் இன்னும் காரியத்தைச் செய்யா மலிருக்கிறான்."
"அவன் மூலமாகவே அவனது பார்வையில் விசயங்களை அறிய முயன்றேன். அவன் எனக்கு முழுக்க விளங்காத தத்துவமெல்லாம் பேசிறான். ஊரவைக்குள்ளேயே அவங்கள் மேலை வெறுப்பு ஏற்படச் செய்து அவங்களைக் கொண்டே செய்விக்க வேணுமென்று சொல்லுறான். ஏதோ கூட்டம் கூட்டமென்று இரவிரவாய்த் திரிகிறான்."
"மாற்றம் ஏற்படேல்ல என்று சொல்லாதை சின்னப்பு. நீ நினைப்பதிலும் பார்க்கப் பெரிய, பெரிய மாற்றங்களைச் செய்யத்தான் அவங்கள் வேலை செய்யிறாங்கள். உலகத்திலை எத்தனையோ நாடுகளிலை நடத்திய அனுபவங்களை வைச்சுக் கொண்டுதான் முயற்சி செய்யிறாங்கள்."
"ஏதோ நானும் உயிரோடை இருக்கேக்கையே இதை யெல்லாம் பார்த்திட்டுச் சாகவேணும். இவங்களையும் எரிச்சுப்போட்டுச் சாக வேணும்."
"காலையிலை வாறனென்று செல்லனிட்டைச் சொல்லி வைக்கிறியா? நான் வரப்போறன். நீ கூலி வாங்கேல் லையா?"
"சரி தம்பி. நானும் வாங்க வாறன். நான் அவங்கள்

தாறத்தை வாங்கிப் போடுவன். நான் நல்ல விசுவாச மானவன் என்று உவங்கள் நினைக்கிறாங்கள். என்ரை நெஞ்சுக்கை எரியிற நெருப்பையும் வஞ்சத்தையும் உவங்கள் அறியமாட்டான்கள்."
சின்னப்புவும் என்னோடு வந்தான்.
"காசை வாங்கி என்ன செய்வாய்?"
"இன்றைக்கு அந்த அயோக்கியனோடு சேர்ந்த இந்தப் புண்ணியவானை எரித்த நாளெல்லா. கள்ளுப்போட்டு கொண்டாட வேணும். தம்பிக்கு சொந்தக்காரனென்று கோபம் வந்து விடுமோ?"
"அப்படி ஏன் நினைக்கிறாய்? எனக்குத் தெரியாதா என்ன, என் பெண்சாதியை திருப்திப்பண்ண வேணும். வேறும் வேலைகளிருக்கு அதுக்குத்தான் வந்தனான்."
மடத்தடிக்கு வந்து விட்டோம். நான் பிரிந்தேன்.
"இந்தா சின்னப்பு வந்திட்டான். அவன் தான் உவங்களுக்கை ஒரு நல்ல குடிமகன். கூலியைக்குடுங்கோ."
ஒருவர் சொன்னார்
"காலையிலை காடாத்தப் போறம். நிண்டு நீறுபூக்கும் வரை எரிச்சுப்போட்டுப் போகவேணும்."
மற்றொருவர் அதிகாரக்குரலோடு கூறினார். சின்னப்பு நயத்தோடு சொன்னான்.
"என்ன நயிந்தை, நான் அப்படின் கவனிக்காமல் விடுவனா, எங்கடை ஊருக்கை எத்தனை அதிகாரத் தோடை வாழ்ந்த பெரிய கமக்காரனெல்லே. நான் சும்மா விடுவனா. ஒரு எலும்புத்துண்டு விடாமல் வடிவாய் எரிச்சுப் போட்டுத்தான் ராத்திரிக்குக் கள்ளுப் போடப்போவான்."

# அவள்



**தர்சித்**

என்னால் நம்ப முடியவில்லை.!!

யாரால் தான் நம்ப முடியும்?

இருபது வருடங்களுக்கு முன்னர் அவளது கடைக்கண் பார்வைக்காக எப்படி எல்லாம் ஏங்கியிருப்பேன் என்பது யாருக்கும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. அவளை அழகி எனச் சொல்லிவிட்டுக் கடந்து போய் விட முடியுமா? கண்டிப்பாக முடியாது.

அவள் வெளிறிப் போன வெள்ளை மலரின் நிறத்தைக் கொண்டவள் இல்லை. இனித்திடும் கருப்பட்டி நிறத் தவளும் இல்லை. அவள் தேயிலைச் சாயத்தின் நிறத்தவள். அதுவும் சாமானியர்கள் தம் வாழ்நாளில் பருகா தூய முதல்தர தேயிலைச் சாயத்தின் நிறத்தவள். மணல் கடிகாரமொன்றின் மையத்தை ஒத்த அவளின் இடை வரை நீண்டிருக்கும் கருங்கூந்தல். என் சோர்வுற்ற தூக்கத்தைத் தேடும் கண்களுக்கு அதுதான் ஊக்க மருந்து. சீர் செய்யப்படாத வளைந்த புருவங்களுக்கு சொந்தக்காரி. சாயங்கள் ஏதும் கண்டிராத அந்த கருஞ்சிவப்பு உதட்டுக்கு கீழே அழகே உருவான அந்த அழகுப்பதுமைக்கு திருஸ்டிப் புள்ளி வைத்தது போல் ஒரு மச்சம். அவளா இந்த நிலைமையில் இருக்கிறாள். என்னால் நிச்சயமாக நம்ப முடியவில்லை.

எனது நினைவுகள் என்னை ஏழாயிரத்து முந்நூறு நாட்கள் முன்னோக்கி அழைத்துச் செல்கின்றது. நானும் நினைவுகள் கூடவே பயணப்படுகிறேன்.

அந்த நெடு நேரப் பயணம் என்னை ஒரு குளிரூட்டிய அறைக்குள் கொண்டு வந்து சேர்க்கிறது. அப்பொழுதுதான் அந்த அலுவலகத்தில் நான் சேர்ந்திருந்தேன். தொக்கா தொக்கா என்ற பதினாறு பதினேழு சைசில் ஒரு வெளிர் நீல நிற சர்ட்டும் அதற்கு கொஞ்சமும் ஒத்து வராத இளங்கபில நிறத்தில் நாய் கழுத்தில் தொங்கும் ரப்பர் பெல்ட் போன்ற டையும் பெல்ட் இல்லாத காற்சட்டையும் மண் நிறத்திற்கு மாறிப்போயிருந்த சப்பாத்தும் என்ற எனது தோற்றம் கிட்டத்தட்ட அந்த அலுவலகத்தில் பணிபுரிந்திடும் யாரையும் முகம் சுளிக்க வைத்திடும் வண்ணமேயிருக்கும்.

கூட வேலை செய்யும் என் வயதை ஒத்தவர்கள் யாரும் என்னிடத்தில் இது பற்றி பேசியதில்லை. காரணம் என்னவென்று தெரியவில்லை இப்படி ஒரு கோமாளி அவர்களுக்கு அந்த நேரத்தில் அவசியத் தேவையாகக்கூட இருந்திருக்கலாம். அப்போதுதான் நான் முதல் முறையாக அவளைப் பார்த்தேன் .

என்னவென்று சொல்வது...........

நான் வீசுகிற காற்றுக்கு ஏற்ப ஆடிடும் இலையினைப் போல் ஆனேன். காலங்கள் கொஞ்சம் கடந்து போகிறது அவளும் நானும் ஒரே ப்ரொஜெக்ட்டுக்காக வேலை செய்ய நியமிக்கப்பட்டிருந்தோம். என் வாழ்விலேயே அதை தான் நான் வாழ்ந்த காலம் என்றும் கூட சொல்லலாம். குப்பையில் பிறந்து இனிஷல் இல்லாமல் சேரிப்பகுதியின் கூவத்தில் வளர்ந்து ஆளாகியிருந்த நான் இதற்கு முன்னர் இப்படி எல்லாம் இருந்ததே இல்லை. என்னை விட அவளுக்கு இரண்டு வயது அதிகம் என்பதால் அவள் சொல்வதை தான் நான் கேட்க வேண்டியிருந்தது. கேட்க வேண்டாம் என்றே சொல்லியிருந்தாலும் நான் அதைத்தான் செய்திருப்பேன்.

அப்படித்தான் ஒருநாள் பகல் உணவுக்கு செல்லும் வேளையில் அவள் என்ன நினைத்தாளோ தெரியவில்லை சவரம் செய்த பின்பு நீ அழகாக இருக்கிறாய் என்று சொல்லிவிட்டாள். உண்மையைச் சொல்ல வேண்டும் என்றால் அன்று நான் தூங்கவேயில்லை

சொல்லித் தீரா வெறும் சொல்லில் அடங்கா இன்பம் கண்டு என் நெஞ்சம் பஞ்சாய் பறந்தது. அவள் கொஞ்சம் சோசியலாக பழகக்கூடியவள். நானோ நீளக்கூந்தலைக் கண்டவுடனே நிலத்தை

பார்க்கும் வகை. அவள் நுனி நாக்கில் ஆங்கிலம் நடனமாடும் என் நாக்கில் ஆங்கிலம் தடுமாறும். எல்லாவற்றையும் விட அவள் ‘‘சீ .ஈ .ஓ’’ மகள். நான் அப்பன் யார் என்றே தெரியாதவன். அது சரி எதிர் முனைகள் கண்டிப்பாக இணையும் என எப்போதோ படித்த விஞ்ஞான பாடத்தை சம்பந்தமே இல்லாமல் இப்போது ஞாபகப்படுத்திக் கொள்கின்றேன்.

இப்படியே நாட்கள் போய்க் கொண்டிருந்தபோதுதான் அவளுக்கு என்று ஒரு அவன் இருப்பதை அறிந்து கொண்டேன்.

எப்படி என்று கேட்கிறீர்களா?... அவளாகத்தான் சொன்னாள். நான்தான் முன்னமே சொன்னேனே அவள் கொஞ்சம் ‘‘சோசியல் டைப்’’. அந்த அவனை அவள் அப்பாவுக்குக் கொஞ்சமும் பிடிப்பதில்லை என்றும் அவனோடு தொடர்பு வைத்திருந்தால் வீட்டுக்கு வரவேண்டாம் என்றும் அப்படியே எங்காவது கண்காணாத தொலைதேசத்துக்கு போய் விடும் படியும் சொன்னதாகச் சொன்னாள். உங்கள் அப்பாவின் யோசனைப்படியே செய்து விடலாமே என்றேன்

அன்று நாள் முழுக்க நெற்றியில் கை வைத்து யோசித்துக் கொண்டிருந்தவள் நான் இப்படி சொன்னதை கேட்டதும் சிரித்து விட்டாள். நானும் நிஜமாக சொல்லவில்லை அவளை சிரிக்க வைக்க வேண்டும் என்பதற்காகத்தான் அப்படி சொன்னேன்.

என்னால் வேறு என்ன செய்ய முடியும்? நீ எப்படி என்னை விட்டு விட்டு இன்னொருவனோடு செல்ல முடியும் என அவளிடம் போய் சண்டை போடவா முடியும் எனக்கு அவளிடத்தே அவ்வளவு உரிமை

இருக்கிறதா என்ன..................

ஏதோ அவள் கவலையாக அமர்ந்திருப்பதை பார்த்துக் கொண்டிருக்க என்னால் எப்போதும் முடிவதில்லை அதனால் தான் என்னைக் கோமாளியாக்கி அவள் கவலையைத் தற்காலிகமாகவேணும் போக்கினேன்

கோமாளியாகவே வாழ்ந்த எனக்கு கோமாளி போல் நடிப்பது ஒன்றும் புதிதல்லவே. இன்னும் கொஞ்சம் நாட்கள் நகர்ந்தன அவளது அவனுக்கு எங்கோ வெளியூரில் வேலை கிடைத்து விட்டதாகவும் கொஞ்ச நாட்களில் அலுவலகத்தை விட்டு வெளியேறப் போவதாகவும் சொன்னாள். வேண்டாம் என்னை விட்டு போகாதே என்றா சொல்ல முடியும் வாழ்த்துக்கள் என்றேன் .

வழி அனுப்பி வைக்க ஏர்போர்ட் வரை வரவேண்டும் எனக் கண்டிப்பாக சொல்லியிருந்தாள். வலியோடு

போனேன் வழி அனுப்பி வைக்க.

அந்த வெள்ளை நிற மகிழுந்து பறந்துக்கொண்டிருந்தது. வெகு நேரம் நிலவிய அமைதியைப் போக்கும் பொருட்டு உனது அவன் வரவில்லையா அவனோடுதானே போகிறேன் என்று சொன்னாய் என கேட்டேன்

ஆமாம் அவன் கூடத்தானே போய்க்கொண்டிருக்கிறேன் என்றாள். எனக்கு ஒரு நிமிடம் அவள் சொன்னதன் அர்த்தம் புரியவில்லை.

அப்படி என்றால் அவளின் அந்த அவன் நான்தானா........... ஒன்றும் புரியவில்லை என்பது போல் அவளைப் பார்த்தேன்.. அவள் என்னைப் பார்த்து ஒரு கள்ளச் சிரிப்பை உதிர்த்தப்போது எல்லாம் புரிந்துபோனது. சரி உன் அப்பாவை விட்டு வருகிறாயே பரவாயில்லையா என்றேன். அது தன் சொந்த அப்பா இல்லை இறந்து போன தன் அம்மாவின் இரண்டாவது கணவன் என்றாள். இப்படி எல்லாம் யாருக்காவது நடக்குமா என்ன அந்த நொடிக்கு உலகின் ஆகப்பெரும் அதிர்ஸ்டசாலி

நான்தான் ......... நான் மட்டும்தான்.

அந்த நாட்கள் தான் எத்தனை சுகமானவை என்று ஒரு கணம் எண்ணிப் பார்க்கிறேன் மண்ணுக்குள்ளே வேரை போல கண்ணுக்குள்ளே அவள்தான் எப்போதும் இருந்தாள்.

அவள் அப்பாவின் ஆசைக்கிணங்க இரண்டு பேரும் ஊர்பேர் தெரியா தேசத்திற்கு பறந்து போனோம். கட்டுப்பாடுகள் ஏதும் இன்றி சிறகடித்துப் பறந்திடும் வெண்புறாக்கள் போல. அந்த அந்நிய தேசம் எங்களை அன்போடு அரவணைத்துக் கொண்டது. நாங்கள் வந்து சில வருடங்களிலேயே அவளின் அம்மாவின் இரண்டாவது கணவன் இறந்துபோனார்.

ஆனால் விசயம் தெரிந்த அவள் கொஞ்சமும் அழவேயில்லை. ஏன் எனக் கேட்டேன். என் கழுத்துக்கு கீழும் தொடையிலும் இருந்த தழும்புகள் எப்படி வந்தது எனக் கேட்டாய் அல்லவா என என்னைக் கேட்டாள்

ஆம் என்பதாய் தலையை ஆட்டினேன்

அந்த தழும்புகளுக்கு எல்லாம் காரணம் அந்தப் பாவிதான் என்றாள். அவள் அப்படி கூறிய போது என்விழிகளின் ஓரங்களில் கண்ணீர் வடிந்தது அதை தன் பிஞ்சுக் கைகளால் அவள் துடைத்து விட்டாள் அவளை அனைத்துக் கொண்டேன்.

அன்றிரவே முத்தங்கள் கொண்டு அந்த தழும்புகளுக்கு மருந்திட்டேன். அப்போது அவள் அழுதாள். நான் கண்ணீரைத் துடைக்க முற்பட்டபோது வேண்டாம் எனத் தடுத்தாள். தான் ஒருநாளும் மகிழ்ச்சியால் உண்டாகும் கண்ணீரை கண்டதில்லை அதை உணர்ந்த தில்லை என்றாள்.

நானும்தான் என்றேன்.

நாங்கள் சென்ற நாட்டில் கிடைத்த வேலையைச் செய்தோம். வருமானம் அவ்வளவு இல்லை. செலவுகளும் அதிகம் தான் என்றாலும் கூட எல்லா வற்றையும் சிரிப்போடு ஏற்றுக்கொண்டோம். கடைசி வரை எனக்கு அவள் அவளுக்கு நான். இதுதான் எங்கள் வாழ்க்கையாக இருந்தது.

இப்படியே வாழ்க்கை போய்க் கொண்டிருந்தபோதுதான் அவள் மெலியத் தொடங்கினாள். கொஞ்ச நஞ்சமல்ல நன்றாக மெலிந்தாள். அதேபோல அவளது கூந்தல் கொத்துக்கொத்தாக உதிரத் தொடங்கியது. வைத்தியரிடம் கூட்டிக்கொண்டு சென்றேன் வைத்தியரும் சொல்லிவிட்டார் வந்திருப்பது நாவினாலும் சொல்ல முடியா அந்த நோய் தானென்று.....................

துடித்துப் போனேன்.

அவள் வீட்டோடு படுத்தப் படுக்கையாகிப் போனாள். வாழும் நாள் எல்லாம் உதிரிகள் ஆகிற்று. என்னைப் போல துர்பாக்கியாசாலி யாரேனும் உள்ளர்களா என்ன.......கண்டிப்பாக இருக்க வாய்ப்பில்லை. இன்று காலை என்னையேப் பார்த்துக் கொண்டு இருந்தாள். பின் அருகே வரும்படி சொன்னாள் ஓடிச் சென்றேன்.

படுத்தபடியே என்னைக் கட்டி அணைத்தாள். நெற்றியிலும் கன்னத்திலும் மாறி மாறி முத்தமிட்டாள். அந்த முத்தத்தின் ஈரம் காயும் முன்னர் அவள் கண்கள் மூடிக் கொண்டன. அந்த மூடிய கண்களையே நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன் அவளது மூடிய கண்கள் என்னை மறுபடியும் பார்க்கக்கூடும் என்கிற ஏக்கத்தோடு.

**வாசிக்க வாசிக்க எழுதும் எண்ணம்**
**அதிகரித்துச் செல்லும்.**
**எழுத எழுத எழுத்தின்**
**தரம் அதிகரித்துச் செல்லும்**

# அந்த இரவு

தலைநகரில் குண்டு வெடித்ததால் நாட்டின் முக்கிய உயர்நிலை பிரமுகர் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டதாக அனைத்து வானொலிகளிலும் விசேடசெய்தி பரபரப்பாக ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது. ஊரெங்கும் அதே பேச்சு எப்போது வேண்டுமானாலும் அசம்பாவிதம் நடக்கக் கூடும் என்ற பீதி எல்லோர் மனதிலும் பயத் தைக் கூட்டியது. சிலர் மரத்தின் கீழ் பாதுகாப்பான பங்கர்களை தோண்டினார்கள். அந்திசாயும் வேளையில் சூரியன் அன்று வழமையான நேரத்திற்கு முன்னரே மறைந்து விட்டான் போல வானில் இரும்புப் பறவையாய் போர் விமானத்தின் இரைச்சலும் சிறிது நேரத்தில் பல்குழல் பீரங்கி சத்தங்களும் காதுகளைப் பதம்




பார்த்தன.

ஊர் முழுவதும் ஒரே இரைச்சல் மக்களின் கூச்சலும் வாகன இரைச்சலும் நிசப்தத்தை கொன்றுவிட்டன. பீரங்கிகளின் சத்தம் சற்று விட்டு விட்டுக் கேட்டன. பயம் விடாமல் பற்றிக் கொண்டது. இனி இங்கிருந்தால் உயிரைக் காப்பாற்றிக் கொள்வது கடினம் என்று ஊரோடு அயல் கிராமங்களை கடந்து எங்கே? அமைதி கிடைக்கும் எங்கே? பீரங்கி சத்தமில்லாமல் இருக்கும் என மக்கள் திரள் திரளாக புறப்பட்டுக் கொண்டிருந்தனர். கையிலே மிகவும் முக்கியமான தமது ஆவணங்களையும் ஆபரணங்களையும் எடுத்தவர்கள் சிலர். அதைக்கூட எடுக்காமல் உயிரை மட்டும் காத்துக்கொள்ள எத்தனித்து புறப்பட்டவர் சிலர். ஏழு மணி கடந்து போய்க்கொண்டிருந்த இரவின் பயணத்தில் இவர்களும் பயணம் செய்தார்கள். இந்த இரவு இவர்களின் வாழ்க்கையை வேறொரு திசையில் கொண்டு செல்ல காத்திருக்கின்றது. எங்கே? என்ற வினாவோடு விடையைத் தேடிக்கொண்டு தடுமாறிய பயணம்.

அந்தப் பயணத்தில் ஒரு பங்காளனாய் அந்த எட்டு வயதுச் சிறுவன் கூட்டத்தோடு கூட்டமாய் செல்கிறான். அவனுக்கு இப்பயணம் புதிது. போகும் வழியில் மின்சாரக் கம்பங்கள் உடைந்து விழுந்திருக்கின்றன. கால்நடைகள் இறந்து கிடந்தன. சில வீடுகள் இடிந்து சரிந்து இருக்கின்றன. அவனுக்கும் புதினமான ஓர் இரவு தான் இது. அச்சிறுவன் தனது தாயின் கையை பற்றிப் பிடித்துக் கொண்டு செல்கிறான். முன்னே

## சம்பூர் சமரன்

அவனது அப்பாவும் மூன்று சகோதரிகளும் சுட்டி தம்பியும் செல்கின்றனர்.

“எங்கம்மா? நம்ம போறம் எல்லா சனமும் ஏன் வேகமா ஓடுறாங்க” என அவன் கேட்க “குண்டு வெடிச்சதால நம்மட ஊருக்கு ஆட்லரி ஷெல் அடிக்கிறாங்க அதான் எல்லோரும் வேற ஊருக்கு போறாங்க” என்று அம்மா அவனிடம் சொல்லிக் கொண்டிருக்கும் போதே நிலைமை சற்று அவனுக்கு புரிகின்றது. இருந்தாலும் இந்தக் கூட்டத்திலே தனது பள்ளித் தோழர்களை தேடுகின்றான். ஒருவருமே அவன் கண்ணில் அகப்படவில்லை. ஊர்மக்களின் ஓலமும் பேச்சு சத்தங்களும் வேகமான நடையும் பல செய்திகளைப் பல கோணங்களில் கொண்டு சென்றன. ஒவ்வொருவரையும் பார்த்துக் கொண்டே சென்றதால் அம்மாவின் கையை நழுவவிட்டு சற்று பின்தங்கி விட்டான். “தம்பி செந்தூரா சனமெல்லாம்

போகுதுகள் குண்டு இதிலயும் விழுந்திடும் கெதியா ஓடி வா!'' ''ஐயோ இதிலயும் குண்டு விழுமா என்னையும் கூட்டிட்டுப் போங்க'' என்று செந்தூரன் அம்மாவின் கைகளை மீண்டும் பற்றிக்கொண்டான். நேரம் செல்லச் செல்ல வானிலே நட்சத்திரங்கள் மின்னத் தொடங்கின. சித்திரைமாத வெயில் பகலில் எரித்து இரவில் தென்றலாய் வீசியது. இப்போதைக்கு மக்களுக்கு ஆறுதல் அந்த தென்றல் மட்டுமே. இருந்தாலும் சனக் கூட்டம் தென்றலை கிழித்து உயிர்பிழைக்க ஓடிக் கொண்டிருந்தது. சனநெரிசலில் எதிர்பாராத விதத்தில் குண்டு விழுந்தால் இந்தக் கூட்டத்தில் எத்தனை உயிர்கள் போகுமோ? பயமும் பதட்டமும் உள்ளத்தில் நுழைந்து கண்களிலும் வார்த்தையிலும் வெளிபட்டது.பொதுவாக யுத்தம் ஒன்று நடக்கும்போது அதிகம் பாதிப்புறுவது மோதுகின்ற படைகள் அல்ல அப்பாவிகளான மக்களே. அவ்வாறான பாதிப்பு இப்போது நெருங்கி வந்துவிட்டது. மக்களிடையே சலசலப்பு ஏற்படும்போது அலறல் சத்தமும் அழுகையும் செந்தூரனின் மனதை நடுங்கச் செய்தன. செந்தூரனின் அப்பாவிடம் அருகே சென்று கொண்டிருந்த ஊர்க்காரர் ஒருவர் கதைக்கும்போது ஷெல் விழுந்து கொஞ்ச பேர் இறந்து சிலர் காயப்பட்டதாகவும் சொன்னார். ஆனால் ஆட்கள் யார் யாரென்று என்று தெரியவில்லை எனவும் சொன்னார். இதைக் கேட்ட மற்றவர்களுக்கு தூக்கிவாரிப்போட்டது. தங்களது உறவுக்காரர்கள் அதில் மாட்டிக் கொண்டார்களோ! என பயந்து புலம்பினார்கள். சிலர் வாய்விட்டு கதறி அழுதார்கள். ஒரு நாளும் இந்த நிலை நமது ஊருக்கு வரக்கூடாது என்று சொல்லி இறைவனை எண்ணி மனம் நொந்து திட்டினார்கள். செந்தூரன் அவற்றையெல்லாம் கேட்டவனாக நடந்து கொண்டிருந்தான். பலர் கால்களில் செருப்பு கூட அணியவில்லை. அந்த வீதி இப்போது போல தார் இடப்பட்ட வீதிகள் அல்ல. அது வெறும் கிரவல் மற்றும் கற்களால் அமைக்கப்பட்டு இருந்தன. வீதியிலுள்ள கற்கள் செந்தூரனின் பெருவிரலை பதம் பார்த்துவிட்டது. இரத்தம் வழிந்து காயத்தால் வலியைக் கொடுத்தது. அதைக் கூட பொருட்படுத்தாமல் அவனின் பயணம் அம்மாவின் கையோடு பற்றி பிடித்த வண்ணம் தொடர்ந்தது. பாதுகாப்பான இடத்திற்கு விடிவதற்குள் செல்ல வேண்டும் என்ற உத்வேகத்துடன் மக்கள் கற்கள் காலில் குத்திக் கிழிப்பதைக் கூட பாராமல் நடந்தனர். இந்த உத்வேகத்திற்கு முக்கிய காரணம் பொழுது விடிந்தால் கிபீர் என்ற பறவை குண்டு மழை பொழியும். அந்தக் கொடூரத்திலிருந்து தப்பிக்கவே முடியாது. இந்தப் போராட்ட நடைகள் அதில் இருந்து தப்பிக்கவே இடம் பெற்றன. செந்தூரன் மேலே வானத்தை பார்த்துக் கொண்டிருந்தான். என்ன! ஆச்சரியம் நிலவும் அவனுடன் வருகின்றது. நிலவுக்கும் யுத்தம் பிடிக்கவில்லை போல அதுதான் தன்னுடன் கூடவே வருகின்றதென எண்ணிக் கொண்டான்.

அந்த இரவில் முன்னொருபோதும் நடந்திடாத பாதையில் எத்தனை கால் தடங்கள். அந்த வீதியும் இப்போதுதான் நிறைந்த கால் தடங்களை கண்டிருக்கும். அவலத்தின் ஊர்வலம் அகதிகளை வரவேற்று ஆந்தையும் தவளையும் மாறி மாறி ஒலி எழுப்பிக் கொண்டிருந்தன. இது வரவேற்பா? இல்லை வரவிற்கும் அபாயத்தின் அறிவிப்பா? என்று எண்ணத்தோன்றும்.

நடுநிசி கடந்து நடை தொடர்ந்தது. நடக்க முடியாதவர்கள் வீதியோரம் கிடந்த கட்டைகள் மற்றும் பெரிய கற்களின் மீது அமர்ந்தார்கள். ஒரு நிமிடமோ அல்லது இரண்டு நிமிடமோ இளைப்பாறுவார்கள். இப்படியே கிட்டத்தட்ட 40 கிலோ மீட்டர் தூரம் வரை கடந்து விட்டார்கள். இப்போது வெடிச்சத்தங்கள் குறைவாகவே கேட்டது. தற்சமயம் இருக்கின்ற இடம் ஓரளவு பாதுகாப்பானது என்று சிலர் முடிவெடுத்து அங்குள்ள பொது இடங்களில் தங்குவதற்காக பயணத்தை நிறுத்தி வீதியோரம் காணப்பட்ட சனசமூக நிலையம் ஒன்றில் தஞ்சம் அடைந்தார்கள். மேலும் சிலர் இன்னும் பாதுகாப்பான இடம் வரவில்லை என்று கூறிக் கொண்டு பயணத்தைத் தொடர்ந்தார்கள். செந்தூரனின் அப்பா அங்குள்ள சனசமூக நிலையத்தில் தங்குவதாக முடிவெடுத்து அங்கேயே ஒரு இடத்தை துப்புரவு செய்து அதிலே கையில் கொண்டு வந்த பொருட்களை வைத்தார். குடும்பத்தார் எல்லோரும் அவ்விடத்தில் போய் அமர்ந்தார்கள். நித்திரை கலக்கமும் பயணக்களைப்பும் செந்தூரனின் சகோதரிகளையும் தம்பியையும் விடவில்லை. அமர்ந்த சில நொடிகளில் அம்மாவின் மடியில் தலை வைத்து உறங்கினார்கள். செந்தூரன் உறங்காமல் விழித்திருந்தான். அவனுக்கு தண்ணீர் தாகம் ஏற்படவே சனசமூக நிலைய வளவுக்குள் இருந்த புளிய மரத்தின் கீழ் உள்ள நீர்த்தாங்கியில் நீர் குடிக்கக் குழாயின் திருகுபிடியைப் பிடித்து திருப்பிக் கொண்டிருக்கும் போது எங்கிருந்தோ பாய்ந்து வந்த ஷெல் குண்டு சனசமூக நிலையத்தின் மேல் விழுந்து வெடித்தது. எதிர்பாராத அசம்பாவிதத்தைக் கண்ட அதிர்ச்சியில் செந்தூரன் மூர்ச்சையற்று கீழே விழுந்தான். அங்கே வெடித்து சிதறிய குண்டின் இரும்புப் பகுதி ஒன்று நேராக பறந்து வந்து அவனின் கழுத்தை முத்தமிட்டு வெளியேற இவ்வளவு நேரமும் செந்தூரனுடன் கூடவே வந்த சந்திரனும் வெளியேறியது. சூரியனும் அங்கே உதயமானது.

உருவகக்கதை

அஷ்வினி வையந்தி

# யார் பெரியவர்?





**ஒ**ரு மாணவனின் மேசையில் தொலைபேசியும், புத்தகமும் இருந்தது. தொலைபேசி புத்தகத்தை சண்டைக்கு அழைக்க விரும்பி "ஏ புத்தகமே என்ன உறங்குகின்றாயா?" எனக் கேட்டது. தொலைபேசியின் கர்வ மொழிகளைக் கேட்ட புத்தகம் நமக்கு எதற்கு வம்பு என்று நினைத்து கொண்டு அமைதியாக இருந்தது. புத்தகம் அமைதியாக இருப்பதைக் கண்ட தொலைபேசி கோபமடைந்து புத்தகத்தின் அமைதியை கெடுக்கும் பொருட்டு ஒலி எழுப்பிக்கொண்டே இருந்தது.பொறுமை இழந்த புத்தகம் "உனக்கு என்ன வேண்டும்? ஏன் என்னை தொல்லைபடுத்துகிறாய்?" எனக் கேட்டது. அதற்கு தொலைபேசி "கேள்வி கேட்டால் உன்னால் பதில் சொல்ல முடியாதா?" என்று தலைக்கனத்துடன் பேசியது.

**புத்தகம் :** எதற்காக என்னை சண்டைக்கு அழைக்கின்றாய்? உனக்கு என்ன வேண்டும்?

**தொலைபேசி**: நான் உன்னை சண்டைக்கு அழைக்கின்றேனா? இது என்ன வம்பு. உன்னுடன் பேச நினைத்தது என் தப்பு. உன்னை எல்லாம் ஒரு பொருளாக நினைத்து பேச நினைத்தேன். இது என் முட்டாள்தனம்.

**புத்தகம் :** வார்த்தைகளை அளந்து பேசு தொலை பேசியே...! எனக்கு என்ன குறை? எதனால் நான் சாதாரண பொருள் என நினைக்கின்றாய்? ஒவ்வொரு பொருளும் அதன் தகுதியை பொறுத்து முக்கியமான பொருள்தான். உன் கர்வத்தை கொஞ்சம் குறைத்துக் கொள்.

**தொலைபேசி :** ஆ...! இது என்ன முட்டாள்தனம். நீ எதனால் மனிதனுக்கு முக்கியம் பெறுகின்றாய் சொல் பார்ப்போம். உன்னுடைய ஆட்டம் குறைந்து வெகுநாள் ஆகிவிட்டது. இப்போது எங்குபார்த்தாலும் எனது ஆட்கள்தான் தெரியுமா உனக்கு? குட்டி குழந்தை முதல் தடியோடு திரியும் கிழவன் வரை எல்லோரும் எனக்கு அடிமை.

**புத்தகம் :** தொலைபேசியே..! இவ்வளவு கர்வம் உனக்கு ஆகாது. குட்டி குழந்தைகள், குமரிப்பெண்கள், வயோதிபர் என அனைவரும் உன்னை பயன்படுத்தினாலும் உன்னால் அவர்களுக்குக் கிடைக்கும் நன்மைகளை விடத் தீமைகள்தானே அதிகம். குட்டி குழந்தையை படிக்கவிடாமல் தடுக்கின்றாய். குமரிப் பெண்ணை காதலில் தள்ளுகின்றாய். கணவன் மனைவியை விவாகரத்து செய்ய வைக்கின்றாய். பெரியோரின் மனநிம்மதியைக் கெடுக்கின்றாய். இது போதாதென அநேக மக்களை தற்கொலைக்கு தூண்டுகின்றாய்.

**தொலைபேசி:** போதும் நிறுத்து உன்பேச்சை. என்னால்தான் இந்த உலகமே இயங்குகின்றது தெரியுமா உனக்கு? வீட்டு மின்கட்டணம் செலுத்துகின்றேன். அவசர நிலைமையின்போது துணை நிற்கின்றேன். மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு உதவுகின்றேன். இன்னும் எத்தனை எத்தனை நன்மைகள் என்னால் கிடைக்கின்றது தெரியுமா?

**புத்தகம்:** உன் பேச்சைக் கேட்டால் எனக்கு சிரிப்புத்தான் வருகின்றது. நீ இல்லாத காலத்தில் மனிதன் வீட்டிலே முடங்கிக் கிடக்காமல் தனது வேலைகளை நடந்து சென்றே செய்தான். அவசர வேளையில் பிறருக்குச் சென்று உதவினான். மாணவன் தனது தேடலினால் அறிவை வளர்த்துக் கொண்டான். உன்னால் இன்று உதவி செய்வதை நிறுத்திவிட்டு விபத்து என்றாலே முதலில் செல்பி எடுத்து முகநூலில் பதிவிடுகின்றான். தொலைபேசியில் குறிப்பு எடுக்கின்றேன் எனக் கூறிக் கொண்டு மாணவன் சமூக வலைத்தளங்களில் மூழ்கு கின்றான். என்னுடைய முக்கியத்துவம் குறித்து அறிஞர்கள் கூறும் கருத்தைக் கேள் தொலைபேசியே.மனிதனின் ஆகப்பெரிய கண்டுபிடிப்பு புத்தகம்-ஆல்பர்ட் ஐன்சுடீன். உடலுக்கு எப்படி உடற்பயிற்சியோ அதுபோல மனப்ப யிற்சி புத்தக வாசிப்பு - சிக்மண்ட் பிராய்டு உன்னை பயன்படுத்தும் மனிதர்களுக்கு என்னுடைய முக்கியத்துவம் தெரியாதுதான். நீ இருக்கும் வரையில் எனக்கு விடிவு என்பது இல்லைதான். எப்பொழுது மனிதன் உன்னை தொலைக்கின்றானோ அப்போது என்னைத் தேடுவான். இது உண்மை.

**தொலைபேசி:** போதும் போதும் உன் புகழ்ச்சி. நம்மைப் பயன்படுத்தும் மாணவன் இப்பொழுது வருவான். அவன் முதலில் யாரை எடுக்கின்றானோ, அவர் சொற்படி மற்றவர் நடக்க வேண்டும். அவர்தான் உயர்ந்தவர். சரியா? (புத்தகம் முகத்தில் வாட்டத்துடன் தலையை திருப்பி எதிர்பார்ப்புடன் காத்திருந்தது.)

புத்தக கண்காட்சி ஒன்றிற்கு சென்றிருந்த மாணவன் அங்கு "புத்தகத்தின் முக்கியத்துவம்" என்னும் தொனியில் உரையாற்றிய அறிஞர் ஒருவரின் கருத்தின்பால் ஈர்க்கப்பட்டான். வீட்டிற்கு வந்த மாணவன் தன் அறையுள் நுழைந்து புத்தகத்தை எடுத்து, முத்தமிட்டு அதை வாசிக்க தொடங்கினான். தொலைபேசி வெட்கத்தால் தலைகுனிந்தது.



# மஞ்சரி சிறுகதைகள்: ஒரு பார்வை

*மஞ்சரி 14*

பேராசிரியர் செ. யோகராசா

### மூளைச்சலவை - சூசைஎட்வேட்

முற்றிலும் வித்தியாசமான கரு. இக்காலத்து எழுத்தாளர் எவரும் கவனத்திற்குட்படுத்தப்படாத விடயம். அதாவது கத்தோலிக்க சமயத்தின் ஒரு பிரிவினரான பென்ரிகோஸ் பிரிவினரின் மதமாற்ற முயற்சியோடு தொடர்புபட்டு அவர்களது மதமாற்றச் செயன்முறையை கண்டனஞ் செய்வதாக அமைந்துள்ளது. கதையின் களம் முற்றிலும் வித்தியாசமானது. சைவசமயக் குடும்பமொன்றினைக் களமாகக் கொண்டுள்ளது. மேற்குறிப்பிட்ட மதப் பிரிவினர் மத அடிப்படைவாதிகளாகக் கருதப்படுபவர்கள். ( சினிமாப் பாரப்பது பாட்டுக் கேட்பது முதலானவற் றைக்கூடக் கண்டிப்பவர்கள்). கதை சொல்லியான குடும்பஸ்தர் ஒரு சைவசமயத்தவர். சைவக் கோயிலுக்கு வழ்படச் சென்றவேளை அக் கோயிலுக்கு வந்த பெண்ணைக் காதலித்து மணம் புரிந்தவர். நீண்டகால இனிய தாம்பத்ய வாழ்க்கையின் இடையே புகுந்த பெண்ணின் தாயார் மகளை பென்ரிகோஸ் மதத்திற்கு மாற்றிவிட்டார். நாளடைவில் கணவனை விட்டுப் பிரிந்து “ எனக்கு யேசு மட்டும்தான் வேணும். சைத்தான்களை தொழும் பாவியான உம்மோடிருந்து நான் நரகம் போக மாட்டேன்... எனக்குக் கணவனும் வேண்டாம் நரகமும் வேண்டாம் எனக்கு யேசு மட்டும் தான் வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுவிடுகிறாள். தனது மனைவி பென்ரிகோஸ் பிரிவினரால் மூளைச் சலவை செய்யப்பட்டுவிட்டதாகக் கருதும் கதை சொல்லியான கணவன் எனக்கு யேசுவும் வேணும் கணவனோடு வாழவும் வேண்டும் என்று சொல்லிவிட்டு வருவதானால் உன்னை மனைவியாக ஏற்கத் தயாராகவுள்ளேன் என்ற முடிவெடுத்து மூன்று மாதக் காலகெடு கொடுத்து காத்திருக்கின்றார். கதாசிரியர் கரு நோக்கி கதையை வளர்த்து நகர்த்தி முடித்திருப்பது பாராட்டிற்குரியதே. மதச் சார்பற்ற கதாசிரியரின் உள்ளமும் பென்ரிகோஸ் பிரிவினர் மீது நாகரிகமாக விமர்சனம் வைத்தமையும் பாராட்டுதற் குரியதே.

### கடற்பசி - ராஜேந்திரன் ஜீத் ஹம்க்ஷன்

தெளிவான முறையில் சிறுகதையின் எடுத்துரைப்பு முறை அமைவது அவசியமானது. மாறாக இச் சிறுகதை அதற்கு எதிரான முறையில் வெளிப்பட்டிருப்பது பெருங்குறைபாடாகிறது. பலமுறை வாசித்தும் கணேசனின் தற்கொலைக்கான காரணம் புலப்படவே யில்லை.

### அவன் - பால. சுகுமார்

விடுதலைப் போராட்ட இயக்கங்கள் செல்வாக்குடனிருந்த காலத்தில் விடுதலை இயக்கமொன்றின் போராளி ஒருவரின் நடத்தைபற்றி மனக்குமுறலுடன் நினைவு கூர்வதே இச் சிறுகதையாகும். கதைசொல்லியை அவமானப்படுத்தும் போராளிமேல் சினம் ஏற்படுதல் யதார்த்தமானதே. காலம் பல சென்றாலும் மறக்க முடியாததே. நீ சந்தித்தவர்களில் மிகக் கடுமையாக வெறுக்கும் ஒரு மனிதரைக் கூறு என்று கேட்டால் அந்தப் போராளியைக் கூறுவதும் நியாயமானதே. கதைசொல்லிக்கு ஏற்பட்ட அதே சினம் வாசகருக்கும் ஏற்படவேண்டுமல்லவா? அது கதையில் உருவாகவில்லை என்புதுதான் கவனத்திற்குரியது.

### மனதின் ஓசை - விமல்பரம்

மாமி மருமகள் குடும்ப உறவு வித்தியாசமான முறையில் கவனத்திற்குள்ளாகியுள்ளது. மருமகள் மாமிமேல் பாசங் கொணடிருக்கிறாள். அந்தப் பாசம் தாயின் நிலைக்குரியதாக அவளால் கருதப்படுகின்றது. கதாசிரியர் அதனை வெளிப்படுத்தும் முறையும் பிரச்சாரமாக அமையாது யதார்த்தமாக உள்ளது.

### வெற்றிலை - வி. மைக்கேல் கொலின்

மட்டக்களப்பு மாவட்டம் வெற்றிலை நடுகைக்குப் பேர் பெற்றிருப்பினும் சிறுகதை என்ற நிலையில் சண்முகம் சிவலிங்கம் எழுதிய குறிப்பிடத்தக்க சிறுகதை (வெற்றிலைப் பாத்தி சரிகிறது) ஒன்றைத் தவிர வேறு கதைகள் வந்ததில்லை. தற்போது இரண்டாவதாக இது வெளிவருகின்றமை கவனத்திற்குரியது. இக் கதையில் நீண்டகால ஊடல் ஏற்படுவதற்கு வெற்றிலை ஒரு காரணமாகிறது.

வெற்றிலைபற்றி மேலும் சில விபரங்கள் தந்திருப்பின் இவ் வெற்றிலை எழுத்துலகில் வாடாத வெற்றிலையாக இருந்திருக்கும். அவ்வாறான விபரிப்பு தகவல் திணிப்பாகவன்றி கதையுடன இயைந்தும் பயணிக்க

வேண்டும். எனினும் இச் சிறுகதையில் வெற்றிலையை முக்கிய பாத்திரமாக எழுதியிருப்பது பாராட்டிற்குரியதே.

## விதி மீறிய சதி - தியான்

வெளியுலகிற்குத் தெரியாமல் ( சில சந்தர்ப்பங்களில் தெரிந்தும்) பெண்களுக்கு நிகழ்கின்ற பேரவலங்களில் ஒன்றுபற்றி ( இளம் பெண்களின் குளியலறை நிகழ்வொன்றை கமரா ஊடாகப் படம் பிடித்தல்) பேசமுற்பட்டுள்ளது இச் சிறுகதை. உள்ளூர் நிகழ்வுகள் பற்றி இவ்வாறான சிறுகதைகள் வருவது அரிதான நிலையில் புகலிட நாட்டுச் சூழ்நிலையில் இக்கதை எழுதப்பட்டுள்ளது. இவ்விதத்தில் இக் கதாசிரியர் பாராட்டுக்குரியவரே. குறிப்பிட்ட நிகழ்வு தொடர்பாக உறவினருக்கு ஏற்படும் உளைச்சல் பெண்ணிற்கு ஏற்படும் வலிகள் பற்றி விபரித்திருப்பின் இச் சிறுகதை நன்றாக அமைந்திருக்கும். பேசு பொருளின் காரணம் தேவையற்ற விபரிப்புகள் உதாரணமாக வீதிவிபத்து சாரதியின் நடத்தை போன்றவற்றால் மற்றது கணவன் மனைவிக்கு இடையில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக பொலிஸ்வரல் போன்ற நிகழ்வுகளால் கதை மழுங்கியுள்ளது என்பதை குறிப்பிட்டாகவேண்டும்.

## விதியின் வழியில் - குரு சதாசிவம்

இன்றைய எரிகின்ற பிரச்சினைகளுள் ஒன்றான சூழல் மாசுபடல் பற்றி - ஓட்டுத் தொழிற்சாலையால் ஏற்படப்போகும் பாதிப்புகள் பற்றியதாக இச் சிறுகதை அமையப் போகின்றதென்ற ஆரம்ப எதிர்பார்ப்பு தொடர்ந்து வரும் சம்பவங்களால் நீர்த்துப்போய்விட்டது. அதாவது குடும்பக் கஸ்டங்கள் பற்றிய விபரிப்பும் சைக்கிளின் பயன்பாடு அதன் மீதான பற்று பற்றிய விபரிப்புகளும் தவிர்க்கப்பட்டிருக்கவேண்டும். ஓட்டுத் தொழிற்சாலையால் தொழிலாளிக்கு சிறுநீரகப் பாதிப்பு ஏற்படுவதாக இறுதியில் பெறப்படும் செய்தி மிக விரிவாக இடம் பெறுவதற்குப் பதிலாக சுருக்கமாக இடம் பெற்றிருப்பதும் தவறானது. நல்ல கரு சரியான முறையில் கையாளப்படவில்லை என்பதைக் குறிப்பிட்டுத்தானாக வேண்டும்.

## இனவாதம் - ந. ஜெயரூபலிங்கம்

புலம் பெயர்ந்த ஈழத் தமிழர் தம்மோடு கொண்டு சென்றவற்றிலொன்று சாதிமை. இவ் விடயம் புலம் பெயர் படைப்புகளில் கணிசமாக இடம் பெற்று வந்துள்ளது. இச் சிறுகதையில் வித்தியாசமான வேறொரு முறையில் பேசப்படுகிறது. சமகால அமெரிக்க இனவாதத்துடன் இணைத்து விமர்சிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது பாராட்டிற்குரியது.

## விக்ஷம் கக்கிய வீரியன் - ஏ.என். எம் நியாஸ்

மனிதர் பலரிடம் பழக்குப் பழி வாங்கும் சுபாவம் ஆழமாக வேரூன்றியுள்ளமை பல படைப்புகளில் பேசப்பட்டிருக்கிறது. இச் சிறுகதையில்வருகின்ற வீரியனிடம் பல்லாண்டு நிலைத்திருந்து வெளிப்பட்டிருக்கிறது. எனினும் களமும் கதைப்பின்னலும் பாராட்டும்படியாகவில்லை. தேவையற்ற தகவல்களும் இடம் பெறுகின்றன.

## சிறப்புச் சிறுகதை - ரஞ்சகுமார்

இவ்விதழில் இடம் பெற்றுள்ள மோகவாசல் இதிகாசக் கதையொன்றினை மறுவாசிப்பிற்குட்படுத்துகின்றது. தமிழ்ச் சிறுகதையை உலகத் தரத்திற்குக் கொண்டு சென்ற புதுமைப்பித்தனே இவ்வாறான சிறுகதை மாயையினை ஆரம்பித்து வைத்தவர். அவரது அகல்யை சாபவிமோசனம் ஆகிய இரு சிறுகதைகளும் அத்தகையனவே. சக்கரவர்த்தித் திருமகனாகிய இராமபிரான் கால்பட்டு அகல்யை மறுபடியும் உயிர்த்தெழுந்த இதிகாச சம்பவம் இவற்றில் கடுங் கண்டனத்திற்குள்ளாகியது. விசுவாமித்திரது தவத்தைக் கலைத்து தடம் மாற்றிய மேனகையின் செயலினை ரஞ்சகுமார் புதிய கோணத்திலே இச் சிறுகதையில் பார்த்துள்ளார். அது என்னதொன்பதை நிதானமாக வாசித்துப் புரிந்து கொள்க.

## பொதுக்குறிப்புகள்:

1. சிறுகதைகளின் தலைப்பு கருப்பொருளை முன் கூட்டியே வாசகருக்கு வெளிப்படுத்தக் கூடாது. விதி மீறிய சதி விதியின் வழியில் என்பன அவ்வாறமைந்திருப்பது கவனத்திற்குரியது.
2. சிறுகதை எழுதுவதற்கான புதிய ஊற்று ஒன்றினை இளம் எழுத்தாளர்களுக்கு மோகவாசல் அறிமுகம் செய்கிறது.
3. சிறுகதையாளர்கள் தொடர்ச்சியான வாசிப்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**வாசித்தல் என்பது எழுத்தாளனுக்கு மிகவும் அவசியம். வாசிக்க வாசிக்க எழுதவேண்டுமென்ற உத்வேகமும் செம்மையான எழுத்தும் தானாகவே உருவாகும்.**



# எழுத்தின் அனுபவங்கள்.....

நந்தினிசேவியர்



## சகாயபுத்திரன்

எமது கட்சி இரண்டாவது தடவையும் பிளவு பட்டு விட்டது. நான் சண்முகதாசன் அணியில் அப்போது நான் இருபாலையில் உள்ள ஒரு அரிசியாலையில் வேலையாக இருந்தேன்.

**1981.**

வீரி.இளங்கோவன் ஒரு காலாண்டு சஞ்சிகையை வெளியிட இருந்தார். அதன் பெயர் "வாகை". வாகை இதழ் *1981* இல் யாழ்ப்பாணத்தில் இருந்து காலாண்டு இதழாக நாவலர் வீதி, நாவாந்துறையில் இருந்து வெளியானது. இதன் ஆசிரியராக எழுத்தாளர் வி.ரி இளங்கோவன் திகழ்ந்தார். வாகை இலக்கிய வட்டத்தின் வெளியீடாக இந்த இதழ் வெளியானது. வாகை இலக்கிய வட்டத்தின் உறுப்பினர்களாக இருந்த கி.பவனானந்தன், ஞானரதன், சில்லையூர் செல்வராசன் இந்த இதழின் வருகையின் பின் நின்றார்கள். கலை இலக்கியம் சார்ந்த கவிதைகள், சிறுகதைகள், கட்டு ரைகள், விமர்சனங்கள் , அரசியல் சார்ந்த விடயங்களை தாங்கி இந்த இதழ் வெளியானது. சண்முகதாசனின் கொள்கைகளை அடிப்படையாக கொண்டு இந்த இதழ் வெளியாகியது. இந்த இதழின் வருகைக்கு வி.ரி. இளங்கோவனுடன் நானும் துணைநின்றேன். அவ்விதழில் "நினைவுகூர்வோம்." "மு.மேத்தாவுக்கு." என நந்தினி சேவியர் எனும் பெயரில் இரு கவிதைகளை எழுதினேன். "மத்தியானத்திற்கு சற்றுப் பின்பாக..." எனும் கதையை சகாயபுத்திரன் எனும் புனை பெயரில் எழுதினேன். எனது முதலாவது சிறுகதைத் தொகுதியில் அக்கதை இருக்கிறது. இளங்கோவனின் வற்புறுத்தல் காரணமாக அக்கதை எழுதப்பட்டது. ஏலவே நான் குறிப்பிட்டது போல் பெரும்பாலான என் கதைகள் பிறர் கேட்டுக்கொண்டமைக்காக எழுதப்பட்டவையே. இக்கதையும் அத்தகையதே. பின்னர் " சகாயபுத்திரன் " எனும் புனைபெயரை எங்கும் நான் பயன்படுத்தவில்லை.

## ஆண்டவருடைய சித்தம்


நான் மில்லில் வேலைசெய்த அக்காலத்தில் ஒரு நாள் அ.யேசுராசா என்னைச் சந்தித்தார். சில எழுத்தாளர்களின் சிறுகதைகளை அலையில் பிரசுரித்து அக்கதை பற்றி இன்னொருவரது விமர்சனத்தையும் வெளியிட இருப்பதாகவும், அதற்காக எனது கதை ஒன்றையும் கேட்டிருந்தார். என் கதையை விமர்சிக்க இருந்தவர் நிர்மலா ( ராசசிங்கம்) . நான் ".ஆண்டவருடைய சித்தம்" எனும் கதையை எழுதிக் கொடுத்தேன். அக்கதை யேசுராசாவுக்கும், நிர்மலாவுக்கும் பிடிக்கவில்லை. அதனால் அதை எனக்கு திருப்பித்தந்ததாக நினைவு. நான் மில்லில் இருந்த காலத்தில் பல நண்பர்கள் என்னைச் சந்திக்க வருவார்கள். அப்படி ஒருநாள் ".புதுசு " நண்பர்கள் சிலர் ( அ.ரவி உட்பட) என்னிடம் வந்திருந்தார்கள். புதுசு இதழுக்கு ஒரு கதை தருமாறு கேட்டார்கள். அவர்களிடம் அக்கதையை கொடுத்தேன். அக் கதையை அவர்களிடம் கொடுத்த சம்பவமும் மறந்தே போய்விட்டேன்.

வழமைபோல் மில் வேலையைத்துறந்து மட்டக்களப்பு இறால் கொம்பனியில் இணைந்து அங்கிருந்து மெசஞ்சர் வீதி தலைமைக் காரியாலயத்திற்கு மாற்ற லாகி வந்த ஒருநாள்.

**1982.**

தபாலில் என் முகவரிக்கு ஒரு சஞ்சிகை வந்திருந்தது. புதுசு. பிரித்துப் பார்த்தேன் அதில் என்கதை. "ஆண்டவருடைய சித்தம்" பிடிக்கவில்லை என நிராகரிக்கப்பட்ட கதை. அக்கதையை எனது முதலாவது சிறுகதைத் தொகுதியில் சேர்த்துள்ளேன். ரசனை ஆளுக்காள் வேறுபடும். அதற்கு என்கதைகள் பலவற்றை உதாரணம் காட்ட முடியும். அதில் இக்கதையும் ஒன்று.!

(இன்னும் வரும்...)


SKM BOOKS
COMING SOON!
WWW.SKM-BOOKS.COM
BUY & SELL YOUR BOOKS ONLINE



# Luxmi Education Centre

Contact us now to secure your spot and give your child the best chance to succeed and secure their future

## WHAT WE OFFER

YEARS1-3
MATHS, ENGLISH
YEARS4-5(11PLUS)
MATHS, ENGLISH, VERBAL REASONING, NON VERBAL REASONING
YEAR6
MATHS, ENGLISH, SCIENCE
YEAR7-9
MATHS, ENGLISH, PHYSICS, CHEMISTRY, BIOLOGY
YEAR10-13
MATHS, PHYSICS, CHEMISTRY, BIOLOGY

## WHY CHOOSE US?

### BESPOKE RESOURCES

We use our own teaching material created in house for Maths, English and Science





### EXPERIENCED TEACHERS

All our tutors are experienced undergraduates or currently teaching in schools

### INDIVIDUAL ATTENTION

We ensure students are taught all topics in its entirety. We ensure no one is left with a doubt.



Contact Details:

Tel: 0208 573 0368
Mob: 07852810285
website@Leconline.co.uk
www.leconline.co.uk